# ஆடரங்கு

க.நா.சுப்ரமண்யம்



OFFICE OF THE REGISTRAR OF

# ஆடரங்கு

— சிறுகதைத் தொகுதி —

★

க. நா. சுப்ரமண்யம்

கலைமகள் காரியாலயம்

சென்னை - 4

உரிமை பதிவு]

[விலை ரூ. 1-8-0

முதற்பதிப்பு, மே, 1955

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1.

# முகவுரை

## இந்தக் கதைகள்

இவை பல்வேறு சமயங்களில் பல பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக எழுதப்பட்ட கதைகள். ஆகவே இந்தத் தொகுதி, தற்காலத் தமிழ் இலக்கியத்திலே ஒரு மைல்கல் என்று சொல்ல விரும்பவில்லை நான். இதில் இரண்டொரு கதைகளாவது என் வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் பிடிக்கும் என்கிற நம்பிக்கையிலேதான் இவற்றைத் தொகுத்து இப்போது வெளியிடுகிறேன். அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்ட இந்தக் கதைகளை ஆதரித்த பத்திரிகை ஆசியர்களுக்கும், அதிபர்களுக்கும், தொகுதியாக இவற்றை வெளியிடுகிற 'கலைமகள்' ஆசிரியருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கதைக்கு விஷயம் என்று வாழ்க்கையில் கண்ணில் படுவதையெல்லாம், காதால் கேட்பதையெல்லாந்தான் நான் எடுத்துக் கையாளுவது வழக்கம். அப்படிக் கையாளுகிற காரணத்தால் சில சமயம் நெருங்கிய நண்பர்களுக்குங்கூட என்னிடம் ஆயாசம் ஏற்பட்டு விடுகிறது என்பதை நான் அறிவேன். இருந்தும் இந்தக் கதா பாத்திரங்கள் ஆயாசப்பட வேண்டிய அவசியமில்லை—ஏனென்றால் சாதாரணமாகக் கதைகளில் வரும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் யாரும் உண்மையென்று நம்பிவிடுவது கிடையாது. அப்படி நம்புகிறவர்களுக்குங்கூட இந்தப் பாத்திரம் உண்மையில் வாழ்க்கையில் இன்னார்தான் என்று தெரிவதற்குச் சந்தர்ப்பமே வாய்க்காது—அதாவது கதாபாத்திரமே போய்ச் சொல்லிக்கொண்டாலொழிய. அது எப்படியானாலும் கதைக்கு விஷயமாக ஏற்றுக் கொள்ளுகிற சம்பவங்களையும் பாத்திரங்களையுங்கூட நான் கேலி செய்யவோ கிண்டல் செய்யவோ ஏற்கவில்லை—கதைக்கு விஷயமாக ஏற்கிறேனே தவிர வேறு அல்ல.

இந்தத் தொகுதியில் உள்ள கதைகளில் வருகிற என் நண்பர்களுக்கு இதை நான் சமர்ப்பிக்கிறேன்.

ஏப்ரல், 12, '55,
தாம்பரம்.

**க. நா. சுப்ரமண்யம்**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | முகவுரை | ... | iii |
| 1. | ஆடரங்கு | ... | 1 |
| 2. | சிட்டுக்குருவி | ... | 8 |
| 3. | மனமாற்றம் | ... | 19 |
| 4. | இலக்கியாசிரியனின் மனைவி | ... | 28 |
| 5. | கிரகப் பிரவேசம் | ... | 39 |
| 6. | பேரன்பு | ... | 48 |
| 7. | தூக்கம் | ... | 57 |
| 8. | கிறுக்கெழுத்து | ... | 66 |
| 9. | "நீங்க தூங்கறச்சேதான்" | ... | 75 |
| 10. | படித்த பெண் | ... | 81 |
| 11. | மகாத்தியாகம் | ... | 92 |
| 12. | இரண்டு தோழர்கள் | ... | 103 |
| 13. | சோதனை | ... | 111 |
| 14. | சரோஜாவின் சவுரி | ... | 120 |
| 15. | வாழ்க்கைப் பந்தயத்தில் | ... | 129 |
| 16. | பாத ஸரம் | ... | 137 |

# ஆடரங்கு

கூட்டம் ஒன்றும் பிரமாதமாக இல்லை. ஏதோ பொறுக்கி எடுத்த சிலருக்கு, உபயோகப்படக் கூடியவர்களுக்கு, கலை உலகிலே முக்கியஸ்தர்களுக்கு மட்டுந்தான் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. பத்துப் பதினைந்து பெண்மணிகள், ஏழெட்டுக் குழந்தைகள், இருபது ஆண்கள்—இவ்வளவுதான். பெண்களில் சிலரையும் குழந்தைகளையும் தவிர மற்றவர்களெல்லாம் கலை உலகில் பெரிய ஸ்தானம் வகிப்பவர்கள்; அந்தச் சில பெண்களும் குழந்தைகளுங்கூடப் பெரியவர்களின் வீட்டுக் குழந்தைகளும் பெண்களுந்தான். லக்ஷ்மி பாக்கியசாலி. அவளுடைய அரங்கேற்றம் நல்ல சுபசூசகங்களுடன் 'கலைத் தூண்'களின் நிழலில் நடக்க இருந்தது.

லக்ஷ்மி உள்ளே வரும்போதே, "கீழே விரித்திருக்கும் விரிப்பு வழுக்காதே?" என்று சபையில் யாரோ கேட்டதும், "வழுக்காது; அநேகமாக வழுக்காது" என்று யாரோ சொன்னதும் அவள் காதில் விழுந்தன. குனிந்து பார்த்தாள். ரப்பரைப்போல ஏதோ ஒரு விரிப்பானது கீழே விரிக்கப்பட்டிருந்தது. அது அறை அகலம் முழுவதுங்கூட இல்லை. நடு அறையில், நாலடி அகலத்துக்குத்தான் இருந்தது. முழுவதும் அந்த விரிப்பிலேயே நாட்டியம் ஆடிவிட முடியாது. தரையிலும் கால் படத்தான் படும். விரிப்பு வழுக்காது போலத்தான் இருந்தது. ஆனால் காலைத் தரையிலிருந்து விரிப்புக்கு மாற்றும் போது அதிக ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். தடுக்கி விட்டால் ஆபத்து....ஆமாம், ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்! அதென்ன, நாட்டிய மேடையா, எல்லாச் சௌகரியங்களும் இருக்க? சாதாரண வீட்டில் ஒரு கூடம்; இந்தச் சந்தர்ப்பத்துக்கு நாட்டிய அரங்காக, லக்ஷ்மியின் அரங்கேற்றத்

துக்காக மாறியிருந்தது; அவ்வளவுதானே! எவ்வளவு அசௌகரியமிருந்தாலும் கூட்டம் அதிகம் இல்லாததுபற்றி லக்ஷ்மிக்குப் பரமதிருப்தி. என்ன இருந்தாலும் அவள் சிறுமிதானே? தைரியம் கொஞ்சம் இருந்தது; வாஸ்தவந்தான். இன்று இங்கே சபையில் கூடியிருந்தவர்கள் பெரியவர்கள், கலையைப்பற்றி முற்றும் அறிந்தவர்கள்; வயதானவர்கள்; தன் நாட்டியத்தில் எவ்வளவு குற்றம் குறையிருந்தாலும் சரியாகப் பயிற்சி பெருதவள், சிறுமி என்பதற்காகத் தன்னை மன்னித்துவிடக்கூடியவர்கள் என்று எண்ணினுள் லக்ஷ்மி. அது அவளுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளித்தது.

எதிரே சுவரில் பெரிய சரஸ்வதி படம் ஒன்று மாட்டியிருந்தது. அதை நோக்கிக் கையைக் கூப்பி வணங்கினுள் லக்ஷ்மி. அப்புறம் மெல்லெனச் சதங்கை ஒலிக்க, இரண்டடி முன்னுல் எடுத்துவைத்துச் சபையை நோக்கித் தாழ்ந்து கைகூப்பி வணங்கினுள். அதே விநாடி மத்தளம் முழங்கிற்று. ‘வயலின்’ இசைத்தது. நட்டுவனும் கலந்து பாட ஆரம்பித்துவிட்டார். நாட்டியத்தை ஆரம்பிக்க, லக்ஷ்மியின் கையும் காலும் துடித்தன. சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் தாய்மட்டும் ஏன் முகத்தை அப்படிச் சிணுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்? ‘எதையாவது மறந்துவிட்டேனே?’ என்று எண்ணினுள் லக்ஷ்மி. சதங்கை, கச்சை, டோலக்கு, பொட்டு, தலையணி எல்லாம் சரியாகத்தானே இருந்தன? இதென்ன இப்படி ஆரம்பிக்கும் போதே தடங்கலாகச் சகுனம்? அவள் தாய் ஏதோ சைகை காட்டினுள்...என்ன? என்ன அது? மறுபடியும் வணங்கச் சொன்னுள். யாரை? லக்ஷ்மி சபையைப் பார்த்தாள். ஓ!

லக்ஷ்மி சதங்கை ஒலிக்க லாகவமாக நடந்துபோய்ச் சபையில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த மிஸ் ஊர்வசியை வணங்கினுள். என்ன பைத்தியக்காரத்தனம்! அவள் தாய் எவ்வளவோ தரம் சொல்லியிருந்தும் ஏன் இது இப்படிக் கடைசி விநாடியில் மறந்துவிட்டது! அசட்டுத்தனம்! அவள் தாய் படித்துப் படித்துச் சொன்னுளே! கடைசி நிமிஷத்தில்— நல்ல வேளை, கடைசி நிமிஷத்திலாவது ஞாபகம் வந்ததே!

அந்தமட்டும் சரிதான். மிஸ் ஊர்வசி எவ்வளவு அபூர்வமான, வசீகரமான பாவத்துடன் அவளுடைய வணக்கத்தை ஏற்றுக் கொண்டாள்? அவளுடைய முகத்திலும் கையிலும் சட்டென்று ஒரு விநாடியில் தோன்றி மறைந்த அசைவுதான் எவ்வளவு அதிசயமானது! உண்மையிலேயே மிஸ் ஊர்வசியை நாட்டியக் கலையின் சிகரத்தை அடைந்தவள் என்று சொல்லுவதில் தவறில்லை என்பது அந்த ஓர் அசைவிலேயே லக்ஷ்மிக்குத் தெரிந்துவிட்டதுபோல் இருந்தது. இப்படி யோசித்துக்கொண்டே லக்ஷ்மி மெதுவாகத் தன்னுடைய ஆரம்பஸ்தானத்துக்கு நகர்ந்தாள். மிஸ் ஊர்வசியைப் போலத் தானும் ஆகிவிடவேண்டுமென்று அவள் உள்ளத்திலே தோன்றிற்று. இன்று ஆரம்பம், முன்னேக்கி நாட்டியமாடி நகர.

இதோ நாட்டியம் ஆரம்பித்துவிட்டது. முதலில் மூன்று பாட்டுக்களுக்கு அபிநயம் பிடிப்பது ரொம்பக் கஷ்டமான காரியம். லக்ஷ்மியின் மனம் அபிநயத்தைத் தவிர வேறு எதிலும் ஓடவில்லை. வரிசைக் கிரமமாகப் பாட்டனுர் சொல்லித் தந்திருந்தபடி, தாளம், பாவம் தவறி, விட்டுப் போகாமல் நாட்டியமாடினுள். நாலாவதாகப் பாடப்பட்டது ஓர் எளிய பதம். அது லக்ஷ்மிக்கு மிகவும் பழக்கமானது; நாட்டியமாட ஆரம்பித்த நாட்களிலிருந்து அவளுக்குப் பாடமானது. அதற்கு இசைந்து ஆடிக்கொண்டிருக்கும்போது லக்ஷ்மி மறுபடியும் நாட்டியக் கலையையும், மிஸ் ஊர்வசியையும், சபையையும் கவனிக்க ஆரம்பித்தாள்.

மிஸ் ஊர்வசி முகத்தில் சலனமே இல்லாமல் உட்கார்ந்திருந்தாள். தன் நாட்டியம் அவளுக்குப் பிடித்திருந்ததா இல்லையா என்று அவள் முகத்திலிருந்து லக்ஷ்மியால் அநுமானிக்க முடியவில்லை. சில சமயம் ஊர்வசியின் கண்கள் சபையில் அவள் அருகில் உட்கார்ந்திருந்த ஒருவருடைய கண்களை நாடித் தேடுவதை லக்ஷ்மி கவனித்தாள். அந்த மனிதர் ஊர்வசியுடன் வந்தவர் என்று லக்ஷ்மிக்கு ஞாபகம் வந்தது. அவர் அபிப்பிராயத்தை அறிய விரும்பியவள் போல ஊர்வசி ஏன் அப்படி அடிக்கடி அவர் முகத்தை நோக்கினுள்?

ஊர்வசியையும்விட அவர் நாட்டியக் கலையைப்பற்றி அதிகம் அறிந்தவராயிருப்பாரோ? அல்லது, ஒரு நிர்மானத்துக்கு வரு முன் அவர் அபிப்பிராயத்தையும் கலந்து அறிந்துகொள்வது நல்லது என்று ஊர்வசி எண்ணினளோ? தன் நாட்டியம், தன் வயதுக்கு எவ்வளவுதான் உயர்ந்ததாளுலும், ஊர்வசிக்கு உயர்ந்ததாகப் படாது என்பது லக்ஷ்மிக்கும் தெரியாத விஷய மல்ல. 'ஏதோ குற்றங் குறைகள் அதிகம் இல்லை, முன்னேற இடமிருக்கிறது' என்று ஊர்வசி சொல்லிவிட்டால் போதும் என்று எண்ணினள் லக்ஷ்மி.

அந்தப் பதம் முடிந்துவிட்டது. அடுத்த பதம் கொஞ்சம் கடினமானது. அது நடக்கும்போது லக்ஷ்மியால் வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியாது. அப்படியும் அவள் வெகு சிரமப் பட்டு ஊர்வசியும், அவளுடன் வந்த நண்பரும் தன் நாட்டி யத்தைப்பற்றி என்ன நினைக்கிருர்கள் என்பதை அவர்க ளுடைய முகபாவத்திலிருந்து அறிந்துகொள்ள முயன்ருள். சபையில் இரண்டொருவர் இடையிடையே, "சபாஷ்!" என்ருர்கள். ஆனல் அவர்களுடைய சபாஷால் மட்டும் லக்ஷ்மி திருப்தி அடைவதாக இல்லை. ஊர்வசியும், மற்றவரும் .....? ஆனல், நிச்சலனமாயிருந்த அவர் முகத்தில் திடீரென்று ஒரு புன்னகை தோன்றிற்று. அந்தப் புன்னகையின் நிழல்போல ஊர்வசியின் முகத்திலும் லேசான ஒரு புன்னகை படர்ந்தது. அது கேலிப் புன்னகைதான்; சந்தேகமில்லை என்று லக்ஷ்மிக்குத் தோன்றிற்று. அவள் லயம் தவறிவிட்டது. அதைக் கவனித்த அவள் தாயும் பாட்டனும் விதவிதமான சைகைகள் காட்டி ஞர்கள்; முகத்தைச் சிணுங்கிக்கொண்டார்கள். லக்ஷ்மி ஏதோ சமாளித்துக்கொண்டு, ஊர்வசியையோ அவள் நண் பரையோ கவனிப்பதில்லை என்ற திடசங்கல்பத்துடன் நாட்டிய மாடினள். ஆனல் அவளையும் அறியாமலே அவள் கண்கள் அந்தப் பக்கந்தான் சென்றன. அவர்கள் இருவர் முகத்திலும் ஏளனப் புன்னகை இன்னமும் படர்ந்திருந்தது.

அதற்கடுத்த நாட்டியம் துவக்கும்போது லக்ஷ்மியின் மனத்தில் ஒரு கசப்புத் தோன்றிவிட்டது. பத்து வருஷங்கள்

வெற்றியில்லாமல் பொதுஜனத்தின் கீழ்த்தரமான அபிருசிகளுடன் போர்தொடுத்து 'ரிடையராகி' விட்ட கலைஞன் மனத்தில்கூட அவ்வளவு கசப்பு ஒருங்கே திரண்டு காணப்படுமா என்பது சந்தேகந்தான். குழந்தைதான் எனினும், வயது அதிகம் ஆகாதவள்தான் எனினும், கலையிலே உள்ள ஒரு தேர்ச்சியினாலும் பழக்கத்தினாலும் அவள் உள்ளமும் உணர்ச்சிகளும் கனிந்து நிறைந்திருந்தன. அவள் வயதுச் சிறுமிகளுக்கும் சாதாரணமாக எட்டாத சிந்தனைகளும் ஆர்வங்களும் உணர்ச்சிகளும் அவளுக்கு எட்டின. அவள் ஊர்வசியையும் சபையில் மற்றவர்களையும் மறந்துவிட்டுப் பாட்டைத் தானும் சொல்லிக்கொண்டு, பாவத்தில் ஈடுபட்டு நாட்டியம் ஆட ஆரம்பித்தாள். தன் நாட்டியம் எப்படியிருக்கும் என்றோ, அதைப்பற்றி மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்றோ, இந்த ஒரு பாட்டின் போது அவள் கவலைப்படவேயில்லை. அது முடிந்தவுடன் சபையில் ஒரே ஒரு குரல் மட்டும் வெகு உத்ஸாகத்துடன் 'சபாஷ்' என்றது. யார் அப்படிச் சொன்னவர் என்று லக்ஷ்மி கண்ணைத் திறந்து பார்த்தாள்; இரண்டாவது வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன். அவனுக்கு நாட்டியத்தைப்பற்றி ஏதாவது தெரியுமோ, தெரியாதோ; சிறுமிக்கு உத்ஸாக மூட்டவேண்டியது அவசியம் என்று தெரிந்திருந்தது. இதைப் பற்றி லக்ஷ்மி யோசித்து முடிக்குமுன் சபையில் சிலர் கை தட்டினார்கள். வேறு சிலர் லேசாகக் கையைத் தட்ட முயன்றார்கள், அதிகச் சப்தம் செய்யாமல். தன்னையும் அறியாமலே லக்ஷ்மியின் கண்கள் ஊர்வசியின் பக்கம் திரும்பின. அவள் முகத்தில் சிறிதும் சலனமில்லாமலே, ஓர் உத்ஸாகமும் இல்லாமலே உட்கார்ந்திருந்தாள். அவள் நண்பரும் அப்படியே, மரக்கட்டைபோல, அவள் நாட்டியத்தையும் அவள் உடலையும் அதற்கப்பாலும் ஊடுருவிப் பார்ப்பவர்போல உட்கார்ந்திருந்தார்.

அடுத்த நாட்டியம் ஆரம்பமாயிற்று. அதுவும் சற்றுக் கடினமானதுதான்; எனினும் லக்ஷ்மி தன் கவனம் முழுவதையும் நாட்டியத்திலே செலுத்தாமல் சபையிலும் செலுத்தி ஆடி

ருள். சபையில் ஒருவர் சொல்லிக்கொண் டிருந்தது அவள் காதில் விழுந்தது: "பாவம்! சின்னப் பெண். ரொம்பக் கஷ்டப்படுத்தக்கூடாது." அப்படிச் சொன்னவர் யார் என்று ஊர்வசி திரும்பிப் பார்த்ததை லக்ஷ்மி கவனித்தாள். முந்தி இருந்த கசப்பு மறுபடியும் அவள் மனத்தில் தோன்றிவிட்டது. ஊர்வசி என்ன அவ்வளவு பிரமாதமாகவா நாட்டியமாடுகிறாள்? அதெல்லாம் ஒன்றுமில்லை. பெரிய இடம்; எது செய்தாலும் புகழுவதற்கென்றே ஒரு கோஷ்டி சதா உடன் இருக்கும். 'ஊர்வசியின் வெற்றியும் புகழும் கலையின் வெற்றியல்ல; அந்தஸ்தின் வெற்றி; அவ்வளவுதான்' என்று பிறர் சொல்லக் கேட்டது லக்ஷ்மிக்கு ஞாபகம் வந்தது. அது உண்மையாகத்தான் இருக்கும்போல் இருக்கிறது என்று தோன்றியது லக்ஷ்மிக்கு. கலையில் படிப்படியாக அடி எடுத்துவைத்துச் சிரமப்பட்டு முன்னேறியிருந்தால் லக்ஷ்மியின் கஷ்டங்களைக் கண்டு அவளுக்கு அநுதாபம் பிறந்திராதா? முகத்தில் இப்படி எவ்வித அசைவும் இல்லாமலே உட்கார்ந்திருக்க முடியுமா? ஆனால் தானும் நாட்டியத்தில் முழு மனத்தையும் செலுத்தாமல் ஊர்வசியைப்பற்றியே நினைத்துக்கொண் டிருந்தால், நாட்டியம் சரியாக வருமா? அது தன்மேல் பிசகுதானே என்று எண்ணினாள் லக்ஷ்மி.

ஏதோ சிந்தனையாக, அடி எடுத்துவைத்துப் பாவத்தை ஓட்டி வேகமாக நகரும்போது கால் விரிப்பில் தட்டிவிட்டது. தடுமாறிக் கீழே விழுந்துவிட்டாள். சபையில் 'த்லொ த்லொ' என்று அநுதாபக் குரல்கள் கேட்டன. ஓரிரண்டு குழந்தைகள் சிரித்தன. மற்றவர்கள் தன்னைத் தூக்கிவிட வருமுன், லக்ஷ்மி சமாளித்துக்கொண்டு தானே எழுந்துவிட்டாள். அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. உதட்டைப் பிதுக்கி அழுகை வராமல் அடக்கிக்கொள்ள வெகு சிரமப்பட்டாள். என்ன அவமானம் இது, அரங்கேற்றத்திலேயே! ஆடையைச் சரிப்படுத்திக்கொள்ள அவள் ஆடரங்கிலிருந்து உள்ளே ஒரே எட்டில் தாவிப் போய்விட்டாள். அவள் காதில் ஏதோ முரசடிப்பதுபோல் இருந்தது; சபையில் பேசிக்கொள்ளப்பட்டது

ஒன்றும் அவள் காதில் விழவில்லை. அவள் கண்கள் தெளிவாக ஏதையும் காணவில்லை. அவள் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது.

அப்போது சபையில் ஒரு தாடி மீசையுள்ள பெரியவர், பெரிய சரிகை அங்கவஸ்திரத்துடன் எழுந்து நின்று பரதநாட்டியத்தைப்பற்றிப் பொதுவாகவும், அன்று ஆடிய பெண்ணைப்பற்றியும், அவளைப் பயிற்றுவித்த நட்டுவனாரைப் பற்றியும் புகழ்ந்தும் சில வார்த்தைகள் பேசினார். இதில் பாதிக்குமேல் லக்ஷ்மியின் காதில் விழவில்லை; காதில் விழுந்ததையும் அவள் சரியாக அர்த்தம் பண்ணிக்கொள்ளவில்லை. ஆடை அணிகளைத் திருத்திக்கொண்டு, மறுபடியும் அரங்குக்குள் பிரவேசிக்கத் தயாராக நின்றாள். அப்பொழுதும் அவள் கண்கள் ஊர்வசியையே நாடின.

என்ன ஆச்சரியம்! பெரியவர் பேசிவிட்டு உட்கார்ந்ததும் ஊர்வசி எழுந்து நின்று, சாவதானமாக, லக்ஷ்மியின் நாட்டியத்தைப்பற்றிப் பேசினாள். நாலைந்து நிமிஷங்களே பேசினாள்; வழக்கமான, சம்பிரதாயமான, சில வார்த்தைகளே சொன்னாள். ஆனால் அந்த வார்த்தைகளில் தனிப்பட்ட ஓர் அர்த்தம் தொனித்தது, லக்ஷ்மியின் காதில். ஊர்வசி முதலில் எழுந்து எதுவும் பேசுவதாக இல்லை என்றும், ஆனால் சிறுமியாகிய அவள் கால் தடுக்கி விழுந்ததும் அநுதாபம் பிறந்து சிறுமியாதலால் உத்சாகமூட்ட இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டும் என்று சொல்லுகிறாள் என்றும் லக்ஷ்மிக்குத் தோன்றிற்று. முதலில் ஊர்வசியிடம் அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால் ஊர்வசி சிறுமியை ஆசீர்வதித்துத் தன் பேச்சை முடித்தபோது அவள் மனத்தில் இருந்த கோபம் மறைந்துவிட்டது. ஊர்வசி உட்கார்ந்ததும் உள்ளம் நிறைந்த ஒரு கனிவுடன் அரங்குக்குள் பிரவேசித்து லக்ஷ்மி சபையையும் ஊர்வசியையும் மறுபடியும் ஒரு தரம் வணங்கிவிட்டு ஆட ஆரம்பித்தாள்.

இந்தத் தடவை அவள் மனத்தில் கலையைத் தவிர வேறு எந்த ஞாபகமும் இல்லை.

---

# சிட்டுக் குருவி

வீட்டுக் கொல்லையில் அவரைப் பந்தலின் கீழே சிட்டுக் குருவி கூடு கட்டியிருந்தது. அதை முதல் முதலில் கண்டுபிடித்தவள் சரோஜாதான்.

"ராஜி, ராஜி! பாரேன், வந்து பாரேன்!" என்று கத்திக் கொண்டே அவள் சமையலறைக்குள் ஓடி வந்தாள்.

சாதம் வடிக்க உட்கார்ந்த ராஜி, எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டுக் கொல்லைப்பக்கம் ஓடிவிட்டாள். விஷயத்தைக் கேட்டு, ராஜியினுடைய அவசரத்தையும் கண்ட நான், "சரிதான்! இன்று குழைந்துபோன சாதந்தான் கிடைக்கும்" என்றேன். ராஜி நான் சொன்னதைக் காதில் வாங்காமலே போய்விட்டாள். ஆனால் நானும் அடுத்த நிமிஷமே அவர்கள் இருவரையும் பின்பற்றிக் கொல்லைப் பக்கம் போனேன். "உஸ், உஸ்!" என்று அக்காவும் தங்கையும் சைகை காட்ட, நானும் சிட்டுக்குருவியின் கூட்டுக்குள் எட்டிப் பார்த்தேன். அதில், மூன்று சிறிய முட்டைகள் இருந்தன.

அன்று எனக்கு உண்மையிலேயே குழைந்துபோன சாதந்தான் கிடைத்தது. ஆனால் சாதம் குழைந்து போயிருந்தது என்பதைக் கவனிக்க எனக்கு அவகாசமில்லை. ரெயிலுக்கு நேரமாகிவிட்டது. அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டு எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டு வாசல் பக்கம் போனபோது, சரோஜா சொன்னாள் :

"கும்பகோணத்தில் நல்லதாக மலிவாய்க் கிடைக்குமாமே, சின்னதா, அழகா, எனக்கு ஒரு குருவிக்கூண்டு வாங்கிண்டு வாங்கோ!"

" இரண்டாக வாங்கிண்டு வாங்கோ! நானும் ஒரு குருவிக் குஞ்சைப் பிடித்து வளர்க்கப் போறேன் " என்றாள் ராஜி.

" ஆகா! முட்டைதான் மூன்றிருக்கிறதே! எனக்கு மட்டும் ஒரு குருவி வேண்டாமோ!" என்று நான் பதில் அளித்து விட்டு வண்டியில் ஏறிக்கொண்டேன். இப்படியாக அந்தச் சிட்டுக் குருவிகள் பிறக்கு முன்னரே, அவற்றின் விதி எங்களால் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

கும்பகோணத்தில் எனக்கு இரண்டொரு நாள்தான் அலுவல் இருந்தது. முடித்துக்கொண்டு திரும்பியபோது, நான் குருவிக் கூண்டு வாங்கி வரவில்லை. அப்படி நான் வாங்காமல் வந்ததற்கு இரண்டொரு காரணங்கள் உண்டு. முக்கியமாக, சரோஜாவும் ராஜியும் இந்த இரண்டொரு தினங்களில் குருவிகளை மறந்தே போயிருப்பார்கள்; குருவிக் குஞ்சுகள் தப்பியிருக்கும் என்று நான் எண்ணினேன். அப்படி அவர்கள் மறக்காமல் இருப்பார்களேயானால், பார்த்துக்கொள்ளலாம். குருவிக் கூண்டு வாங்குவதுபற்றி எனக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. கூடியவரையில் சண்டை சச்சரவு இல்லாமலே வாழ்க்கை நடத்திவிட வேண்டுமென்பதுதான் என் லட்சியம். அதனால் நான் அநேகமாக எல்லா விஷயங்களிலுமே 'அவள்' சொல்லுகிறபடியே நடந்துவிட முயலுவேன். சிட்டுக்குருவி விஷயத்தில் மட்டும் விதி விலக்குச் செய்வானேன்!

நான் குருவிக் கூண்டு வாங்கி வராததுபற்றிச் சரோஜாவுக்கும் ராஜிக்கும் வருத்தந்தான். ஆனால் சிட்டுக் குருவியின் கூட்டில் முட்டைகள் அப்படியே இருந்தன.

" குஞ்சு பொரிக்க இன்னும் இரண்டு வாரம் ஆகும் போல் இருக்கிறது!" என்றாள் ராஜி.

" அதற்கப்புறம் இரண்டு வாரமாகும், அவைகளுக்கு இறக்கை முளைத்துப் பறக்க ஆரம்பிக்க!" என்றேன் நான்.

"குருவிக் கூண்டு வாங்கித் தராசமே இருக்கத்தானே இது வழி!" என்று அழாத குறையாக முகத்தைக் கோணிக்கொண்டாள் சரோஜா.

"அசடே! வாங்கித் தரேன்னால் நான் வாங்கித் தருவேன். பாரேன்!... தவிரவும் புதுக் குருவிக் குஞ்சைப் புதுக்கூண்டிலே அடைச்சாத்தான் நன்னாருக்கும். இப்பவே கூண்டை வாங்கினால் அது பழசாகப் போயிடுமே!" என்று சரோஜாவுக்கு நான் சமாதானம் சொன்னேன்.

பொறுப்பற்ற சுதந்திரமான எனது வாழ்க்கையிலே எனக்கு உள்ளவை இரண்டே இரண்டு கடமைகள்தாம். முதல் கடமை: ராஜியின் கோபத்துக்கு ஆளாகாமல் தப்புவது; இரண்டாவது, சரோஜாவின் கோப தாபங்களைச் சமாதானம் செய்வது. இந்த இரண்டு கடமைகளை மட்டும் இவ்வுலகில் நான் சரிவரச் செய்து விட்டேனானால், மோட்சம் கிட்டிவிடும் என்று எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

அதற்கப்புறம் பல நாட்கள் சென்றன. 'காலண்டர்' கணக்குப்படி ஒரு வாரந்தான்; ஆனால் பேச்சு வார்த்தைகள் கணக்கில் பார்த்தால் ஒரு யுகம்போலத் தோன்றுகிறது.

சதா சிட்டுக் குருவி, அல்லது அது சம்பந்தமான பேச்சுத்தான் வீட்டில். குருவிகளின் பழக்க வழக்கங்கள், பூனை நாய் போன்றவைகளின் பழக்க வழக்கங்கள் இவைகளை எல்லாம் எங்களுக்குத் தெரிந்தவரையில் ஒத்திட்டுப் பார்த்துக்கொண்டோம். அடுத்த அகத்து வேலைக்காரன் இப்படிச் சொன்னான் என்பாள் ராஜி. அடுத்த அகத்து மாமி அப்படிச் சொன்னாள் என்பாள் சரோஜா. நான் இருவருக்கும் சமாதானமாகப் பதில் சொல்லப் பார்ப்பேன்; சில சமயம் அது இருவரையும் இன்னும் அதிகமாகத் தூண்டிவிடும். அந்த ஒரு வாரத்தில் நான் பறவையினங்களின் வாழ்க்கை ரகசியங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் அறிந்துகொண்டேன். நான் கற்றுக்கொண்ட விஷயங்களுக்கு எனக்கு ஏதாவது ஒரு சர்வகலாசாலை 'டாக்டர்' பட்டம் கொடுக்க-

வேண்டும்; அது சர்வகலாசாலையார் தாமாகவே தெரிந்து கொண்டு மனமுவந்து செய்ய வேண்டியது; நான் சொல்லிக் கொள்ளக் கூடாதுதான்; எனினும் சொல்லி வைத்தேன். ஆனால், ஒன்று: நான் அப்படி அறிந்துகொண்டதில் எதெது சரி தப்பு என்று அப்பொழுதோ பின்னரோ விசாரிக்கப் புகவில்லை. அது வியர்த்தமான ஆராய்ச்சியாகி விடும். தவிரவும், சிறந்த சர்வகலாசாலைகளில்தான் ஆகட்டும்: மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டது சரியா தப்பா என்று யோசிக்கத் துணிகிறதுண்டா என்ன?

மூன்று முட்டைகளிலிருந்து இரண்டே இரண்டு குஞ்சுகள் தாம் வெளிவந்தன. மூன்றாவது முட்டை என்ன ஆயிற்று என்று எங்களில் யாருக்கும் - ராஜிக்கும் கூடத்தான் - தெரியவில்லை.

"நாய் பூனை மாதிரி தன் குஞ்சுகளில் ஒன்றைச் சிட்டுக் குருவியும் தின்றிருக்கும்" என்றாள் ராஜி.

"நாய் பூனை மாதிரி சிட்டுக்குருவி மாமிசபட்சிணி இல்லையே" என்று நான் ஆட்சேபித்தேன்.

"அப்படியானால் மூன்றாவது குஞ்சு என்ன ஆச்சு? நீங்களே சொல்லுங்களேன்" என்று ராஜி சவால் விடுத்தாள்.

நான் மௌனம் சாதித்தேன்.

கொல்லையில் கூட்டில் குருவிக் குஞ்சுகள் பிறந்த அன்றே சரோஜா ஊருக்குப் போக நேர்ந்துவிட்டது. அவள் பாட்டி பட்டணத்திலிருந்து வந்திருந்தாள். காவேரிக் கரையில் ஒரு கிராமத்துக்குப் போக இருந்தாள். பேத்தியையும் அழைத்துக் கொண்டு போய்த் தன்னுடன் சில நாள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

சரோஜா முதலில் கிளம்ப மறுத்தாள். "என் சிட்டுக் குருவியை விட்டுட்டு நான் வரமாட்டேன் போ" என்றாள். "நான் வர மாட்டேன். நீ இப்பவே ஸ்டேஷனுக்குப் போய் விடு, பாட்டி" என்று பாட்டியை விரட்டினாள்.

ஆனால் பாட்டிக்குத் தெரியாதா குழந்தையின் மனம்? முறுக்குப் பண்ணித் தருகிறேன் என்றாள்; பச்சைப் பாவாடை தைத்துத் தருகிறேன் என்றாள்; கை நிறையக் காலணாக் காசு தருகிறேன் என்றாள்; காவேரியிலே ஸ்நானம் பண்ணத் தினம் அழைத்துக்கொண்டு போறேன் என்றாள். சரோஜா குதித்துக் கொண்டு பாட்டியுடன் கிளம்பத் தயாராகிவிட்டாள்!

அப்படியும், அவள் குருவிக் குஞ்சை மறந்துவிடவில்லை. "ராஜி, குருவிக் குஞ்சை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கோ. நான் சீக்கிரம் வந்துடறேன்" என்றாள். "எனக்காக இரண்டு குஞ்சையும் கூண்டிலே பிடிச்சுவையுங்கோ. நான் வந்து கேட்பேன்" என்றாள் என்னிடம்.

நான், "ஆகட்டும்" என்றேன்.

மறுபடியும் ஒருதரம், ரெயிலில் ஏறி உட்கார்ந்தபின் அவள் எனக்கு அதை ஞாபகப்படுத்தினாள்.

சரோஜா ஊருக்குப் போனதும், வீடு வெறிச்சென்றிருந்தது. குருவிக் குஞ்சுகளை அடிக்கடி போய்ப் பார்த்துக் கொண்டு ராஜி ஏதோ கொஞ்சம் ஆறுதல் அடைந்துகொண்டிருந்தாள்.

குருவிக் குஞ்சுகளுக்கு மூக்கைத் தவிர வேறு ஒன்றும் சரியாக உருவடையாத பருவத்தில் ஒரு நாள், நாங்கள் இருவரும் குருவிக் கூட்டண்டை அவரைப் பந்தலின் கீழ் நின்றுகொண்டிருந்தோம். முருங்கை மரக் கிளையில் உட்கார்ந்து ஒரு குருவி உரக்க, அசாதாரணமான குரலில் 'டிக் டிக்' என்று சப்தம் செய்துகொண்டிருந்தது.

ராஜி சொன்னாள்: "பார்த்தேளா அதிசயத்தை! நாம் கூட்டண்டை வரோம்னு தாய்க் குருவி, 'ஆபத்து, ஆபத்து' என்று கத்தித் தன் குஞ்சுகளை எச்சரிக்கிறது."

நான், "உம்" என்றேன்.

"நான் சொன்னு உங்களுக்கு நம்பிக்கையாக இல்லையோ? பின் ஏன் இந்தக் குருவி வழக்கம்போலக் கிறீச்சிடாமல் வேறு

தினுசாகக் கிறீச்சிடுகிறதாம் ?" என்ருள் ராஜி. "ஆமாம், ஆமாம் ! நீ சொல்றபடிதான் இருக்கவேண்டும்" என்று சொல்லி விவாதத்திலிருந்து தப்பப் பார்த்தேன்.

"இன்னும் சந்தேகமாயிருந்தால் நான் சொல்லுகிறபடி செய்து பாருங்கள் ! இரண்டு பேரும் இப்போ உள்ளே போவோம் ; உடனே அந்தக் குருவி கிறீச்சிடுவதை நிறுத்திவிடுகிறதா இல்லையா பாருங்கள் !" என்ருள் ராஜி.

"மறுபடியும் திரும்பி வந்தோமாளுல் மறுபடியும் கிறீச்சிட ஆரம்பித்துவிடும்" என்றேன்.

"வந்தேளா வழிக்கு ?"

"வழிக்கு வராமல் எங்கே போவதாம் ?" என்று பதிலளித்தேன் நான். "சரி, சாப்பிடலாமே ! நாழியாகல்லையா ?"

ராஜிக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது : "ஐயையோ ! அடுப்பிலே ஈயச் சொம்பைப் போட்டுட்டு வந்துட்டேனே ! என்ன ஆச்சோ !" என்று சொல்லிக்கொண்டே ராஜி இரண்டெட்டில் என்னைத் தாண்டிக்கொண்டு சமையலறைக்குள் ஓடிளுள்.

"போயிடுத்தா ஈயச்சொம்பு ! என்ன அஜாக்கிரதை ?" என்று எக்களிப்புடன் கூறிக்கொண்டே நானும் அவளைப் பின் தொடர்ந்தேன். "இந்தக் காலத்திலே ஈயம் சேர் என்ன விலை விற்கிறது ! இவ்வளவு அஜாக்கிரதையாக, அழகாகக் குடித்தனம் நடத்திளுல்..."

நான் என்னுடைய வாக்கியத்தை முடிக்கவில்லை. கையில் உருகாத ஈயச் செம்புடன் ராஜி நின்றுகொண்டிருந்தாள். எரிந்துகொண்டிருந்த அடுப்பின்மேல் வைக்காமல் அவள் சிட்டுக்குருவி பார்க்கப் போன அவசரத்தில் கீழேயே வைத்து விட்டுப் போய்விட்டாள். ஈயச் செம்பு தப்பிற்று. எனக்கு வருத்தந்தான். அவசரப்பட்டுச் சொன்ன சொற்களை வாபஸ் வாங்கிக்கொண்டுதான் ஆகவேண்டும் !

"நான் குடித்தனம் பண்ற அழகுக்கு என்ன வந்தது இப்போ! அப்படிச் சொம்பு போனுத்தான் என்ன ? எங்கம்மா வாங்கிக் கொடுத்ததுதானே! நீங்க சம்பாதிச்சு வாங்கிக் கொடுத்தது என்ன கெட்டுப்போச்சு?" என்ருள். இது பாய்ச்சலின் முன் பதுங்கல்.

"வாசல்லே யாரோ கூப்பிடருப்போல இருக்கே" என்று நான் அங்கிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றேன்.

"நீங்க சம்பாதிச்சுப் போடற அழகுக்கு நான் குடித்தனம் பண்ற அழகு ஒண்ணும் கெட்டுப் போயிடல்லே. ஆறு மாசத்துக்கொருதரம் ஏதாவதொரு பத்திரிகையிலே ஒரு கதையை எழுதிவிட்டு, வருஷத்தில் மற்ற ஆறு மாசமும் அதைப்பற்றிப் பெருமை அடிச்சுக்கொண்டிருந்தால் சரியாப் போச்சா! கதைக்கு வள்ளிசா ஒன்பதே முக்காலே அரைக்கால் ரூபா வந்துவிடும். அதை வச்சிண்டு ஜோரா ஒரு வருஷம் குடித்தனம் பண்ணவேண்டியதுதான், குடித்தனம்! என் குடித்தனம் கெட்டுப் போச்சாமே!...ம்..."

நான் பேச்சை ஹாஸ்ய பாவத்துக்குத் திருப்பப் பார்த்தேன்: "கதைக்குச் சம்மானம் மணியார்டராக அனுப்பினுல்தான் ஒன்பதே முக்காலே அரைக்கால் வரும். இப்போ செக்கான்னு எல்லாரும் அனுப்பிச்சுவிடருன்; கால் ரூபாய் கமிஷன் போயிடறது" என்று சொல்லிச் சிரித்தேன்.

"சிரிப்பு வேறு வேண்டிக் கிடக்கில்லேயா ?" என்று ராஜி சினந்துகொண்டாள். "அதுக்குள்ளேயே இலையை எடுத்துப் போட்டுண்டு என் பிராணனே வாங்காதேங்கோ. ஒரு மணி நேரம் கழித்து வாங்கோ. ரசம் இனிமேல்தான் ஆகணும்... நான் குடித்தனம் பண்ற அழகு பிடிக்கல்லேயாமே!"

"ரசம் வைக்க ஒரு மணி நேரமா ஆகும்?" என்று அசட்டுத்தனமாக, என்ன கேட்கிருேம் என்று பசிவேகத்தில் அறியாமல் கேட்டுவிட்டேன்.

அவ்வளவுதான். என் குற்றங் குறைகள் எல்லாம், சரமாரியாக என் மேல் விசிறப்பட்டன. நல்ல வேளேயாக அந்தச்

சமயம் வெளிக்கதவை யாரோ உண்மையிலேயே தட்டவே நான் ஒருவழியாக, செத்தேன் பிழைத்தேன் என்று ஓடி விட்டேன்.

வந்தவருடன் பேசி, அவரை அனுப்பிவிட்டு நான் அரை மணி நேரங் கழித்துத்தான் வீட்டுக்குள் போனேன். சமைய லறையில் இலை போட்டிருந்தது. வழக்கத்துக்கு விரோதமாக ராஜி கோபத்திலும் மௌனமாகவே இருந்தாள். ஆனால், இந்தக் கோபமும் மௌனமும் அன்று அதிக நேரம் நீடிக்க வில்லை. சிட்டுக் குருவியைப் பற்றிய ஏதோ ஒரு உற்சாகமான வார்த்தையில் கரைந்து போய்விட்டது.

நாளடைவில் கூட்டிலிருந்த குருவிக் குஞ்சுகள் வளர்ந்து பெரியவையாயின. நாங்கள் கூட்டண்டை போனால் அவை முதலில் வாயைப் பிளக்கும் - தாய்க் குருவிதான் உணவு கொண்டுவந்திருக்கிறது என்ற எண்ணத்தினால். அவற்றின் வாயுந்தான் எவ்வளவு அழகாயிருந்தது! பிறகு கடுகு போன்ற சிறு கண்களை மிரள மிரள விழித்துப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் பயத்துடன் கிறீச்சிடும். அந்தக் குரலில்தான் என்ன பயம் தொனித்தது!

"ஐயையோ! தாய்க் குருவி இரை கொண்டுவந்திருக்கு; உள்ளே வந்துடுங்கோ. அது இரை கொடுத்துட்டுப் போயி டட்டும். இல்லாவிட்டால், இரையில்லாமல் குருவிக்குஞ்சு செத்துப் போய்விடும். பாவம் நமக்குத்தான்" என்று ராஜி என்னை அவசரப்படுத்துவாள். ஆனால் நான் உள்ளே போய்ப் பத்து நிமிஷமான பிறகுதான் அவள் வருவாள்.

தன் குஞ்சுகளுக்கு உணவு கொண்டுவந்து தருவது தாய்க் குருவியா, தகப்பன் குருவியா என்று எங்களுக்குள் ஒரு நாள் விவாதம் மூண்டது; இன்னமும் அது முடியவில்லை. சிட்டுக் குருவிக் குஞ்சுகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக வளர்ந்து பெரியவை யாகிக்கொண்டிருந்தன. (நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக என்கிற தொடர், பழங்கதையின் எந்தக் கதா நாயக நாயகியையும்விட, என்

கதா நாயகர்களுக்கு ரொம்பவும் பொருந்தும் என்று நான் எண்ணுகிறேன்.) சிறகுகள் வளர்ந்து பறக்கத் துடித்துக் கொண்டிருந்தன.

அச்சமயம் ஒரு நாள் இரவு காற்றும் மழையும் பலமாக அடித்தது. இரவு மூன்று மணி இருக்கும். ஒரு பலத்த இடிச் சத்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்ட ராஜி, விலகியிருந்த போர்வையை இழுத்து மூடியபடியே சொன்னாள்: "பாவம்! கொல்லையிலே கூட்டில் குருவிக் குஞ்சுகள் இந்தக் காத்திலும் மழையிலும் குளிரிலும் என்ன பாடு படுகின்றனவோ!"

"நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?" என்றேன் நான், என் போர்வைக்குள்ளிருந்து.

ராஜிக்குத் தூக்கக் கலக்கம். பதில் சொல்லவில்லை.

மறுநாள் காலையில் எழுந்து கொல்லைப் பக்கம் போய்ப் பார்த்தபோது, குருவியின் கூடு மழையில் நைந்து அறுந்து கீழே கிடந்தது - திட்டுத் திட்டாகத் தேங்கியிருந்த ஜலத்தில், மூச்சுக் காட்டாமல் கூட்டில் குஞ்சுகள் ஒண்டிக்கொண் டிருந்தன.

கூட்டோடு அவற்றைத் தூக்கிக் கொண்டுவந்து கொல்லைத் தாழ்வாரத்தில் உலர்ந்திருந்த இடத்தில் போட்டேன்.

"ஐயோ பாவமே!" என்று அளவுகடந்த அநுதாபத் துடன் சொல்லிக்கொண்டு வந்து ராஜி தாழ்வாரத்தில் உட் கார்ந்துகொண்டாள். அவளால் அந்தக் குஞ்சுகளை விட்டுக் கண்ணை எடுக்கவே முடியவில்லை.

வெயில் காய ஆரம்பித்ததும் வழக்கம்போலத் தாய்க் குருவி தன் குஞ்சுகளைத் தேடிக்கொண்டு வந்தது போலும். வழக்கமான இடத்தில் கூட்டையோ குஞ்சுகளையோ காணா மல், அது உடனே கூச்சலிட ஆரம்பித்து விட்டது. அந்தச் சிறு குருவியின் குரல் தெருவை நிரப்பி அதற்கப்பாலும் பரவி நின்றது. ஊர் முழுவதுமே, ஏன் உலகம் முழுவதுமே, அதற் கப்பாலுமே, அந்தத் தாயின் சோகக் குரல் எட்டும் என்று எனக்குத் தோன்றிற்று.

"பாவம்! குருவி வந்து தன் குஞ்சுகளைக் காணோமே என்று தவிக்கிறது!" என்றாள் ராஜி. அவள் குரலிலும் அளவு கடந்த பரிதாபம் தொனித்தது.

சிறிது நேரத்தில் அந்தக் குருவியின் கூக்குரலை அவளால் சகிக்க முடியாமல் போய்விட்டது. "அது நம்மை வாயாரச் சபிக்கிறது. பாருங்களேன். பேசாமல் அந்தக் குஞ்சுகளைக் கொல்லையிலேயே கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துவிடுங்கள். குருவியின் பாடு; குஞ்சுகளின் பாடு. கொண்டுபோய் விட்டுவிடுங்கள்" என்றாள் ராஜி.

குருவிக் குஞ்சுகளைத் தான் எடுத்து வளர்க்கவேண்டுமென்ற ஆசை, குருவியின் சோகக் குரலைக் கேட்டபின் ராஜிக்கு அற்றுப் போய்விட்டது. எனக்கு அப்படியில்லை. சரோஜாவுக்காக அவற்றை வளர்க்கலாமே என்று தோன்றிற்று.

குருவிக் குஞ்சுகளின் மேல் ஒரு கூடையைக் கவிழ்த்து மூடி வைத்தேன்.

ராஜி இன்னமும் லேசாக ஆட்சேபங்கள் சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

"சிட்டுக் குருவி வளர்ப்பது ரொம்பவும் சிரமம் என்று அடுத்தாத்துப் பாட்டி சொல்லுகிறாள்" என்றாள் ஒருதரம்; "பூனை எல்லாக் குருவிகளையுமே தின்று விடுமாமே!" என்றாள். "குருவியைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்தால் அடுத்த ஜன்மத்தில் சிறைவாசம் செய்ய நேருமாம்" என்றாள் ஒருதரம்.

ஆனால் நான் அதையெல்லாம் காதில் வாங்காமல் சிட்டுக் குருவிகளை அன்று முழுவதும் சிறைப்படுத்தியே வைத்திருந்தேன். பெரிய குருவி அன்று பகல் பூராவும், விட்டு விட்டு, தன் அபயக் குரலை எழுப்பிக்கொண்டேயிருந்தது. முன்னே எங்கள் தோட்டத்தில் பார்த்தேயிராத பல ஜாதிக் குருவிகள் அதற்கு ஒத்துப்பாட வந்து சேர்ந்துகொண்டன. கொல்லைப்

பக்கம் போனால் 'கச முச' வென்று பல பறவைகளின் குரல்கள் ஒலித்தன.

"அவை யெல்லாமாகச் சேர்ந்துகொண்டு நம்மைச் சபிக்கின்றன" என்றாள் ராஜி.

இரவு, குருவிக் குஞ்சுகள் பூனை கையில் அகப்படாமல் இருக்க வேண்டுமே என்று என் படுக்கைக்கருகில் தலைமாட்டிலேயே வைத்துக்கொண்டு படுத்திருந்தேன். ராஜிக்கோ எனக்கோ சரியான தூக்கமில்லை. அவள் ஏதோ சொப்பனங் கண்டு பிதற்றிக்கொண்டிருந்தாள். கண்ணை மூடினால் போதும்: காதிலே லட்சக் கணக்கான பறவைகளின் குரல் ஒலிக்கத் தொடங்கிற்று.

விடியற் காலையிலேயே எழுந்து குருவிக் குஞ்சுகளை அவரைப் பந்தலின் கீழே கொண்டுபோய் விட்டுவிட்டேன். அவை சோர்ந்து போனவைபோல் ஒன்றோடொன்று ஒண்டிக் கொண்டு கிடந்தன. நான் அவற்றை விட்டு நகர்ந்தவுடன் முருங்கை மரக் கிளையிலிருந்து தாய்க் குருவி பறந்து வந்து அவற்றண்டை உட்கார்ந்துகொண்டது. குஞ்சுகளும் சோர்வு நீங்கி மெல்லிய குரலில் கிறீச்சிடலாயின.

தூங்கி எழுந்து வந்த ராஜியிடம் நான் குருவிகளை விட்டு விட்ட விஷயத்தைச் சொன்னேன்.

"விட்டு விட்டேளா?" என்று சற்று வருத்தத்துடனேயே அவள் கேட்டாள்.

அரை மணி நேரம் கழித்துக் கொல்லைப் பக்கம் போய்ப் பார்த்தபோது, குருவியையோ குருவிக் குஞ்சுகளையோ அங்கே காணவில்லை.

"அதோ அடுத்தாத்துப் பாகல் பந்தலிலே இருக்கு, நம் மாத்துக் குருவி" என்று ராஜி காட்டினாள்.

"நம்மாத்துக் குருவியா?" என்று சொல்லிச் சிரித்தேன் நான்.

என் மனத்திலிருந்து ஒரு பெரிய பாரம் நீங்கியதுபோல் இருந்தது. ஆனால் ராஜிக்கு மட்டும் வருத்தந்தான்

# மனமாற்றம்

"டாக்டர் இன்று வருவதாகச் சொன்னாரே, வந்தாரோ?"

"வந்தார், லக்ஷ்மி."

"உம்......லேடி டாக்டரைப் பார்த்தாராமா ?"

"பார்த்தாராம்."

"அவள் என்ன சொன்னாளாம் ?"

"ஆப்பரேஷன் பண்ணத்தான் வேணும் என்றாளாம்."

"ம்......ம்......"

"இல்லாவிட்டால் பிரயோசனப்படாது என்றாளாம்."

"ம்......ம்......"

"டாக்டரும் ஆப்பரேஷன் பண்ணிக்கொள்வதுதான் நல்லது என்று அபிப்பிராயப்படுகிறார்."

"ம்......ம்......"

"ஒன்றும் பயமில்லை என்றார். ரொம்பச் சின்ன ஆப்பரேஷன்தானும்."

"பயமில்லேன்னாலும்...........குளோரபாரம் கொடுத்துத் தானே ஆப்பரேஷன் பண்ணுவா ?"

"ஆமாம். என்றாலும், பெரிய டாக்டர் தேவையில்லை என்றார். தானே குளோரபாரம் கொடுப்பதாயும், லேடி டாக்டர் ஆப்பரேஷனைச் செய்துவிடலாம் என்றும் நம்ப டாக்டர் சொன்னார்."

" அது சரி. வலிக்காதா ? "

" வலிக்கும், வலிக்கும். ஆனால் வலி தெரியாதிருக்கத் தான்...... "

" ஆப்பரேஷன் சரியாகப் போயிடும். குளோரபார மயக்கத்திலிருந்து விழிச்சுக்கணுமே : விழிச்சுக்காமலே இருந்து விட்டேனானால்...... ! "

" போடி அசடே, அதெல்லாம் ஒன்றும் பயமில்லை."

" உங்களுக்கென்ன ? நான் போனா இன்னொருத்தியைப் பாத்து ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணிக்கொண்டு விடுவீர்கள் ! "

" அசடு ! "

" நான் சொல்றபடி எல்லாந்தான் கேட்கறதே இல்லை என்று ஆய்விட்டது. இன்னொருத்தி வந்தா அவள் சொல்றபடி கேட்டு ஆடுவீர்கள். என்னிடம் இப்போ போடற 'டார்லிங்'கை எல்லாம் அப்புறம் அவளிடம் போட ஆரம்பித்துவிடுவீர்கள்."

" இதென்ன, இப்படி அசடாப் பேசறே ? "

" நான் போனப்புறம் லக்ஷ்மி என்று ஒருத்தி இருந்தது கூட உங்களுக்கு ஞாபகம் வராது ; இல்லையா ? நான் சொல்றது நிஜந்தானே ? "

" இந்தா, பாரு. இந்த அசட்டுப் பேச்சை எல்லாம் விட்டு விட்டு...... "

" உள்ளதைச் சொன்னால் அது அசட்டுப் பேச்சோ ? "

" என்ன உள்ளதைச் சொன்னே, உள்ளதை ? "

" பெட்டி நிறையப் புதுப் புடவை வைத்திருக்கிறேன். அதை அவள் எடுத்துக் கட்டிப்பாள்."

"இப்படிப் பேசிக்கொண்டே யிருந்தால் நான் போறேன்."

"எனக்கு வைரத்தோடு வாங்கிப் போடுவது என்றால் உங்களுக்குப் பணமே அகப்படாது போய்விடும். அவளுக்கு என்றால் அவள் வந்த மறு நாளே எப்படியோ பணமும் வந்துவிடும். இளையாளோ, இல்லையோ? அவள் வரும்போது கையில் செப்பு வளைகளுடனும், கழுத்தில் பித்தளைச் சங்கிலியுடனும் வருவாள். வந்து பத்து நாளைக்குள்ளே அதெல்லாம் பத்தரை மாத்துத் தங்கமாக மாறிவிடும்; உங்கள் ரஸவாதத் திறலே!"

"நீ இப்படித்தான் அசட்டுப் பிசட்டு என்று பேசிக்கொண்டிருப்பயா?"

"அசட்டுப்பிசட்டு என்ன? உலகத்திலே நடக்கிறதைச் சொன்னேன்."

"அப்ப சரிதான். டாக்டரிடம் சொல்லி ஆப்பரேஷன் வேண்டாம் என்று சொல்லிவிடச் சொல்லுகிறேன். அதனால் என்ன நஷ்டம் இப்போ?"

"நான் போனப்புறம் என் இடத்திலே வந்து இன்னொருத்தி நன்னா யிருப்பதை நான் பார்த்துக்கொண்டிருப்பேனா? பாருங்களேன், உங்களையும் உங்கள் இளையாளையும் நான் என்ன பாடு படுத்தி வைக்கிறேன்; பாருங்களேன்" என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டே புன்சிரிப்புடன் சொன்னாள் லக்ஷ்மி.

"போடி, அசடே!" என்றான் சீனிவாசன் செல்லமாக. "எங்கே கொஞ்சம் சரியாகப் பேசு. டாக்டருக்குச் சொல்லி அனுப்ப வேணும். என்ன சொல்லியனுப்ப?"

"இவளைச் சீக்கிரம் தீர்த்துவிட்டால் தேவலை என்று இருக்கிறதோ உங்களுக்கு?"

"மனசு புண்ணாகிற வரைக்குமா கேலி பண்ணிக்கொண்டிருப்பா? போடி, போ. என்ன பண்ணலாம்? சொல்லு."

"எனக்குப் பயமாயிருக்கு. ஆப்பரேஷன் என்ருல், எதிர் விட்டுப் பெண்ணுக்கு........"

"அதெல்லாம் ஞாபகம் வைத்துக்கொள்ளாதே........"

"அதுதானே ஞாபகம் வருகிறது! நான் எப்படித் திர்மானித்து, வேணும் வேண்டாம் என்று சொல்றது?"

"எனக்கு என்னவோ பயமில்லை என்றுதான் தோன்றுகிறது. டாக்டரும் அப்படித்தான் சொல்கிருர். ரொம்பவும் சின்ன ஆப்பரேஷன்தான்; இதற்கு ஆப்பரேஷன் என்றே பெயர் சொல்வதற்கில்லை என்று சொல்லுகிருர்..."

"பின்னே குளோரபாரம் கொடுப்பானேன்?"

"அது கொடுக்காமே முடியாதாம். இருந்தாலும் அவர் பயப்பட ஒன்றுமில்லை என்கிறபோது......"

"பெட்டி நிறையப் புதுப் புடவை......"

"மறுபடியும் அந்தப் பேச்சை ஆரம்பித்தால் நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, சினிவாசன் தன் ஆபீஸ் அறைக்குள் சென்று விட்டான்.

சீனிவாசனும் லக்ஷ்மியும் பத்து வருஷங்களுக்குமுன் கல்யாணமான, ஆனல் இன்னும் புது மெருகு அழியாத, இளந் தம்பதிகள். அவர்களுடைய புது மெருகு அழியாததற்குப் பல காரணங்கள் இருந்தன—அவர்களுடைய குழந்தை உள்ளங்கள், அவர்களுடைய நல்ல ஸ்திதி, முதலியன. ஆனல், முக்கியமான காரணம் அவர்களுக்குக் குழந்தை பிறக்காததுதான் என்று சொல்லலாம்.

முன் காலத்திலெல்லாம் தம்பதிகளுக்குத் தக்க காலத்தில் குழந்தை பிறக்காவிட்டால்—அது சரியோ தப்போ!—அவர்கள் ராமேசுவரத்துக்குப் பயணம் கிளம்புவார்கள். இப்போதெல்லாம் குழந்தை பிறக்காவிட்டால்—இதுவும் சரியோ தப்போ, யார்தான் சொல்ல முடியும்?—டாக்டரைத் தேடிக்

கொண்டு கிளம்பிவிடுகிறார்கள். சீனிவாசனும் லக்ஷ்மியும் வருஷக் கணக்கில் சற்று மெதுவாகவே டாக்டரையும் லேடி டாக்டரையும் தேடிக்கொண்டு கிளம்பியிருந்தார்கள். டாக்டர்களின் முடிவு லக்ஷ்மியின் கர்ப்பப் பையில் ஏதோ சிறிய கோளாறு இருப்பதாகவும், ஒரு சிறிய ஆபரேஷன் செய்து அதைச் சரிப்படுத்திவிடலாம் என்பதுந்தான். இந்த முடிவை டாக்டர் வந்து சீனிவாசனிடம் தெரிவித்துப்போன அன்று காலை தான் மேலே கண்ட சம்பாஷணை தம்பதிகளுக்கிடையே நடந்தது.

லக்ஷ்மிக்கோவெனில், குழந்தைகள் என்றால் அபாரமான வாஞ்சை. அதைத் தீர்த்துக்கொள்ள வேறு வழியில்லாமல், அவள் தன் கூடக் குடியிருப்பவர்களின் குழந்தைகளை எல்லாம் சீராட்டிப் பாராட்டிப் பொழுது போக்கிக்கொண் டிருப்பாள். "தெருவில் ஆடிவருந் தேனைப்" பார்க்குந்தோறும் பார்க்குந் தோறும், "அள்ளி அணைத்திடவே" அவள் ஆவி துடிக்கும். குழந்தை யில்லாத குறை அவள் மனத்தில் பெருங் குறைதான். ஆனால், ஆப்பரேஷன் என்றாலோ பயமாகவே இருந்தது. தனக்குத் தெரிந்தவர்களில் எத்தனை பேர் ஆஸ்பத்திரியில் இறந்திருக்கிறார்கள் என்று விரல்விட்டு எண்ணிப் பார்த்தாள். எண்ணிக்கை இரண்டு கை விரல்களில் அடங்காதுபோல் இருந்தது. எங்கேயாவது ஒரு துளி ரத்தம், அல்லது ரத்தம்போல ஏதாவது சிந்திக் கிடப்பதைக் கண்டால் அவள் தலை சுற்ற ஆரம்பித்து விடும். பிறருக்குக் காயம் பட்டுவிட்டாலே அவள் மனம் மட்டுமின்றி அவள் உடலும் துன்பப்படும். இப்படிப்பட்டவள் ஆப்பரேஷன் என்றால் பயந்தது இயற்கைதானே! ஆனால் குழந்தை.....!

சீனிவாசனுக்கும், எப்படியோ, என்ன நேரிடுமோ என்று பயம்தான். இருந்தாலும் ஆப்பரேஷன் செய்துகொண்டுவிடுவதே சரி என்று அவன் தீர்மானித்துவிட்டான். ஆனால், இதை அவன் தன் மனைவியிடம் இன்னும் கூறவில்லை. அவளே யோசித்துத் தீர்மானத்துக்கு வரட்டும் என்று இருந்துவிட்டான். ஆனால் அடிக்கடி, "டாக்டர் பயமில்லை என்று சொன்னார்; பயமே யில்லை" என்று தனக்கும் தன் மனைவிக்கும்

ஒருங்கே தைரியம் பிறப்பதற்காகச் சொல்லிக்கொண்டே யிருந்தான்.

கணவன் ஆபீஸுக்குப் போன பிறகு, லக்ஷ்மி பூஜை அலமாரிக்கெதிரில் புஷ்பம் வைத்துப் பார்த்தாள். கடவுளே ஆப்பரேஷன் செய்துகொள்ளலாம் என்று சொல்வது போலத்தான் இருந்தது. ஆனால் அதிலும் அவளுக்குப் பரிபூரணமான நம்பிக்கை வரவில்லை. சாப்பிட்டுவிட்டு வழக்கம்போல அவள் பூ நூல் போட உட்கார்ந்தாள். அதில் அவள் மனம் செல்லவில்லை. ஏதோ புஸ்தகத்தைப் பிரித்துக்கொண்டு உட்கார்ந்து பார்த்தாள்; அதிலும் மனம் செல்லவில்லை. ஓர் ஏடு புரட்ட ஒரு மணி நேரம் ஆயிற்று. சாரமில்லை என்று புஸ்தகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு முன் வராந்தாவில் போய் நின்றுகொண்டு தெருவில் போகிறவர்கள் வருகிறவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றாள். தெருவில் குறுக்கும் நெடுக்குமாக எத்தனை குழந்தைகள் ஓடியாடித் திரிந்து விளையாடிக்கொண் டிருந்தன? அவற்றை எல்லாம் அவரவர்களின் தாய்மார்கள் ஆப்பரேஷன் செய்துகொண்ட பின்னரா பெற்றெடுத்தார்கள் என்று அவள் தன்னையே கேட்டுக்கொண்டாள். தான் மட்டும் ஆப்பரேஷன் செய்துகொண்டால்தான் ஆகும் என்று தனக்கு நேர்ந்திருந்த விதியை எண்ணி நொந்துகொண்டாள்.

எப்படியோ அன்றைப் பொழுது கழிந்துகொண் டிருந்தது.

மத்தியான்னம் கீழ்த்தளத்தில் குடியிருப்பவர்களின் பெண் சாலு பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பியதும் "மாமி"யைத் தேடிக்கொண்டு மாடிக்கு வந்தாள். அவள் மாமியைக் கண்டவுடன், "ஏன் மாமி இன்னிக்கி என்னமோ போல இருக்கையே?" என்று தன் கொச்சை மொழிகளால் கேட்டாள். அவளைக் கண்டவுடனேயே லக்ஷ்மியின் 'என்னமோபோல இருக்கும் தன்மை' எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டுவிட்டது. ஆனால் கால் மணி நேரத்தில் சாலு பள்ளிக்கூடம் போக அவளை விட்டுக் கிளம்பியபின், அந்த 'என்னமோபோல் இருக்கும் தன்மை'—சூனியம்—மறுபடியும் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டது.

மாலை ஐந்தரை மணிக்குச் சீனிவாசன் ஆபீஸிலிருந்து வந்தான். வரும்போதே, "என்ன லக்ஷ்மி? தீர்மானம் ஆயிற்று?" என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

லக்ஷ்மி, சிறிது நேரம் தயங்கிவிட்டுச் சற்று இழுத்தாற் போலேயே பதில் அளித்தாள்: "வேண்டாம். ஆப்பரேஷன் வேண்டாம் என்றே சொல்லிவிடுங்கள்" என்றாள்.

சீனிவாசன் இதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. தன் வார்த்தைகளை எதிர்த்து அவன் ஏதாவது சொல்வான் என்று அவள் எதிர்பார்த்தாள், ஏமாந்துவிட்டாள். சற்று நேரம் கழித்துச் சீனிவாசன் சொன்னான்: "இன்று **ஷர்லி டெம்பிள்** படம் ஒன்று புதிசாக வந்திருக்கிறது. போய்ப் பார்க்கலாம், கிளம்பு."

லக்ஷ்மி, "இன்று வேண்டாம்" என்று சொல்லலாமா என்று எண்ணினாள். ஆனால் சொல்லவில்லை. சற்று யோசித்து, "போகலாம்" என்ற முடிவுக்கே வந்தாள். ஆப்பரேஷனைப் பற்றி ஏதோ ஒரு முடிவுக்கு வந்து அதை வெளியிட்டு விட்ட பின் அவள் மனசிலிருந்து பெரும் சுமை இறங்கி விட்டது போல் இருந்தது. தவிரவும் **ஷர்லி டெம்பிள்** படம் என்றால் அவளுக்குப் பிடிக்கும். கால் மணியில் கிளம்பத் தயாராகி விட்டாள்.

சினிமாப் பார்த்துவிட்டு அவர்கள் வீடு திரும்பும்போது மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. கடைத்தெருவில் சுற்றி வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றதில் நேரம் கழிந்துவிட்டது. ஒரு பொம்மைக் கடையில் கண்ட ஓர் அழகான செலுலாயிடு பொம்மையை வாங்கவேண்டும் என்று லக்ஷ்மி பிடிவாதம் பிடித்து வாங்கிக்கொண்டாள். சீனிவாசன் சிரித்தான். "இதை வைத்துக்கொண்டு நீயும் நானுந்தான் விளையாட வேண்டும்" என்றான். ஆனால், அந்தச் செலுலாயிடு பொம்மை தலையைத் திருப்பித் திருப்பிக் கண்களைப் பரக்க விழித்து உருட்டிச் சிமிட்டிச் சிமிட்டி மூடியதைப் பார்க்க

அவனுக்கும் வேடிக்கையாகத்தான் இருந்தது; சிரிப்பு வந்தது.

பொம்மையை வாங்கிக் கையில் எடுத்துக்கொண்டே லக்ஷ்மி, "சாலுவுக்காக வாங்கினேன்" என்றாள். அதற்குப் பிறகு அவள், சாலுவுக்காக ஒரு சாக்கலெட் பொட்டல மும் வாங்கிக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பத் தயாரானாள்.

வண்டியில் வழி நெடுகத் தாங்கள் பார்த்த படத்தைப் பற்றியே இருவரும் பேசிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் இருவருடைய மனசிலும் வேறு ஏதோ ஒரு விஷயந்தான் முன் நின்றது. ஆனால் ஒருவரும் அதைப்பற்றி மனம் விண்டு பேச வில்லை.

வீடு வந்து சேர்ந்தவுடன், விளக்கைப் போட்டுவிட்டுச் சாலுவுக்காகத் தான் வாங்கிக்கொண்டு வந்த சாமான்களை அவளிடம் கொடுப்பதற்காக லக்ஷ்மி, "சாலு! சாலு?" என்று மாடியில் இருந்தபடியே கூப்பிட்டாள். பதில் இல்லை. கீழ்த்தளத்து முற்றத்துப் படிக்கட்டில் இறங்கி நின்று கொண்டு லக்ஷ்மி சாலுவை மறுபடியும் கூப்பிட்டாள். அதற் கும் பதில் இல்லை. சற்று உரக்கவே, "சாலு! சாலு!" என்றாள்.

"அர்த்த ராத்திரியிலே என்ன சாலு வேண்டிக் கிடக்கு?" என்று கீழேயிருந்து ஒரு பெண் குரல் மெதுவாக, ஆனால், லக்ஷ் மியின் காதிலும் விழும்படியாகக் கேட்டது. பிறகு அதே சற்று உரக்க, "சாலு தூங்கிப் போய்விட்டாளே!" என் றது. அதே சமயம், "ஏன், மாமி?" என்று சாலுவின் குரல் எழுந்ததும், உடனே அது பலவந்தமாக அடங்கியதும் தெரிந் தது.

சற்று நேரம் திகைத்துப் போய், லக்ஷ்மி படிக்கட்டி லேயே நின்றாள். அவளுக்குச் சற்று முன் பதில் சொன்ன அதே பெண் குரல் சற்று மெதுவாகவே வேறு யாரிடமோ, "மாடியிலே குடியிருக்கிற அந்தக் குழந்தையில்லாத பெண்..."

என்று சொல்ல ஆரம்பித்தது அவள் காதில் விழுந்தது. அதற்கு மேல் அவள் என்ன சொன்னாள் என்று கேட்க லக்ஷ்மி பிரியப் படவில்லை. தடதடவென்று படியேறி மாடிக்குப் போய் விட்டாள். கையில் வைத்திருந்த அந்த அழகிய செலுலாயிடுப் பொம்மையையும், 'மணமும் குணமும் முந்திரிப் பருப்பும் நிறைந்த' சாக்கலேட்டையும் ஆத்திரத்துடன் கை கொண்ட மட்டும் வீசி ஒரு மூலையில் எறிந்துவிட்டாள். சாக்கலேட்டுப் பொட்டலம் உருத் தெரியாமல் நசுங்கிப்போயிற்று. ஒரு பாவ மும் அறியாத செலுலாயிடுக் 'குழந்தை' திருப்பிய கழுத்துத் திருப்பிய படியே, விழித்த கண் விழித்து நிலைத்தபடியே தனக்கு இருந்த சொல்ப சக்திகளையும் இழந்துவிட்டுப் பரிதாப கரமாக மல்லாந்து விழுந்து கிடந்தது.

இவற்றை எல்லாம் பார்த்துக்கொண் டிருந்த சீனிவாசன் எதுவுமே சொல்லாமல் புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தான்.

சாப்பாடெல்லாம் முடிந்ததும், சமையலறைக் காரியங் களை எல்லாம் அவசர அவசரமாக முடித்துக்கொண்டு, லக்ஷ்மி சீனிவாசனின் நாற்காலியண்டை வந்து நின்றாள்.

"என்ன ?" என்றான் சீனிவாசன்.

"வெற்றிலை போட்டுக்கொள்ளுங்கள்" என்று வெற்றிலை எடுத்துச் சுண்ணாம்பு தடவிக் கிழித்துக் கொடுத்தாள் லக்ஷ்மி. பின்னர் ஒரு விநாடி தயங்கி விட்டுச் சொன்னாள்: "டாக்ட ரிடம் சொல்லிவிடுங்கள். முடியுமானால் நாளைக்கே ஆப்பரே ஷன் செய்துவிடட்டும்."

சீனிவாசன் புன்சிரிப்புடன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்; "எல்லாம் ஏற்கனவே சொல்லி ஏற்பாடாகி விட்டது. காலை யில் எட்டு மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் ஆஜராகிவிடவேண் டியதுதான் பாக்கி" என்றான். லக்ஷ்மியின் உடம்பு விதிர்த் தது; ஆனால் முகம் புன்முறுவல் பூத்தது.

---

# இலக்கியாசிரியனின் மனைவி

## 1

"இதோ பார், காமு, தபாலில் என்ன வந்திருக்கிறது பார்."

"என்னத்தை வரும்? வழக்கமாக வரதெல்லாந்தான் வந்திருக்கும், வேறு என்ன? உங்கள் கதை ரொம்ப அற்புதமாக இருக்கிறது என்று தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லோரும் ஒரே மனசாக அபிப்பிராயப்படுகிறார்கள் என்றும், அந்த அற்புதக் கதைக்குச் சம்மானமாக நாலு ரூபாயில் மணியார்டர் கமிஷன் கழித்து மூணே முக்காலே அரைக்கால் ருபாய்க்கு மணியார்டரும் வந்திருக்கும். வேறே என்ன வரப்போகிறது? என்றாள் காமு.

"ஒரு மணியார்டர் இல்லை; இரண்டு மணியார்டர் வந்திருக்கு இன்று."

"நம் தரித்திரம் விடிந்து விடும்!"

"ஒரு குட்டி நாவல் உடனே தேவையாம். நூறு ரூபாய் தருகிறாராம் ராமசாமி."

"உடனே தேவை என்பதற்கு உங்கள் வியாக்கியானம் ஆறு மாசத்தில் என்று. நூறு ரூபாய் என்பதற்கு உங்கள் ராமசாமியின் வியாக்கியானம் மாசம் ஒரு ரூபாயாக நூறு மாசத்தில் என்று. இதெல்லாம் என்னிடம் சொல்வதோடு இருக்கட்டும். வேறு யாராவது நாலு பேர் கேட்டால் சிரிப்பார்கள்!"

"நீ இலக்கியாசிரியனுடைய மனைவியாக இருக்க லாயக்கற்றவள். யாராவது குமாஸ்தாவைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொண்டிருக்கவேணும், நீ" என்றான் சுவாமிநாதன்.

"நீங்கள் யோசனை பண்ணியிருக்க லாகாதா? பெண்பார்க்க வந்தபோது, 'இந்தப் பெண், ஏதுடா, நம்மைப்போன்ற உயர் இலக்கியாசிரியனுடைய மனைவியாக இருக்க லாயக்கில்லையே, வேறு எங்கேயாவது பார்க்கலாமே' என்று நீங்கள் சற்றே யோசித்திருக்கவேணும்" என்றாள் காமு.

"ஏதாவது கன்னு பின்னு என்று பேசி என் வாயைக் கிளப்பாதே! எனக்குக் கோபம் வரும்."

"இலக்கியாசிரியனின் கோபத்துக்கு என்ன மதிப்பு என்று இலக்கியாசிரியனுடைய மனைவியாகிய எனக்குத் தெரியாதா?" என்றாள் காமு புன்சிரிப்புடன்.

"சரி, சரி; உள்ளே போ. தினம் தபாலில் கதை கேட்டு நாலு கடுதாசி வருகிறது. உன்னோடு வெட்டிப் பேச்சுப் பேசிக் கொண்டு போதுபோக்க எனக்கு நேரமில்லை. போ உள்ளே, போ" என்றான் இலக்கியாசிரியன்.

"கைக் காரியத்தை விட்டு விட்டு வந்து நிற்க நானும் தயாரில்லை. அப்புறம் கிடைக்கிற சோறும் சரியாகக் கிடைக்காது. நீங்கதான் 'காமு'வைக் கூப்பிட்டேள். வந்தேன்."

"சரி போ. உன்னைக் கூப்பிட்டது பிசகுதான். போ. கதை கட்டுரை வேணும் என்று கடிதம் எழுதுகிறவர்களுக்கெல்லாம் எழுதித் தர எனக்கு ராவணனைப் போல இருபது கைகள் இருந்தால் கூடப் போதாதுபோல் இருக்கு..." என்று தன் பெருமையைச் சொல்லிக் குறைப்பட்டுக்கொண்டான் சுவாமிநாதன்.

"நீங்கள் இருபது கையிலேயும் எழுதி எழுதிச் சம்பாதித்துப் போட்டால் கூட இந்த ஒத்தைக் குடும்பத்தைச் சரியான படி சவரக்ஷணை செய்யப் போதுமானது வரப்போவதில்லை, எழுத்து மூலம்..."

சுவாமிநாதன் நிமிர்ந்து ஒரு விநாடி அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அதில் வருத்தமும், விசனமும், தெரிந்தனவே

தவிரக் கேலி தெரியவில்லை. அவன் சொன்னான்: "பாரேன் இந்த மாசம். கடிதம் போட்டிருப்பவர்கள் ஒவ்வொருவரும் பத்துப் பன்னிரண்டு தருவதாக எழுதியிருக்கிறார்கள். கேட்டிருப்பவர்களில் ஒரு நாலு பேருக்கு பிகுப் பண்ணிக்கொண்டு எழுதாமல் இருந்து விடுவேன்."

"தவிடு தின்பதிலே ஒய்யாரம் வேறு!"

"மற்றவர்கள் எட்டுப் பேரும் ஆளுக்கொரு பத்து ரூபாய் அனுப்பினால் இந்த ஜனவரிக்குக் குறைந்த பக்ஷம் எண்பது ரூபாய் வந்து விடும்..."

"வரும் எண்பது ரூபாயை எப்படிச் செலவு செய்வது என்ற யோசனையிலே காலைப் போது போகிறதோ!" என்றாள் காமு, கேலியாக.

"ஒப்புக்கொள்கிறேன். நீ சொல்வதும் உண்மைதான். என் கதைகளில் வரும் நாயகர்களிற் பலர் வேண்டுமானால் லக்ஷம், கோடி என்று பணம் படைத்தவர்களாக இருக்கலாம். ஆனால் எண்பது ரூபாயைச் சேர்ந்தாப்போல நான் பார்த்து வருஷக் கணக்காக ஆகிவிட்டது. இப்போது கையில் கிடைத்தால் எப்படி அதைச் செலவு செய்வது என்று தடுமாறினாலும் தடுமாறுவேன்."

"ஐயோ பாவம்!" என்றாள் காமு.

அவள் குரல் திடீரென்று பரிதாபத்துக்கு மாறியதைக் கேட்டு சுவாமிநாதன் மறுபடியும் நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான். காமு மேலும் சொன்னாள்.

"இதென்ன பிழைப்பு வேண்டிக்கிடக்கிறது. எழுதுங்கள். ஒருவருக்குமே புரியாத நல்ல நல்ல கதைகளாக எழுதுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏதாவது பிழைக்கும் வழி தேடிக்கொள்ளுங்களேன். ஏதாவது உத்தியோகம்..."

"உத்தியோகம் புருஷ லக்ஷணம் என்கிறாய் நீ."

"இல்லாவிட்டால், ஒன்றுமே சம்பாதிக்காமல், அப்பா வைத்துவிட்டுப் போன செல்வத்தையும் நாளடைவில் கரைத்து விட்டு, பெண்டாட்டியையும் பிள்ளையையும் தெருவில் நிற்க விடுவதுதான் புருஷ லக்ஷணமோ?"

"எங்க ஆத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார் என்று சொல்லிக்கொள்ள உனக்கு ஆசை."

"என்னவோ! உலகத்திலே நாலு பேர் இருக்கிற மாதிரி எல்லாம் இருக்கவேணும் என்றுதான் எனக்கு ஆசை."

"மந்தை ஆட்டிலே நானும் ஓர் ஆடாக இருக்கவேணும் என்கிறாய் நீ, அவ்வளவுதானே!"

"வேண்டாம், வேண்டாம். ஆடாக இருக்கவேண்டாம். இலக்கியாசிரியனாகவே இருங்கள்!" என்று காமு சற்றுக் கோபமாகவே சொல்லிவிட்டு விறுக்கென்று உள்ளே போய் விட்டாள்.

## 2

நாளடைவில் வேறு வழி காணவில்லை. இலக்கியாசிரியனாகி யிருக்க வேண்டிய சுவாமிநாதன் டில்லியில் குமாஸ்தா வாகிவிட்டான்.

எழுதுவதில்தான் அதிர்ஷ்டமில்லையே தவிர அவனுக்கு, குமாஸ்தா வேலையில் போதிய அதிர்ஷ்டம் இருந்தது. எண்பது ரூபாயில் ஆரம்பித்தான். ஆனால் இரண்டு வருஷங்களுக்குள் ளாகவே அவன் சம்பளம் இரு நூறுக்கு உயர்ந்துவிட்டது. அதற்கு மேல் பதவி உயராது. சம்பளம் வருஷா வருஷம் உயரும். அவனுடைய ஐம்பத்தைந்தாவது வயதில் நாநூறை எட்டும். இருநூறு ரூபாய் உதவிச் சம்பளத்துடன் அவன் 'ரிடையர்' ஆகலாம்.

இலக்கியாசிரியனாகிப் பெயரும் புகழும் சம்பாதித்திருக்க வேண்டிய தான் இப்படிக் கேவலம் ஒரு குமாஸ்தாவாக

வாழ்க்கை நடத்த நேர்ந்ததை எண்ணி அவன் முதலில் கொஞ்ச நாள் வருத்தப்பட்டான். ஆனால் இந்த வருத்தமோ அமைதியின்மையோ நீடிக்கவில்லை. மாதாந்தர வருவாயுள்ளவர்களின் சுக செளக்கியங்களுடன் அவனுடைய நாட்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சுலபமாய்க் கழிந்துகொண்டிருந்தன. தபால்காரன் என்ன கொண்டுவருவானோ என்று தினம் எதிர்பார்த்து நிற்க வேண்டியதில்லை. நாளடைவில் சுவாமிநாதனுக்கு அவனுடைய புதுவாழ்க்கையில் பிடிப்பும் திருப்தியும் ஏற்பட்டுவிட்டன.

அவனுடைய பழைய நண்பர்களில் சிலர், பத்திரிகாசிரியர்களாக இருந்தவர்கள், அவனுக்கு எப்பொழுதாவது கடிதம் எழுதுவார்கள். ஏதாவது விசேஷ இதழுக்குக் கதை வேண்டுமென்று கேட்டு எழுதுவார்கள். முதலில் கொஞ்ச நாள் சுவாமிநாதனுக்கும் எழுதவேண்டும் என்றுதான் ஆசை. ஏதாவது எழுத ஆரம்பிப்பான். ஆனால் ஆரம்பிப்பதுடன் நின்று விடும். ஓய்வு குறைவு என்பது மட்டும் அல்ல. குமாஸ்தா வாகிவிட்ட உடனேயே எழுத்தாளனின் சக்திகளும் சிறிது சிறிதாகக் குறைந்துபோய் விட்டனபோல் இருந்தது. தவிரவும் ஆபீஸ் வேலை, புது நண்பர்கள், குழந்தைகள், டெல்லிச் சமூகத்தில் இருநூறு ரூபாய் சம்பாதிக்கும் குமாஸ்தாவுக்கு உரிய ஸ்தானத்திலிருந்து நழுவாமல் இருப்பதற்கானது செய்தல்—இப்படியாக அவன் பொழுது கழிந்துகொண்டிருந்தது. பொழுது இன்பகரமாகவே கழிந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

பின்னர் சில நாட்களில் கதை எழுத ஆரம்பிப்பதைக் கூட அவன் நிறுத்திவிட்டான். ஒரு நோட்டுப் புஸ்தகத்தில் கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் பெரிய பெரிய நாவல்களுக்கும் குறிப்புகள் எழுதி வைத்துக்கொண்டான். அதுவும் சில நாட்களில் நின்றுவிட்டது. எழுதுகிறவர்களையும் பத்திரிகைகளையும் பற்றிக் குமாஸ்தாக்களுக்கே இருக்கக்கூடிய ஓர் அலக்ஷியத்துடன் நாளடைவில் பேசவும் தலைப்பட்டான். இலக்கியம், கலை என்று முன்னெல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு நெருங்கி

உறவு கொண்டாடிக்கொண் டிருந்தானே அவ்வளவுக் கவ்வளவு இப்போது அவற்றினின்றும் ஒதுங்கிவிட்டான்.

அவனிடத்தில் இவ்வளவு மாறுதல்களையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கவனித்துக்கொண்டு வந்த காமுவுக்குத்தான் 'திக்' கென்றிருந்தது. மகோன்னதமான இலக்கிய வாழ்க்கையி னின்றும் தன் கணவரை நெட்டித் தள்ளிக்கொண்டு வந்து அவரைச் சாதாரண குமாஸ்தா வாக்கிவிட்டது தன் செயலும் சொல்லுந்தான் என்று உணர்ந்து அவள் வருந்தினாள். இந்த மாறுதல்களுக்கெல்லாம் தானே ஆதிகாரணம் என்று அறிந்து அவள் நெஞ்சு, 'குறுகுறு'த்தது. வேறு என்ன செய்வது? மறுபடியும் எழுத அவரைத் தூண்டுவது என்று முயன்றாள்.

"அதெல்லாம் அந்தக் காலம்!" என்றான் சுவாமிநாதன். "இந்தப் பத்திரிகாசிரியன்களுக்கெல்லாம் என்ன வேலை? ஏதாவது உத்தியோகத்திலிருப்பவன், இருந்தவன், கன்னா பின்னா என்று எழுதிக் கொடுத்துவிட்டால் அதைப் போட்டு விட்டு 'ஆஹா, ஊஹு!' என்று குதிப்பார்கள். இரவு, பகல் கண்விழித்து ஜீவகளை ததும்ப யாராவது ஏழை எழுத்தாளன் எழுதிக்கொடுப்பதைப் படித்துக் கூடப் பார்க்காமல் திருப்பி அனுப்பிவிடுவார்கள். தப்பித் தவறிப் பத்திரிகையில் போட் டாலும் சம்மானம் தம்பிடி அனுப்பமாட்டார்கள். ஏழை எழுத்தாளர்களுக்குப் போட்டியாக நான் இனிமேல் எழுதப் போவதில்லை. இந்தப் பத்திரிகாசிரியர்களுக்கெல்லாம் உதவியே செய்யக் கூடாது. தமிழ்ப் பத்திரிகை உலகம் ஆபாசங்கள் நிறைந்தது. அந்தச் சகதியில் நானும் காலைவிடுவானேன்?" என்று நீண்ட பிரசங்கம் நிகழ்த்தினான் சுவாமிநாதன்.

"உங்களுக்கு எழுத வராவிட்டால் அதற்காகத் தமிழ்ப் பத்திரிகை உலகமும் இலக்கிய உலகமும் ஊழல்கள் நிறைந் தவை என்று இகழ்வானேன்?" என்றாள் காமு.

"எனக்கு எழுத வராது என்றா நினைக்கிறாய்? உம்?"

"எழுதுங்களேன், பார்க்கலாம்."

"உனக்காக எழுதுகிறேன் பார். ஒரே ஒரு கதை எழுது கிறேன். அதை எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பமாட்டேன். உனக்காக எழுதுகிறேன்" என்றான் சுவாமிநாதன்.

ஆனால் காமுவுக்காகக் கூட அவனால் கதை எழுத முடியவில்லை.

## 3

ஏதோ விளையாட்டாகத்தான் காமு கதை எழுத உட்கார்ந்தாள். ஆனால் அது வினையாகவே அவளைப் பற்றிக்கொண்டது. வீட்டு வேலை, குமாஸ்தாக்களின் மனைவிமார் சமூகத்தில் உரிய ஸ்தானம், குழந்தைகள், கணவர்—இவ்வளவு கடமைகளுடன் எழுதுவதும் ஒரு கடமையாக அவளைப் பிடித்துக்கொண்டது. ஆரம்பத்தில் ஆத்ம திருப்தியை மட்டும் உத்தேசித்து எழுதினாள். இரண்டொன்று எழுதி, எழுத்துப் படிந்தவுடன் ஏதாவது புனைபெயருடன் பத்திரிகைகளுக்கும் அனுப்பிப் பார்க்கலாமே என்று ஆசை தட்டிற்று.

தன்னுடைய உண்மையான உணர்ச்சிகளை எல்லாம் உள்ளபடியே விவரித்து அவள் கதை எழுதினாள். இலக்கியாசிரியன் கடைசியில் குமாஸ்தாவான கதையைத் தனக்கு எட்டியவரையில் எழுதி அதற்கு, 'இலக்கியாசிரியனின் மனைவி' என்று மகுடமிட்டு, 'குமாரி' என்ற புனைபெயருடன் அனுப்பினாள்.

அவள் கதை எழுதியதோ, அதைப் பத்திரிகைக்கு அனுப்பியதோ அவள் கணவனுக்குத் தெரியாது. நல்ல வேளையாக கதை வெளியான இதழ் 'ஜயந்தியை'யும் அதற்குச் சம்மானமாக வந்த ரூபாய் இருபத்தைந்து மணியார்டரையும் தபால்காரன் கொண்டுவந்து அவளிடம் கொடுத்தபோது அவள் கணவன் ஆபீசுக்குப் போயிருந்தான்; வீட்டில் இல்லை. அந்த இதழை அவன் கண்ணிலே காட்டாமல் தன் பெட்டிக்குள் போட்டுப் பத்திரப்படுத்திவிட்டாள்.

ஆனால் அந்தப் பத்திரிகை 'தமிழர் கிளப்பு'க்கு வந்திருந்தது. அதில் சுவாமிநாதன் அந்தக் கதையைப் படித்துவிட்டு

வந்து இரவு அதைப்பற்றித் தன் மனைவியிடமும் சொன்னான். "நம்மைப்பற்றி அறிந்தவர்கள்தான் யாரோ அந்தக் கதையை எழுதியிருக்கிறார்கள்" என்று அவன் சொன்னான். "யார் என்று தெரியவில்லை. 'ஜயந்தி'யின் ஆசிரியன் எனக்குச் சிநேகிதன்தான். இந்தக் கதையை எழுதியது யார் என்று நாளைக்கே எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்" என்றான்.

'குமாரி'க்குத் திக்கென்றது. ஆனால் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், "கதை அவ்வளவு நன்றாக இருந்ததா என்ன?" என்று கேட்டாள். "நானும் படிப்பேனே? கொண்டுவந்திருக்கக் கூடாதா?" என்றாள்.

"கதை நன்றாகவே இருந்தது" என்று தன் கணவன் சொன்னதைக் கேட்க அவளுக்குப் பரம திருப்தியாக இருந்தது.

குமாஸ்தா சுவாமிநாதன் மறுநாள் பொழுது விடிவதற்கு முன்னரே 'இலக்கியாசிரியனின் மனைவி'யையும் அதன் ஆசிரியையையும் பற்றி மறந்து போய்விட்டான். குமாஸ்தாவின் வாழ்க்கையில் எவ்வளவோ கவலைகள், வேலைகள், ஆசைகள், நிராசைகள்—கேவலம் ஒரு கதையைப்பற்றி –, அது எவ்வளவு நல்ல கதையானால்தான் என்ன?—ஞாபகம் வைத்துக்கொண்டிருக்க முடியுமா என்ன?

ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு 'ஜயந்தி'யில் அதே 'குமாரி' எழுதிய இன்னொரு கதை வெளிவந்திருந்ததைக் கண்டவுடன் சுவாமிநாதனுக்கு முதல் கதையும் ஞாபகத்துக்கு வந்தது. இந்தத் தடவையும் மறந்துவிடாமல் உடனே உட்கார்ந்து 'ஜயந்தி'யின் ஆசிரியருக்குக் கடிதம் எழுதினான், யார் அந்தக் 'குமாரி' என்று விசாரித்து. பத்து நாட்களில் 'ஜயந்தி'யின் ஆசிரியரிடமிருந்து பதிலும் வந்துவிட்டது. புனைபெயர் வைத்துக்கொள்ளும் ஆசிரிய ஆசிரியைகளின் உண்மைப் பெயரை வெளியிட இயலாததுபற்றி வருந்துவதாக ஆசிரியர் பதில் எழுதிவிட்டார்.

அந்தக் கடிதத்தைச் சாமா தன் மனைவியிடம் காண்பித்தான். அவன் சொன்னான்: "யார் என்று சொல்ல இயலா

தாம்! யாராவது இருந்தால்தானே, சொல்ல! அவனே பெண்ணின் பெயரைப் போட்டுக்கொண்டு எழுதியிருப்பான்; அவ்வளவுதான். தமிழ்ப் பத்திரிகை உலகம் மகா மோசமானது; மட்டமானது. அதில் என்ன நடக்கும், என்ன நடக்காது என்று யாரும் சொல்ல முடியாது. புருஷர்களே புடைவை கட்டிக்கொண்டு எழுத வந்துவிடுவார்கள்...''

'குமாரி' என்பது யார் என்று தெரிவித்துவிடலாமா என்று யோசித்தாள் காமு; சற்றுத் தயங்கினுள். அதற்குள் சுவாமிநாதன் சொன்னுன்.

"பார்! 'புடவை கட்டிய புருஷர்கள்' என்று நான் ஒரு கதை எழுதி அனுப்புகிறேன், இன்றே எழுதி அனுப்புகிறேன். அவன் அதை வெளியிடாமல் மட்டும் இருக்கட்டும்; பார்க்கிறேன்.''

உறுமிக்கொண்டே சுவாமிநாதன் பேனுவை எடுத்துக்கொண்டு எழுத உட்கார்ந்தான். அன்று ஏதோ லீவு; ஆபீஸில்லே. அப்படியும் 'புடவை கட்டிய புருஷர்கள்' முதல் இரண்டு வாக்கியங்களுக்கு மேல் ஓடவில்லே.

காமு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் ஒன்றுமே வாய்திறந்து சொல்லாமல் புன் சிரிப்புடன் நின்றுள்.

மேலும் இரண்டு மாதங்கள் சென்றன. அந்த இரண்டு மாதங்களில் 'ஜயந்தி'யில் 'குமாரி'யின் கதைகள் இன்னும் இரண்டு வெளியாயின. அவையும் நன்றுகவே இருந்தன என்று சுவாமிநாதன் ஒப்புக்கொண்டான். ஆனுல் யாரோ புடைவை கட்டிய புருஷன்தான் அவற்றையெல்லாம் எழுதியிருப்பான் என்று தன் மனத்தில் ஊர்ஜிதம் செய்துகொண்டான்.

ஒரு வருஷத்தில் தங்கள் இதழ்களில் வெளிவரும் கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு அளிப்பது 'ஜயந்தி'காரியாலயத்தாரின் வழக்கம். எந்தக் கதைக்குப் பரிசு என்பதை

'ஜயந்தி'யின் வாசகர்களே 'ஓட்டுக்'கொடுத்துச் சொல்வது வழக்கம். அந்தப்படியே அந்த வருஷமும் வாசகர்களின் அபிப்பிராயம் கோரப்பட்டது. அவ் வருஷத்திய ஜயந்தி இதழ்களில் வெளிவந்த கதைகளில் 'குமாரி' எழுதிய 'இலக்கியாசிரியனின் மனைவி' என்ற கதைதான் சிறந்தது என்று 'ஜயந்தி' வாசகர்களில் நூற்றுக்கு எண்பது பேர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்கள். அவ்வருஷத்திய 'ஜயந்தி'ப் பரிசு 'குமாரி' என்பவளுக்கு வழங்கப்படும் என்று ஆசிரியர் அறிவித்திருந்தார். அத்துடன் 'குமாரி' என்பவரின் உண்மைப் பெயரும் விலாசமும் வெளியிடப்பட்டிருந்தன.

அந்த இதழ் டில்லிக்கு வந்து சேர்ந்த அன்று சுவாமிநாதன் 'கிளப்பு'க்குப் போகவில்லை. ஆகவே அவனுக்குத் தகவல் தெரியாது. இரவில் அவனை அகஸ்மாத்தாகச் சந்தித்த நண்பன் ஒருவன்தான் விஷயத்தைச் சுவாமிநாதனுக்குச் சொன்னான். அவன் திடுக்கிட்டுப் போனான். அவன் எதிர்பார்க்காத விஷயம் அது. வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் ஒன்றும் அறியாதவன்போல அவன் காமுவுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். ஆனால் தெரிந்ததை அதிக நேரம் அடக்கி வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. நேராகவே கேட்டுவிட்டான்.

"'குமாரி' என்பது நீதானாமே? 'ஜயந்தி'யிலே உன் பெயரும் விலாசமும் போட்டிருக்கிறதாமே!" என்றான்.

பதில் என்ன சொல்வது என்று அறியாமல் தடுமாறினாள் காமு. பல வருஷங்களுக்கு முன் தான் தன் கணவனிடம் சொல்லியதெல்லாம் அவளுக்கு ஞாபகம் வந்தது. தான் சற்றுக் கடுமையாகவே அப்போது பேசினதாக அவளுக்கு ஞாபகம். அவள் கண்கள் நிறைந்துவிடும்போல் இருந்தது. அழுகையை ஒருவாறு அடக்கிக்கொண்டு சொன்னாள். "சம்பாதிக்க ஆரம்பித்த பிறகு நீங்கள்தான் எழுதவே மாட்டேன் என்றீர்கள். நானாவது எழுத வருகிறதா பார்க்கலாமே என்று ஆரம்பித்தேன்" என்றாள்.

மாஜி இலக்கியாசிரியன் பதில் சொல்ல வில்லை. சிறிது நேரம் அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றான்.

காமு சொன்னாள்: "எல்லாம் உங்கள் ஆசீர்வாதந்தான்."

அவள் வேறு என்னவெல்லாமோ சொல்ல விரும்பினாள். ஆனால் அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

"இவ்வளவு கெட்டிக்கார மனைவி எனக்கு இருப்பது எனக்கே இன்றைக்குத்தான் தெரியவந்தது!" என்றான் சுவாமிநாதன். அவன் என்ன சொல்வானோ என்று பயந்திருந்த காமு அவன் குரலில் தொனித்த பெருமையைக் கண்டு திக்பிரமை அடைந்தாள்.

அன்றிரவு வெகு நேரம் வரையில் இருவரும் தூங்கவில்லை. பழைய காலத்திய, அதாவது சுவாமிநாதன் இலக்கியாசிரியனாக இருந்த நாட்களைப் பற்றிய பேச்சில் ஈடுபட்டு வெகு நேரம் கண் விழித்திருந்தார்கள்.

மறுநாள் காலையில் சுவாமிநாதன் சாப்பிட்டு விட்டுக் கோட்டை மாட்டிக்கொண்டு ஆபீசுக்குக் கிளம்பும்போது, அவனுக்கு வெற்றிலை கிழித்துக் கொடுத்துக்கொண்டே, காமு சொன்னாள்: "குமஸ்தாதான் என்றாலும் இலக்கியாசிரியையின் கணவன் என்பதை மறந்து விடாதீர்கள்! கன்னா பின்னா என்று யாராவது நண்பர்களிடம் ஆத்துக்காரியைப் பற்றிப் பிதற்ற ஆரம்பித்து விடாதீர்கள்!" என்று எச்சரிக்கை செய்தாள்.

"போடி, போக்கிரி!" என்றான் சுவாமிநாதன். அவனுக்கு வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

# கிரகப் பிரவேசம்

மறுநாள் பொழுது விடிந்தால், ராவ்பகதூர் நரசிம்ம ஐயருடைய வாழ்நாட்களிலேயே முக்கியமான நாள். அந்தத் தினம், அவர் வாழ்க்கைக்கே ஒரு சிகரம் போல் அமைய இருந்தது.

எந்தக் காலத்திலேயோ-சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்-யாரும் கேள்விப்பட்டிராத ஒரு தாழ்ந்த இலாக்காவில் ஒரு தாழ்ந்த குமாஸ்தாவாக ஆரம்பித்த நரசிம்மன், இப்போது ராவ் பகதூர் நரசிம்ம ஐயர் ஆகியிருக்கிறார். மயிலாப்பூரில் சொந்தமாகப் பங்களாக் கட்டிக்கொண்டு, அதில் குடியேற இருந்தார்-நாளைக்குப் பொழுது விடிந்தால் கிரகப்பிரவேசம்.

முந்திய இரவு ஆக வேண்டிய காரியங்களை எல்லாம் அவரே நேரில் நின்று கவனித்தார்; அப்படிக் கவனிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை என்றாலும், தாமே செய்தார். ராவ்பகதாருக்கு ஓடியாடிப் பணிவிடை செய்யப் போதிய ஆட்கள்-ஒரு பிள்ளையும் உள்பட-இருந்தார்கள். ஆனால், எல்லாவற்றையும் தாமே செய்தால்தான் திருப்தியாக இருக்கும் என்ற எண்ணத்தில், ராவ்பகதூரே வேலைகள் எல்லாவற்றையும் மேற்பார்வை பார்த்தார். பந்தல் போட்டுத் தோரணம், வாழைகள் முதலியவை கட்டுவது முதல், வைதிக காரியங்களுக்கு ஏற்ற சாஸ்திரிகளாகப் பொறுக்கி எடுப்பது வரையில், விருந்துக்குச் சமையல் திட்டம் போட்டுச் சாமான்கள் சேகரிப்பது முதல், அழைப்பிதழ்கள் அனுப்புவது வரையில், எல்லாக் காரியங்களையும் அவரே முன்னின்று பார்த்தார். பகல் முப்பது நாழிகை நேரமும் ஓடியாடி உழைத்து அலுத்தவர்; இரவிலும் வெகு நேரம் கழித்தே படுக்கை போட முடிந்தது.

உடம்பு அயர்ந்து படுத்தவர், படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாரே தவிர, சரியானபடி தூங்க முடியவில்லை. பல தினு

சான சிந்தனைகள் அவர் மனசில் புகுந்து குழப்பின. ஓடிக் கொண்டிருந்த எஞ்ஜினைத் திடுதிப்பென்று பிரேக் போட்டு நிறுத்தியது போன்றதோர் உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று. உடம்பையும் மனசையும் என்னவோ செய்தது.

பொழுது எப்பொழுது விடியும் என்று அவர் தம்மையே கேட்டுக்கொண்டார். 'விடியுமா, விடிந்து விடாதா' என்றிருந் தது அவருக்கு.

தம்மை அறியாமலே சுற்றுக் கண் அயர்ந்துவிட்டார். மணி மூன்றடித்தது தெரியாது. ஆனால், நாலடிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பே விழிப்புக் கொடுத்துவிட்டது. நாலடிக்கும் வரையில், படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டே யிருந்தார். பிறகு, இனியும் படுத்திருப்பதில் சார மில்லை என்று எழுந்து, தாம் அப்போது குடியிருந்த வீட்டில் மாடி வெளி வராந்தாவில் ஓர் ஈஸிச்சேரைக் கொண்டுபோய்ப் போட்டுக்கொண்டு, "அப்பாடா!" என்று அதில் சாய்ந்தார்.

வீட்டில் எல்லோரும் ஆழ்ந்து உறங்கிக்கொண் டிருந்தார் கள். வேலைக்காரர்கள் நிஷ்கவலையாகத் தூங்கினார்கள். எந்தப் பட்டணம் எப்படிக் கொள்ளைபோனால்தான் அவர்களுக் கென்ன? ராவ்பகதூரின் சொந்தக்காரர்கள் - இருந்தவர்கள் ஒரு சிலரே - முந்திய தினம் அவருடன் ஓடியாடி உழைத்தவர் கள்; அவர்களுக்கு அந்த அலுப்பு! தவிரவும் பொழுது விடிந் தால், மறுபடியும் பூராத் திட்டம் வேலையிருக்கும் என்று அவர் களுக்குத் தெரியும். அவர்கள் தூங்காமல் என்ன செய் வார்கள்?

ஈஸிச்சேரில் சாய்ந்தபடியே, எதிரே நோக்கினார் ராவ் பகதூர் நரசிம்ம ஐயர். இப்போது அவர் குடியிருந்த இந்தச் சிறு வீட்டுக்கு எதிரேதான் இருந்தது அவர் புதிசாகக் கட்டி யிருந்த பங்களா. இருளில் பங்களாத் தெரியவில்லை; தவிரவும், அதைச் சுற்றிலும் அடர்ந்த தென்னந் தோப்பு இருந்தது. ஒரு விதத்தில் சென்னையில் சிறந்த மயிலாப்பூரில் சிறந்த இடம் அது என்றே சொல்ல வேண்டும். பெருமையுடன் இருளில் எதிரே

நோக்கியவராக, ராவ்பகதூர் நரசிம்ம ஐயர், தமது ஈஸிச்சேரில் வீற்றிருந்தார்.

அவருடைய வாழ்க்கை ஜியார்ஜ் டவுனில் ஏதோ ஒரு சாக்கடைச் சந்தில் ஆரம்பமாயிற்று. சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக்கேணி, மயிலாப்பூரில் கிழண்டைக்கோடி முதலிய இடங்களிலெல்லாம் தங்கிவிட்டு, அவர் தம்முடைய லட்சிய பூமியாகிய மயிலாப்பூரை-அசல் மயிலாப்பூரை அடைந்துவிட்டார். இங்கே அவர் குடியேறி ஐந்தாறு வருஷங்கள் ஆகிவிட்டன. நாளைக்குச் சொந்த வீட்டில் குடிபுக இருந்தார்.

புதுப் பங்களா—ராவ்பகதூர் நரசிம்ம ஐயரின் கௌரவத்துக்கும் பதவிக்கும் உத்தியோகத்துக்கும் ஏற்ற பங்களா. கட்டிடம் கட்ட மட்டுமே எத்தனையோ ஆயிரக்கணக்காய்ப் பிடித்தது என்று, இந்த விஷயத்தில் கணக்கெடுப்பவர்கள், கணக்கெடுத்திருந்தார்கள். அதைச்சுற்றி அடர்ந்த விசாலமான தென்னந்தோப்பும் தோட்டமும்.

இவ்வளவுக்கும் வேண்டிய பணமெல்லாம் சென்ற ஏழெட்டு வருஷங்களுக்குள்ளாகவே சேர்த்ததுதான் என்பதை ராவ்பகதூர் எண்ணிப் பார்த்தார். அதற்குமுன் அவருக்குச் சம்பளமாகக் கிடைத்துக்கொண்டிருந்த இருநூறு, இருநூற்றைம்பது—பிச்சைக் காசில் அவரால் அதிகமாய் மீதம் பிடித்திருக்க முடியாது. சென்ற ஏழெட்டு வருஷங்களாகத்தான் நரசிம்ம ஐயர், பெரிய உத்தியோகஸ்தர்—அவர் பெயர் அடிக்கடி சர்க்கார் கெஜட்டுகளில் வெளிவர ஆரம்பித்தது. அவர் இலாக்கா விஸ்தரிக்கப்பட்டது. அவர் உத்தியோகப் பதவி, தாண்டிக் குதித்துக் குதித்து உயர்ந்தது. கேட்பானேன்? சம்பளமும் உயர்ந்தது. தனி ஓர் இலாக்காவுக்கே தலைவரானார் அவர். ஒரு குட்டிச் சர்வாதிகாரியானார். ராவ்பகதூர் பட்டமும் கிடைத்தது. தமக்கென்று சொந்தமாக ஒரு பங்களா மயிலாப்பூரில் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும் என்று ஓர் ஆசை அவர் உள்ளத்தில் உதித்ததும், சற்றேறக்குறைய இதே காலத்தில்தான். நாலைந்து வருஷங்களுக்குள்ளாகவே,

அந்த ஆசை நிறைவேறும் காலம் வந்து விடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், அவர் ஆசை நிறைவேறும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. பொழுது விடிந்தால் கிரகப் பிரவேசம். ராவ்பகதூர் நரசிம்ம ஐயர், மறுநாள் தம் சொந்த வீட்டில் குடி புகுந்து விடுவார்.

தனது என்று ஒரு வீடு இல்லாதவனுக்குத்தான் இந்த ஆசையின் முழுவேகமும், இந்தச் சிந்தனையின் கொந்தளிப்பும் தெரிய முடியும். ஆயுள் பூராவும் வாடகை வீடுகளிலேயே குடியிருந்து விட்டு, இறந்த பின்பும் மயானத்தில் எட்டு மணி நேரத்துக்கு ஆறடி நிலத்தைக் குத்தகை எடுத்துக்கொண்டு இந்தப் பிரபஞ்சத்திலிருந்து வெளியேறும் பிரக்ருதிகளின் மனம் எப்படிப் பட்டது என்று யாருக்கும்—ஏன், அவர்களுக்கே சரியாகத் தெரியாது. எவனாவது புது வீடு கட்டிக் கிரகப் பிரவேசம் செய்கிறான் என்று கேள்விப்பட்டால், அவர்கள் மனசு பொங்கும்; வயிறு எரியும். வீடு கட்டிக் கிரகப் பிரவேசம் செய்கிறவர்கள், இந்த விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாகவேதான் இருக்க வேண்டும். வீடில்லாதவர்களைத் தங்கள் கிரகப் பிரவேச மகோத்ஸவத்துக்கு அழைக்காதிருப்பதே நல்லது.

ராவ்பகதூர் நரசிம்ம ஐயரின் கிரகப் பிரவேசத்துக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வருவார்கள். அநேகமாக அவர்கள் எல்லோருமே சென்னையில் வெவ்வேறிடத்தில் நல்ல நல்ல பங்களாக்கள் உடையவர்களாகத்தான் இருப்பவர்கள்—நல்ல நல்ல கார்களில்தான் வந்து இறங்குவார்கள். யார் யார் வருவார்கள் என்று எண்ணிப் பார்த்தார் ராவ்பகதூர் நரசிம்ம ஐயர். ஸர் சீனிவாசன், ஸ்டோன் துரை, திவான்பகதூர் லட்சுமிகாந்தம், மிஸஸ். பார்வதி—இப்படியாக அவர்கள் பெயரை உச்சரித்துப் பார்ப்பதிலேயே எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது என்று எண்ணினார் அவர். அவரது முகம் இருளிலே மலர்ந்தது.

ஆனால், அது சட்டென்று இருண்டது. வேண்டுமென்றே, தம்மை அவமரியாதை செய்யவேண்டும் என்ற ஒரே காரணத்-

துக்காகச் சிலர் வராமலும் இருக்கக் கூடுமே! பெரிய மனிதர்கள் பலருக்கு இந்த வக்கிர புத்தி உண்டு என்று எண்ணிய போது, ராவ்பகதூர் நரசிம்ம ஐயருக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆத்திரத்துடனும் வெறுப்புடனும் அவர் தமக்குள்ளேயே ஏதோ முணுமுணுத்துக்கொண்டார்.

இந்த பாவம் இரண்டே விநாடியில் மாறிவிட்டது. காரண காரியமில்லாமல் திடீரென்று அவருக்கு அவர் மனைவியின் ஞாபகம் வந்தது. அந்த ஞாபகம் வருவது அவருக்குச் சகஜமான காரியம் அல்ல. அவர் கூடியவரையில் அவளைப்பற்றி நினைப்பதையே விட்டுவிட்டார். இப்பொழுது ஏனோ தெரியவில்லை; இந்தப் புனிதமான தினத்தின் அதிகாலையில் அவள் ஞாபகம் வந்தது. இது சுப சூசகம் அல்ல என்று எண்ணினார் ராவ் பகதூர் நரசிம்ம ஐயர்.

மனைவி உயிருடன் இருக்கும்போது அவளைப் படாத பாடெல்லாம் படுத்திவைப்பவர்கள், அவள் போனபின் அவளைப்பற்றி இரக்கத்துடனும் ஆசையோடும்—சில சமயம் அன்பும் காதலும் ததும்ப—சிந்திப்பது மனித இயற்கை. உண்மையில் அப்படி இருந்திராவிட்டாலும், ஞாபகத்திலே அவர்களுடைய இல்லற வாழ்க்கை கட்டித் தங்கமாக மாறி விடும். ஆனால், ராவ்பகதூர் நரசிம்ம ஐயர், இந்த விதிக்கு விலக்கானவர். அவள் உயிருடன் இருந்தபோது தம்முடைய சகல உரிமைகளையும் பூராத் திட்டமும் கொண்டாடி அவளைப் படுத்தி வைத்தவர், அவள் இறந்த பின் அவளைப் பற்றிய ஞாபகத்தையே தம் மனத்திலிருந்து ஒதுக்கி வைத்து விட்டார். வேறு ஸ்திரீக்கும் அவர் அங்கே இடம் கொடுத்து விடவில்லை. ராவ்பகதூர் நரசிம்ம ஐயரை, அன்பென்றும் உரிமையுடன் யாரும் அணுகி விடுவது அவ்வளவாகச் சுலபமான காரியம் அல்ல. இருந்தவரையில் வீட்டில் மற்ற வேலைக்காரிகளிடையே ஒரு வேலைக்காரியாக—முக்கியமான வேலைக்காரியாக—இருந்தாள் அவர் மனைவி. அவள் போனபின், வேறு வேலைக்காரி வந்தாள்-இவளுக்கு வீட்டிலே முக்கியத்துவமோ, உரிமைகளோ இல்லவே இல்லை.

தம்முடைய மனைவி போய்விட்டது தம்மைப் பிடித்த சனியன் ஒழிந்தமாதிரி என்றுதான், நரசிம்ம ஐயர் எண்ணினார். அப்படி அவர் எண்ணுவதற்குக் கடவுளே உதவி புரிந்தார் என்றுதான் சொல்லவேண்டும். நரசிம்ம ஐயரின் உத்தியோகம், சம்பளம் எல்லாம் உயர்ந்ததும், அவருக்குப் பட்டம் கிடைத்ததும், எல்லாம் அவள் போன பின்தான். இப்படி இருக்கையில் அவள் இறந்ததுபற்றி, 'சனியன் தொலைந்தது' என்று நரசிம்ம ஐயர் எண்ணியது பூராவும் தவறு என்று யார்தான் சொல்ல முடியும் ?

அவருக்கு மனைவியாக இருந்தவளைக் கெட்டவள் என்றோ, நல்லவள் என்றோ சொல்ல முடியாது. அவள் இரண்டும் இல்லை. மிகவும் சாதாரணமான ஒரு ஸ்திரீ. கிராமத்தில் ஏழ்மையில் பிறந்து, பட்டணத்துக் குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்பட்டு, அன்பு ஒளியோ, ஆதரவோ இல்லாமல் நாற்பது வருஷ காலம் வாழ்ந்துவிட்டு, 'ஏன் பிறந்தோம், ஏன் வாழ்ந்தோம் ?' என்ற சஞ்சலங்கூடக் கொள்ளப் போதிய அறிவோ, மனத்தெம்போ இல்லாத ஓர் அற்பப் பிராணி அவள். அவள் வாழ்க்கை, அவளுக்குப் பிறந்த ஒரே குழந்தையால், கொஞ்ச காலம் பளிச் சென்று பிரகாசம் பொருந்தியதாக ஆயிற்று. அந்த ஒளி நீடித்த தெல்லாம் ஒரு விநாடியே என்று அவள் எண்ணினாள். அந்த விநாடி, உண்மையில் காலண்டர்க் கணக்கில், பதினாறு வருஷங்கள் என்பதை அவள் உணரவேயில்லை. அவள் உணர்ந்த தெல்லாம் ஒரு கண இன்பம்தான். பிறகு, தன் பதினாறு வயதுப் பிள்ளையை விட்டு விட்டு, அவள் உயிர் நீத்தாள். அந்தப் பிள்ளையும் ராவ்பகதூர் நரசிம்ம ஐயரின் உள்ளத்தைத் தொடவில்லை.

ராவ்பகதூர் நரசிம்ம ஐயரை உண்மையிலேயே அசாதாரணமான பிறவியாகத்தான் சொல்லவேண்டும். அன்பின் தேவைகளை, அவர் என்றுமே கண்டதில்லை. அன்பைப்பற்றிக் கேட்டறிந்தது, ஒரு காலத்தில் உண்டோ, என்னவோ ? இப்போது அதை மறந்துவிட்டார். தம் காரியாலயத்தில் ஆகட்டும், வெளியே நண்பர்களிடையேதான் ஆகட்டும்,

வீட்டில் தம் பிள்ளையுடன்தான் ஆகட்டும்—அவர் என்றுமே யாருடனும் நெருங்கிப் பழகியதில்லை. இதற்கு மற்றவர்கள் மேல் பிசகு சொல்ல முடியாது. உதாரணமாக, பிள்ளையை எடுத்துக்கொள்வோம். அவன் என்ன பாவம் செய்தான்? ஒன்றுமில்லை. அதாவது ராவ்பகதூர் நரசிம்ம ஐயரின் பிள்ளையாக வந்து அவதரித்துவிட்ட ஒரு பாவத்தைத் தவிர, அவன் வேறு ஒரு பாவமும் அறியான். சர்க்கார்க் காரியாலயத்திலே, அவர் இலாக்கா நாணயத்துக்கும் யோக்கியதைக்கும் பேர் போனது. ஆனால், அதிலுள்ள குமாஸ்தாக்களையோ, உத்தியோகஸ்தர்களையோ, அவர் என்றுமே தம்மை அணுகவும் விட்டது கிடையாது. ஏன்? ஏனோ, யார் சொல்ல முடியும்?

மறுநாள் - அதாவது இன்று - பொழுது விடிந்தால், புது வீட்டுக்குக் கிரகப்பிரவேசம். எதற்காக, யாருக்காக, அவர் புது வீடு கட்டிக் குடி போகிறார்? யாருக்காகவும் இல்லை. ராவ்பகதூர் நரசிம்ம ஐயர் - தாம் - புது வீட்டில், சொந்த வீட்டில் குடி புக இருந்தார் - அவ்வளவுதான் ராவ்பகதூரின் உள்ளத்திலே உறைத்தது. இந்தக் காரியத்துக்கு வேறு காரணம் தேவையாய் இருப்பதாகவும் அவருக்குத் தோன்றவில்லை.

ஐம்பத்துநாலு வருஷங்கள் தாம் வாழ்ந்தது யாருக்காக, எதற்காக?

ஈஸிச்சேருக்கு அண்டையில் யாரோ வந்து நின்று லேசாக நகைப்பது போன்ற உணர்ச்சி, ராவ்பகதூர் நரசிம்ம ஐயருக்கு ஏற்பட்டது. சட்டென்று பதறித் திரும்பிப் பார்த்தார். காளி சொரூபமாகத் தம் மனைவி தலை விரித்துப் பல்லை இளித்துக் கொண்டு அண்டையில் வந்து நிற்பதுபோல, ஒரு விநாடி அவர் கண்ணில் பட்டது. அடுத்த விநாடி பிரமை நீங்கிவிட்டது. அண்டையில் யாரும் இல்லை. 'என்ன பைத்தியக்காரச் சிந்தனைகள் இன்று' என்று? எண்ணியவராக, ஈஸிச்சேரில் அசைந்து நிமிர்ந்து உட்கார்ந்தார் ராவ்பகதூர் நரசிம்ம ஐயர்.

வானம் வெளிரிட்டுக்கொண்டிருந்தது. அதிகாலையில் எழுந்து சிலர் அவசரமான தங்கள் அலுவல்களைப் பார்க்கத்

தெருவோடு விரைந்துகொண் டிருந்தார்கள். அவர்கள் ஏழைகள்! கூலி வேலை செய்பவர்கள்: ரிக்ஷா இழுப்பவர்கள்; அல்லது இதுபோன்ற வேறு ஏதாவது வேலை செய்து அன்றாடம் சம்பாதித்துப் பிழைப்பவர்கள். இவர்களைப் போன்றவர்கள் பலர் சேர்ந்துதான், தமது புதுப் பங்களாவைக் கட்டி முடித்தார்கள் என்று எண்ணினார் ராவ்பகதூர். ஆனால், அதற்குமேல் அவர்களைப்பற்றிச் சிந்திக்க, அவருக்குத் தேவையில்லை. அவர்களுக்குச் சேரவேண்டிய கூலியெல்லாந்தான் ஜாடாவும் கொடுத்துப் பட்டுவாடா ஆகிவிட்டதே!

எதிரே தமது புதுப் பங்களாவின் பக்கம் திரும்பினார் ராவ்பகதூர் நரசிம்ம ஐயர். மரங்களினூடே புலர்ந்துகொண்டிருந்த இளம் ஒளியில் தெரிந்தது பங்களா. 'மிகவும் அழகாகத்தான் கட்டியிருக்கிறது!' என்று எண்ணினார். வீட்டை வந்து பார்த்த ராவ்பகதூர் சீனுவும் அப்படித்தான் சொன்னார். இன்று வரும் மற்றவர்களும் தம்மிடம் அப்படியேதான் சொல்லுவார்கள் என்று நினைத்தபோது, ராவ்பகதூரின் உடல் புளகித்தது.

மறுபடியும் யாரோ அண்டையில் வந்து நின்று நகைப்பது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது நரசிம்ம ஐயருக்கு. ஆனால் இந்தத் தடவை அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. தமது பிரமையை அடுத்த விநாடியே தீர்த்துக்கொண்டுவிட்டார் அவர்.

இதற்குமுன் எவ்வளவோ நாட்கள் - அவரது வாழ்க்கையின் சிகரங்கள் என்று சொல்லக்கூடியவை - வந்து போய் விட்டன. முக்கியமாக, அவருக்கு ராவ்பகதூர்ப் பட்டம் வந்த செய்தி பத்திரிகையில் வெளிவந்திருந்த அன்று காலை முதல் இரவு தூக்கம் வந்தது வரையில் நடந்த எல்லா விஷயங்களும், அற்பமான சிறு விஷயங்கள்கூட, அவருக்கு நன்றாக ஞாபகமிருந்தன. அதே போன்ற இன்னொரு நாள், இன்று இதோ அவர் கண்முன் உதயமாகிக்கொண் டிருந்தது.

வானத்திலே விசித்திரங்கள்—ஏக வர்ண விசித்திரங்கள்-நிறைந்திருந்தன.

வீட்டிலும் வெளியேயும் ஜன சந்தடி கேட்க ஆரம்பித்து விட்டது. நாதசுரக்காரர்கள் வந்துவிட்டார்கள். இன்னும் ஐந்து நிமிஷத்தில் அவர்கள் ஊத ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் வாசிக்க ஆரம்பித்தவுடனே எழுந்து ஆகவேண்டிய காரியங்களைக் கவனிப்பது என்று எண்ணினார் ராவ்பகதூர் நரசிம்ம ஐயர்.

இந்த எண்ணம் அவர் மனத்தில் தோன்றியவுடனே, யாரோ குனிந்து அவர் காதண்டையில் வந்து, "ஹோ! ஹோ!" என்று நகைப்பதுபோல் கேட்டது. அந்த நகையொலி காதின் வழியாகப் புகுந்து தம் உள்ளத்தைப் பற்றிக்கொண்டது போலவும், தம் உடலில் இருந்த ரத்தத்தை எல்லாம் உறிஞ்சிவிட்டது போலவும், அவர் உணர்ந்தார். கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டு ஈஸிச்சேரிலிருந்து எழுந்திருக்க முயன்றார். முடியவில்லை. யாரோ மார்பிலே ஆணி அடித்து அவரை அசையவொட்டாமல் தடுப்பதுபோல் இருந்தது.

புதுப் பங்களாவிலிருந்து மெல்லிய இனிய நாதசுர கானம், காலைக் காற்றிலே மிதந்து வந்தது.

---

# பேரன்பு

"இன்னிக்கி ஏதாவது நல்ல ராஜா ராணிக் கதை சொல்லு பாட்டி" என்று சுந்தாப்பாட்டியின் மடிமேல் ஏறி உட்கார்ந்துகொண்டு அதிகாரம் பண்ணினாள் சரோஜா.

"ராஜா ராணிக் கதையா? எனக்குத் தெரிஞ்ச ராஜா ராணிக் கதைகளையெல்லாம் உனக்குச் சொல்லியாயிடுத்தே!" என்றாள் சுந்தாப்பாட்டி.

"புதுசா ஏதாவது சொல்லேன், பாட்டி!" என்று சரோஜா உத்தரவிட்டாள்.

"புதுசா எனக்கு ஒண்ணும் தெரியாதேடி, கண்ணு!"

"உனக்கா தெரியாது? பொய் சொல்றே நீ" என்றாள் சரோஜா ஆச்சரியத்துடன். இவ்வளவு பெரிய பாட்டி இப்படிப் பொய் சொல்கிறாளே என்று குழந்தைக்கு ஆச்சரியமாக இருந்தது.

என்ன பதில் சொல்வது என்று அறியாமல் சுந்தாப்பாட்டி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

"பொய் சொல்லாதே பாட்டி, ராஜா ராணிக் கதை சொல்லு பாட்டி" என்று சரோஜா மேலும் வற்புறுத்தினாள். சுந்தாப்பாட்டி சொன்னாள்.

* * * *

**வெ**கு காலத்துக்கு முன் ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு அழகிலே சிறந்த ஒரு ராணியும், அறிவிலே சிறந்த ஒரு மந்திரியும் இருந்தார்கள். வீரப்போர்கள்

பல புரிந்து அவனுடைய முன்னோர்கள் ஜயித்துக் கொடுத்திருந்த பரந்த ராஜ்யமும் இருந்தது.

அவனுடைய ராஜ்யத்திலே சுபிக்ஷம் குடிகொண்டிருந்தது. தாது வருஷத்திலே கூட அங்கே பஞ்சம் வருவது கிடையாது. மாசம் மும்மாரி பெய்தது. நிலங்கள் தக்க காலத்தில் சாகுபடி செய்யப்பட்டுச் செழித்துக் கொழித்தன. வருஷம் பூராவும் ஆறுகளும் நீர் நிலைகளும் நிறைந்திருந்தன. மலை வளமும் நில வளமும் கடல் வளமும் நிரம்பிச் செழித்திருந்தது அந்தத் தேசம்.

இவ்வளவு இருந்தும் அரசனுக்கும் அரசிக்கும் மந்திரிக்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும் மனசிலே பெருங் குறை ஒன்றிருந்தது. வெகு காலம் வரையில் ராஜாவுக்குப் புத்திரனே பிறக்கவில்லை.

ராஜாவும் ராணியும் செய்யாத தான தருமங்கள் இல்லை. பூஜை புனஸ்காரங்கள் இல்லை, தங்கள் நாட்டுத் தெய்வங்களை மட்டுமின்றிக் கடல் கடந்து வந்திருந்த அன்னிய தெய்வங்களையும் பூஜித்து வேண்டிக்கொண்டார்கள். நாடெங்கும் பற்பல தெய்வங்களுக்கும் பற்பல கோயில்கள் கட்டுவித்தார்கள். பட்டினியும் பாரணையும் மாறிமாறி ஏற்றார்கள். கைலாசம் முதல் குமரி வரை உள்ள புண்ணிய தீர்த்தங்கள் ஒரு கோடியிலும் முழுகி எழுந்தார்கள். புத்திரனில்லாத குறை தீரவில்லை.

விதியுடன் போராடுவது வீண் என்று மன முடைந்து அலுத்துப் போன சமயம் ஒரு கிழ ஜோசியர் வந்தார். அவர் எல்லாக் கிரகங்களையும் சரிவரப் பரிசீலனை செய்து பார்த்துவிட்டுச் சொன்னார்: "இன்னும் இரண்டு வருஷத்தில் நீங்கள் இருவரும் குமரித் துறையில் நீராடிவிட்டு வருவீர்கள். திரும்பிய ஒரு வருஷத்தில் கோடி சூரியனைப் போல ஒளிவீசும் ஒரு பிள்ளை பிறப்பான்" என்றார் ஜோசியர்.

ஜோசியருக்கு மன்னன் ஏராளமாகப் பொன்னும் வெள்ளியும் தானமாகக் கொடுக்கப் போனார். ஆனால் ஜோசியர்

அவற்றை அங்கீகரிக்க மறுத்து விட்டார். நவக்கிரகங்களை மேலும் பரிசீலனை செய்தார்: ஏதோ சொல்ல வாயெடுத்தார்; சற்றுத் தயங்கினர்.

ஆவலே உருவாக நின்ற அரசன், "தாராளமாகச் சொல்லுங்கள். தயங்க வேண்டாம். கிரகங்கள் என்ன சொல்கின்றன?" என்று கேட்டான்.

"அப்படிப் பிறக்கும் அந்தக் குமாரனுல் நீங்கள் கிழ வயதில் ராஜ்யத்தை இழந்து நாடோடிகளாகத் தேச சஞ்சாரம் செய்ய நேரிடும்" என்ருர் ஜோசியர்.

"ஹா!" என்ருன் அரசன். "பிறகு......?" என்று கேட்டான்.

"தங்கள் புத்திரன் இழந்துவிட்ட ராஜ்யத்துக்குப் பதில் இப் பிரபஞ்ச முழுவதுமே பரந்துள்ளதாக மக்களின் மனத்திலே ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பான். அன்பு என்னும் நித்யத்துவத்துக்குப் புத்துயிர் கொடுப்பான் அவன்" என்ருர் ஜோசியர்.

அண்டையில் நின்ற ராணிக்கு ஜோசியர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரியவில்லை. ஆனல் அவள் மனம் கனிந்து குளிர்ந்திருந்தது. அரசனுடைய முகமும் ஆனந்தத்தாலும் வியப்பாலும் மலர்ந்தது. தன் பொக்கிஷத்திலிருந்ததை எல்லாம் அள்ளி ஜோசியர் கையில் கொடுக்க விரும்பினன் அரசன். மந்திரி தடுத்தான். ஜோசியரும் அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.

அக் கிழ ஜோசியர் சொன்னதையே வேதவாக்காக நம்பிக் கொண்டு ரர்ஜாவும் ராணியும் புது உத்ஸாகத்துடன் வாழ்க்கை நடத்தினர்கள். கிழவர் சொன்னபடியே நடக்கவும் நடந்தது.

உலகத்திலுள்ள ஒளியெல்லாம் திரண்டு உருவெடுத்து வந்ததுபோல அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவனைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள் ராஜாவும் ராணியும். ராஜகுமாரனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக

வளர்ந்து பெரியவனானான். அரச குமாரர்களுக்கு ஏற்ற எல்லாக் கலைகளையும்அவன் நன்கு கற்றுணர்ந்தான். யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வில்வித்தை, வாள் வித்தை எல்லாவற்றிலுமே நல்ல தேர்ச்சி பெற்று அவன் பதவியினால் மட்டுமின்றி பலத்திலும் அறிவிலும் பயிற்சியிலும் தேசத்திலேயே முதல்வனானான். அவனுக்கு வயதை மீறிய ஞானமும் அறிவும் இருந்தன. தங்களிடையே இரண்டாவது ராமன் அவதரித்து விட்டான் என்று எண்ணி மக்கள் அவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

வேட்டையாடுவதும் வில்வித்தையும் மல் யுத்தமும் இராஜகுமாரனுடைய மனத்துக் குகந்த பொழுது போக்குகளாக இருந்தன.

இப்படி யிருக்கையில் ராஜாவுக்கும் ராணிக்கும் வயதாகிக் கொண்டிருந்தது. ராஜகுமாரனுக்கும் கலியாண வயது வந்துவிட்டது. அவனுக்குத் தக்க பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து வைத்துவிட்டு, பின்னர் நாட்டுக்கு அவனை மன்னனாக முடி சூட்டிவிட்டு, தாங்கள் நிம்மதியாக இருக்க வேண்டுமே என்று ராஜாவும் ராணியும் விரும்பினார்கள்.

இராஜகுமாரனின் புகழ்—அழகன் என்றும் வீரன் என்றும் அறிஞன் என்றும் நாடெங்கும் பரவி யிருந்தது. ஐம்பத்திரண்டு தேசத்து அரசர்களும் அவனுக்குத் தங்கள் தங்கள் பெண்ணைக் கொடுத்துச் சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார்கள். ராஜ குமாரத்திகளின் சித்திரங்களைத் தீட்டித் தூதுவர்களிடம் கொடுத்தனுப்பி ஓலை விட்டார்கள்.

சித்திரங்கள் எல்லாமே அழகாகத்தான் இருந்தன என்றுபட்டது ராஜகுமாரனுக்கு. ராஜகுமாரிகளை நேரில் பார்த்தாலும் அழகாகத்தான் இருப்பார்கள். ஓரிருவரின் சித்திரம் அதி அற்புதமான அழகைக் காட்டியது. ஆனால் அவர்களில் யாரிடமும் ராஜகுமாரனின் மனம் செல்லவில்லை. இதைத் தன் தகப்பனாரிடமும் மந்திரியிடமும் ராஜகுமாரன் ஒளிக்காமல் சொல்லிவிட்டான்.

வேடிக்கையாக அவன் மேலும் சொன்னான்: "இந்த ஐம்பத்திரண்டு தேசத்து ராஜகுமாரிகளையுமே கலியாணம் பண்ணிக்கொண்டுவிட நான் தயார்—நீங்கள் அப்படி விரும்பினால். ஆனால் அவர்களில் யாரிடமும் என் மனம் ஈடுபடாது என்பது மட்டும் நிச்சயம்."

அரசன் வருந்தினானே தவிரத் தன் பிள்ளையை வற்புறுத்தவில்லை.

இதற்கிடையில் ராஜகுமாரன் அடிக்கடி தனியாகவும் வேடுவர்களுடனும் வேட்டையாடக் காட்டுக்குப் போய் வந்துகொண்டிருந்தான். இப்படி அவன் ஒருதரம் தனியாகப் போய்விட்டுத் திரும்பி வரும்பொழுது தனியாக வரவில்லை. ஓர் அழகியையும் உடன் அழைத்து வந்தான்.

அந்த அழகியின் கண்கள்......ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டிருப்பானேன்? தவிரவும் அவள் அழகை வர்ணிப்பது என்பது கவிகளால்கூட ஆகாத காரியம். அவ்வளவு அழகி அவள்.

"இவளையேதான் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்றான் ராஜகுமாரன்.

அரசன் எதுவும் தடுத்துக் கூறவில்லை. ஆனால் அந்த அழகி யார்? தன் மகன் எங்கே எப்படி அவளைச் சந்தித்தான் என்பதை அறிய முயன்றான். காட்டில் ஒரு தடாகக் கரையில் அவள் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்ததைக் கண்டு தேற்றி ராஜகுமாரன் அவளை அழைத்து வந்திருந்தான். அவளைப்பற்றி வேறு ஒரு விவரமும் அவனுக்கும் தெரியாது. "ஆனால் இவள்தான் என் துணைவி என்று என் மனம் அங்கீகரித்துவிட்டது. அவ்வளவுதானே வேண்டியது?" என்றான் அவன்.

ராணி அந்த அழகியையே விசாரித்துப் பார்த்தாள். கன்னி வாயைத் திறக்கவேயில்லை. ராணிக்குத் தாழ்ந்து நமஸ்காரம் செய்துவிட்டுக் குனிந்த தலை குனிந்தபடியே ஒதுங்கி நின்றாள்

அவள். அந்த அழகி ஊமையோ என்று ராணிக்குச் சந்தேகம் தோன்றிவிட்டது.

ஆனால் சந்தேகத்துக்கு அவசியமில்லை. மாலையில் வீணையை மீட்டிக்கொண்டு அந்த அழகி சரஸ்வதியே போல வீற்றிருந்து இனிய கீதங்களை இசைத்தாள். அக் கீதங்கள் கேட்போர் காதில் தேவகானமாக ஒலித்தன ; கேட்பவரை ஆனந்த மய மான ஒரு புது உலகிலே கொண்டுபோய்ச் சேர்த்தன.

கலியாணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

காட்டுக்கு வேட்டையாடப் போவதையும், மல் யுத்தங்க ளில் ஈடுபடுவதையும் அரச குமாரன் நிறுத்திவிட்டான். ஆற் றங் கரையிலே அழகான வசந்த மாளிகை நிர்மாணித்துக் கொண்டு தன் காதலியுடன் இன்ப வாரிதியிலே ஆழ்ந்துவிட் டான். அறுபது நாழிகையும் அங்கே இன்னிசையும் நடனமும் கதையும் கவிதையுந்தான்.

ராஜ்ய காரியங்கள் எல்லாம் கிழ ராஜாவின் மேற்பார்வை யில், மந்திரியின் திறமையால் ஒழுங்காகவே நடைபெற்று வந் தன. எனினும், ராஜாவும் ராணியும் மந்திரியும் பல வருஷங்க ளுக்கு முன் கிழ ஜோசியர் சொன்ன வார்த்தைகளை எண்ணித் துக்கித்தனர். ஜோசியரின் வார்த்தைகள் பலிக்கும் காலம் வந்து விட்டதுபோல் இருக்கிறதே என்று அஞ்சித் துணுக்குற்றனர்.

“நடப்பது நடக்கும். நடந்தே தீரும்” என்று எண்ணி அவர்கள் தங்களையே தேற்றிக்கொண்டார்கள்.

எனினும், அரச குமாரனின் மனத்தைச் ‘சரியான வழியில்’ திருப்ப அவர்கள் தங்களாலான முயற்சிகளையும் செய்யாமல் இல்லை. இன்பம் திகட்டியிருந்த ஒரு சமயம் ராஜகுமாரனை வேட்டையாடக் காட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். சித்தப் பிரமை பிடித்தவன்போல, மனத்தை எதிலோ பறிகொடுத்த வன்போலச் சுய ஞாபகம் இல்லாமல் வந்தான் அவன். ஆனால் வேட்டை ஆரம்பித்ததும் அவன் மனம் சற்றே மாறுவதுபோல் இருந்தது.

ஒரு மானைத் துரத்திப்போய், அதை எய்து வீழ்த்த ஓர் அம்பை வில்லில் பூட்டினான். அந்த நிமிஷமே விதி குறுக்கிட்டது. மேலும், தெய்வத்தின் தூண்டுதலால், ஓடிக்கொண்டிருந்த மான், சுபாவத்துக்கு மாறாக நின்று திரும்பி ராஜகுமாரனைப் பார்த்தது. அதன் பார்வை அவனுடைய இதயத்தைப் பிளப்பதுபோல் இருந்தது. வில்லும் வில்லில் பூட்டிய அம்பும் கை நழுவிக் காலடியில் விழுந்துவிட்டன. அவற்றைத் திரும்பவும் அரச குமாரன் எடுக்கக்கூட இல்லை.

"அந்தக் கண்கள் !......அவள் கண்களேதான் !" என்று ராஜகுமாரன் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டது அண்டையில் நின்றவர்கள் காதில் விழுந்தது.

மான் தப்பி ஓடிவிட்டது. அதற்குமேல் அரச குமாரன் வேட்டையில் கலந்துகொள்ளவில்லை. சித்தத்தையும் சிந்தனையையும் பறிகொடுத்தவன்போல அவன் இன்ப மாளிகை திரும்பினான். அவன் கண்களிலே அன்பு ஒளி நிறைந்திருந்தது. அவன் உள்ளத்திலே ஆனந்தம் நிறைந்திருந்தது.

காலக்கிரமத்தில் அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அன்புப் பிணை அவன் நெஞ்சத்தை இன்னும் இறுக்கிப் பிடித்தது. ஒரு காலத்தில் முரட்டு மல்லர்களின் குத்து வரிசைகளில் ஈடுபட்டு நின்ற அவன் இப்பொழுது மல்லிகைப் புஷ்பம் போன்ற மிருதுவான சிறு கரங்களுடன் மல்லுக்கு நின்றான்.

கிழ அரசனும் அவன் தேவியும் ஜோசியனின் வார்த்தைகளை உன்னி உன்னித் துன்பத்திற்கு ஆளாகிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கும் மறதி என்ற ஆறுதல் கிடைத்தது சில சமயம்.

குழந்தை பிறந்து ஒரு வருஷம் ஆவதற்கு முன்னரே தெற்கேயிருந்து செய்தி வந்தது. பெரும் படையைத் திரட்டிக்கொண்டு பகை மன்னன் ஒருவன் படையெடுத்து வந்துகொண்டிருந்தான். அரசகுமாரன் பழைய போர் லக்ஷ்யங்கள் தன் உள்ளத்திலே கொதித்து எழுந்து மூள, ஒரு பெருஞ் சேனை

யுடன் பகைவனை எதிர்த்துச் சென்றான். எட்டு மாதங்கள் கடும் போர் செய்து வெற்றியும் பெற்றான். ஆனால் ஜயலக்ஷ்மியின் கோயிலில் வெற்றி விழாக் கொண்டாடி பூஜை செய்யும் போது அரசகுமாரன் இனித் தான் யுத்த காரியத்தில் ஈடுபடுவதில்லை என்று ஜயலக்ஷ்மியின் சந்நிதியிலேயே பிரதிக்ஞை செய்துவிட்டான். கிழ மந்திரியும் அரசனும் இந்தத் திடீர்ப் பிரதிக்ஞையைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். ஆனால் அரசகுமாரனின் காதலிமட்டும், "நன்று" என்றாள். "நான் வந்த காரியம் பூர்த்தியாக இன்னும் சில நாட்களே உள்ளனபோலும்" என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

இரண்டொரு வருஷங்களுக் குள்ளாகவே நாலா பக்கங்களிலிருந்தும் பகைவர்கள் படை திரட்டிக்கொண்டு நமது அரசனை எதிர்த்து வந்துவிட்டார்கள். அரசன் கிழவன். அரசகுமாரனோ போர்த்தொழில் செய்வதில்லை என்று பிரதிக்ஞை செய்துவிட்டான். நாடு சிறிது சிறிதாகப் பகைவர் வசம் ஆகிக்கொண் டிருந்தது.

"என் ராஜ்யத்தைத்தானே அவர்கள் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள்? எடுத்துக்கொள்ளட்டுமே! இதற்காக ஏழை மக்களையும், போர் வீரர்களையும் துன்புறுத்துவானேன்? நான் என்றுமே இந்த ராஜ்ய விஷயங்களிலிருந்து விடுபட்டு நின்றவன்தான்" என்றான் ராஜகுமாரன்.

"பிரியே! உனக்கு ஏதாவது ஆட்சேபம் உண்டோ, நமது நாட்டை அவர்களிடம் ஒப்பித்துவிட்டு வெளியேற?" என்று கேட்டான் அவன்.

"ஆட்சேபமா? எதற்கு? வில்லும் வித்தையும் ராஜ்யமும் என்றும் நமது அன்பிற்குக் குறுக்கேதானே நின்றன?" என்றாள் அவள்.

தானாகவே தன் ராஜ்யத்தைத் தன் பகைவர்களுக்குப் பகிர்ந்தளித்துவிட்டு அவன் வெளியேறி விட்டான்.

அதற்குப் பின்னர் அவன் வெகு நாள் உயிருடன் இருந்தான். கடைசி வரையில் தான் செய்தது அசாதாரணமான

காரியம் என்றே அவனுக்குத் தெரியவில்லை. சாதாரண மனிதன் தன் மனைவியிடமும் குழந்தையிடமும் காட்டும் அன்பே தன் காரியத்துக் கெல்லாம் அடிப்படையானது என்று அவன் நம்பி இருந்தான்.

ஆனால் அவன் காதலி தெய்வாம்ச மானவள் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். அன்புத் தேவியே அவ்வடிவு எடுத்து வந்து அவனை ஆட்கொண்டு, அடிமைப்படுத்தி விட்டாள் என்று சொல்லிக்கொண்டார்கள். கணவன் இறந்த போது, ஒரு துளி கண்ணீர்கூட வடிக்காமல் அவள், "நாம் இருந்ததும் வாழ்ந்ததும் பூராவும் வியர்த்தமாகி விடாது" என்று சொல்லிவிட்டு அந்தர்த்தான மாகிவிட்டாள் என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள். சொல்லியது மட்டுமல்ல; நம்பவும் நம்பினார்கள்.

பேரன்புக்குப் பெரும் உதாரணமாக அவனைக் கவிகள் பாடினார்கள்; சாதாரண மக்கள் அவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

ஆனால் நாளடைவில் அவன் பெயர் கூட மக்கள் மனத்திலிருந்து அகன்றுவிட்டது.

* * * *

"கதை சரியாகப் புரியவில்லையே!" என்றேன் நான்.

"உனக்கு என்னமாடா புரியும்? புரியாதுதான். குழந்தைக்குப் புரிந்திருக்கும். சரோஜா! உனக்குப் புரிந்ததோ?" என்றாள் சுந்தாப் பாட்டி.

"ஊம்" என்றாள் சரோஜா.

---

# தூக்கம்

நான் போனபோது சுவாமிநாதன் கைகளைப் பின் கட்டாகக் கட்டிக்கொண்டு முன் கூடத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண் டிருந்தார். அங்கே வெளிச்சம் அதிகம் இல்லாததால் எனக்கு அவர் முகம் சரியாகத் தெரியவில்லை. அவர் முகத்தை நான் பார்த்திருந்தேனானால் நிச்சயமாக நான் போன விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்க மாட்டேன்.

சற்றுப் பதற்றமாகவே, "ஏன் ஸார்? போயிருந்தேளா? அவர் அகப்பட்டாரா? நான் சொன்ன காரியத்தைப்பற்றிக் கேட்டீர்களா?" என்று கேட்டேன்.

"யாரு? துரையா? துரை ஊரில் இல்லை. நேற்றும் போனேன். இன்று அல்லது நாளைக்குத்தான் வருவான் என்று சொன்னார்கள். இன்று பூராவும் எனக்கு வேறு வேலையாகப் போய்விட்டது. உங்கள் விஷயத்தைக் கவனிக்க ஒழியவில்லை. நாளைக்குப் பார்த்து ஏற்பாடு செய்கிறேன். தவிரவும் அன்று நீங்கள் சொன்ன மாதிரியிலிருந்து அப்படி ஒன்றும் அவசரம் இல்லை என்று நினைத்தேன்" என்றார் சுவாமிநாதன்.

சாதாரணமாக எவ்வளவு சின்ன விஷயமானாலுங்கூட வெகு உத்ஸாகத்துடன் பேசும் சுவாமிநாதனா இன்று இப்படிப் பேசியவர் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கேட்ட விஷயத்தில் வேறு விஷயத்தைப் புகவிடாமல்கூட அவரால் பேச முடிகிறதே! ஆச்சரியந்தான்! நேரடியாகப் பதில் சொல்லி, "போய்விட்டு வாருங்களேன்" என்கிற தோரணையில் அவர் பேசியதைக் கேட்டு நான் பிரமித்துப்போனேன்.

ஆனால், "போய்விட்டு வா" என்று சொன்னால்கூட, "போய்விட்டு வரவா? போய்விட்டு வரவா?" என்று

கேட்டுக்கொண்டு பேசுவதற்கு உட்காருகிற சுபாவம் படைத்த ஆசாமி அல்லவா நான் ?

" ஏன் ஸார் ? இன்று உங்களுக்கு ஏதாவது உடம்பு சரியாக இல்லையா ? என்னவோ போல இருக்கிறீர்களே ! " என்றேன்.

" என் உடம்புக்கு ஒன்றுமில்லை. என் பயலுக்குத்தான் உடம்பு சரியாக இல்லை. வயிறு சரியாக இல்லை. கஞ்சி, மருந்து எதுவுமே வயிற்றிலே தங்கமாட்டேன் என்கிறது. நேற்று ராத்திரி முதல் அவஸ்தைப் படுகிறான் " என்றார் சுவாமிநாதன்.

சுவாமிநாதனுடைய பழக்க வழக்கங்கள் ஒன்றிரண்டு எனக்குத் தெரியும். நான் சொன்னேன் : " இருந்தாலும் இரண்டு வயசு சரியாக நிரம்பாத குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய் நீங்க ஹோட்டல்லே வடை வாங்கித் தரது பிசகுதான் ஸார். நம்மைப்போலப் பெரியவாளுக்குக்கூட, சில சமயம் ஹோட்டல் சாமான் ஒத்துக்க மாட்டேன் என்கிறது. குழந்தைக்கு எப்படி ஒத்துக்கும் ! ஒண்ணும் பிசகாயிராது ; சாப்பிட்டது ஏதாவது ஜீரணமாகாமல் இருக்கும். அவ்வளவு தான். நாளைக்குத் தானே சரியாய்ப் போய்விடும்."

" ஆமாம், ஆமாம், நீங்க சொல்றது சரிதான். அழறானேன்னு நான் ஏதாவது வாங்கித்தரேன் ; என் தம்பி வேறு ஏதாவது வாங்கித் தரான் ; அவள் வேறே கொடுத்து விடுகிறாள் ! எல்லாமாகச் சேர்ந்து குழந்தையைப் படுத்தறது ! " என்றார் சுவாமிநாதன்.

இப்பொழுதுதான் சற்றே வெளிச்சமாக இருந்த இடத்துக்கு நகர்ந்து வந்தார் சுவாமிநாதன். முகத்தைக் கண்ட நான் திடுக்கிட்டுப் போனேன். அதில்தான் என்ன கவலையும் ஏக்கமும் படர்ந்திருந்தன ! ஏன் இப்படி ?

என் மனசில் இருந்த கேள்வியை ஊகித்து அறிந்துகொண்டவர் போல அவர் பதில் அளித்தார் : " ஏற்கனவே ஒரு தரம் பட்டாச்சோ இல்லையோ ? இப்போ பயமா இருக்கு. தவிரவும் நேற்று ராத்திரி பூராவும் தூக்கமே இல்லை."

நான் தைரியம் சொன்னேன்: "என்ன ஸார் இப்படிப் பயப்படறேள்? தானே நாளைக்குச் சரியாகப் போயிடும். நீங்கள் பயப்படறபடி எல்லாம் ஒன்றும் நடந்து விடாது. கவலைப் படாதீர்கள். மனுஷன்னு பிறந்தவனைக் கடவுள் சோதிக்கத் தான் சோதிக்கிறார். ஆனால் எப்பவும் சோதித்துக்கொண்டே இருப்பாரா என்ன?" என்றேன்.

நான் கூறியதாலெல்லாம் தைரியம் வந்து விடவில்லை அவருக்கு. அவர் சிந்தனையை எங்கேயோ பறி கொடுத்துவிட்டு நான் சொன்ன வார்த்தைகளைக் காதில்கூட வாங்காமல் உட்கார்ந்திருந்தார்.

அவர் மூன்று நான்கு வருஷங்களுக்குமுன் இரண்டு வயசுப் பையன் ஒருவனைப் பறி கொடுத்தவர் என்று நான் கேள்விப் பட்ட துண்டு. அவர் அப்போது எவ்வளவு கஷ்டப்பட்டார் என்றும், அவருக்கு ஆறுதல் சொல்லி மனசை மாற்ற யாராலும் முடியவில்லை என்றும் பிறகு கேள்விப்பட்டேன்.

"சுத்தக் கோழையாக இருக்கிறேளே, ஸார்! கொஞ்சம் தெம்பா இருக்க வேண்டாமோ? குழந்தைகளுக்குச் சதா சர்வதா உடம்பைப் படுத்திக்கொண்டுதான் இருக்கும்" என்று சொன்னேன் மேலும்.

அவர் வேறு எங்கேயோ ஞாபகமாக, "உம்" என்றார். பிறகு ஒரு விநாடி கழித்து, "தம்பி டாக்டரிடம் குழந்தையைக் காட்ட எடுத்துக்கொண்டு போயிருக்கிறான். போய் ஒரு மணி ஆச்சு. வந்துவிடுவான் இப்போ" என்றார்.

"இந்தப் பனியிலேயா?" என்று நான் கேட்டுக்கொண்டிருக்கும்போதே அவர் தம்பி வெங்கிட்டு வந்துவிட்டான். அவன் தன்னுடன் குழந்தையைக் கொண்டு வரவில்லை.

அண்ணா பதற்றப்படுவாரே, விஷயத்தை உடனே சொல்ல வேண்டுமே என்று அவனுக்குக் கவலை வேண்டாமோ? கவலை இருந்தாலும் அண்ணாவைக் கொஞ்சம் அலக்ஷ்யம் செய்கிற மாதிரிதான் இருக்கட்டுமே என்று எண்ணினானோ?

"எப்ப ஸார் வந்தேள்?" என்று என்னைச் சாவகாசமாக விசாரிக்கத் தொடங்கினான்.

சுவாமிநாதன் குறுகிட்டார்: "அவர் இப்பத்தான் வந்தார். டாக்டர் என்ன சொன்னார்? குழந்தையை ஆஸ்பத்திரியிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டாயா?" என்று கேட்டார்.

அப்படியும் வெங்கிட்டு நேரடியாகப் பதில் சொல்லவில்லை; "ராத்திரி ஆஸ்பத்திரியிலேயே இருக்கட்டும் என்றார் டாக்டர், சாப்பிட்டுவிட்டு என்னை ஆஸ்பத்திரியில் வந்து படுத்துக்கொள்ளச் சொன்னார்" என்றான்.

"குழந்தை உடம்புக்கு என்னவாம்? டாக்டர் என்ன சொன்னார்?"

"ஒன்றும் கவலைப்படவேண்டாம், காலையில் சரியாகப் போய்விடும். மருந்து கொடுக்கிறேன் என்று சொன்னார். அவ்வளவுதான்" என்றான் வெங்கிட்டு.

"சாப்பிட்டுவிட்டு நானும் வரேன், ஆஸ்பத்திரிக்கு" என்றார் சுவாமிநாதன்.

"நீ வர வேண்டாம்னு சொல்லச் சொன்னார் டாக்டர். நீயும் தூங்காமல் குழந்தையையும் தூங்கவிட மாட்டாய் என்று சொன்னார்" என்றான் தம்பி.

அவன் சொன்னது என்னவோ வாஸ்தவந்தான் என்று எனக்குப் பட்டது. ஆனால் அதற்காக இந்தக் குரலில், இத்தகைய பாவத்துடன் அவன் சொல்லியிருக்க வேண்டியதில்லை என்று எண்ணினேன் நான்.

அண்ணவும் தம்பியும் சாப்பிட எழுந்தார்கள். நானும் கிளம்பினேன். "என் விஷயம் ஒன்றும் அப்படி அவசரமானதல்ல. நாளைக்குக் காலையிலே வறேன். கவலைப்படாதீர்கள்! பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை" என்றேன்.

"பயம் என்ன ஸார்? அதெல்லாம் ஒண்ணும் இல்லை! முதல் சம்பவத்துக்குப் பிறகு எல்லாம் பழக்கமாகிவிட்டது,

ஸார். என் மனசே கல்லாயிடுத்தே!" என்றார் சுவாமிநாதன்.

நான் மாடிப்படி இறங்கிப் போகையில் சுவாமிநாதனின் மனைவி, "என்னவோ, வறவா போறவாகிட்டெல்லாம் அசட்டுப் பிசட்டுன்னு பேசிண்டிருக்கேளே! பொம்மனாட்டிகள், என்னைப் போன்றவா, பயப்படுவா—நீங்க சமாதானம் சொல்ல வேண்டியிருக்கும்! அதற்குப் பதில் நீங்க பயப்படறேள். நான் சமாதானம் சொல்ல வேண்டியிருக்கே!" என்று சொல்லிக்கொண்டிருப்பது என் காதில் விழுந்தது.

அதற்குள் படி இறங்கி வெளியேறிவிட்டேன். சுவாமிநாதன் என்ன பதில் சொன்னார் என்பது என் காதில் விழவில்லை.

வீடு போய்ச் சேர்ந்ததும் எனக்கு என்னவோபோல் இருந்தது. ஒரு வேலையும் ஓடவில்லை. சாப்பிட்டுவிட்டு, 'சுவாமிநாதனைப் போன்ற அறிவாளிகள்கூட இப்படி எல்லாம் காரணம் இல்லாமல் பயப்படுகிறார்களே, இதற்கு ஆதாரம் என்ன?' என்று சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பயத்துக்குக் காரணம் எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் கடவுளின் சித்தம் என்று ஒன்று உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள் அந்தச் சித்தம் எப்படி இருக்குமோ என்னவோ ஏதோ என்று பயப்படுவதிலே அர்த்தம் கொஞ்சம் உண்டு என்றுதான் எனக்குத் தோன்றிற்று. 'ஆசையால் பாசம் ஏற்படுகிறது; பாசத்தால் பயம் ஏற்படுகிறது' என்று புத்த தேவன் சொல்லியிருப்பது எவ்வளவு பொருத்தமான விஷயம் என்று சிந்தித்தேன். ஒரு சிறு குழந்தையிடம் அளவற்ற பாசம் வைத்துவிடுகிறான் தகப்பன். அது வளர்ந்து பெரியவனானபின் இப்படி, அப்படி என்றெல்லாம் திட்டம் போடுகிறான். குழந்தை வளர்ந்து பெரியவனான பின்பு அநேகமாகத் தகப்பனின் திட்டங்களை எல்லாம் கவிழ்த்துவிடத்தான் போகிறது. அப்படி இருந்தும் திட்டம் போடுவதை நிறுத்துவதே இல்லை தகப்பன். குழந்தைக்கு உடம்பு சரியாக இல்லாத போதெல்லாம், 'இப்படி எல்லாம் நான் திட்டம் போட்

டது தவமுே ! அது கடவுளுக்குச் சவால் கூறுகிற மாதிரி ஆகி விட்டதோ ?' என்று எண்ணித் தகப்பனின் மனம் துணுக்குறு கிறது. 'சோதித்தா விடுவார் கடவுள் ? சோதிக்கமாட்டார்' என்று மாறி மாறி மனசில் தோன்றிப் பயத்தையும் தெம்பை யும் ஊட்டுகின்றது ; அதே விநாடியில் முந்திய சம்பவம் ஒன்று ஞாபகம் வருகிறது. அவ்வளவுதான் ; மனிதன் தெளி வாக்ச் சிந்தனை செய்யும் சக்தியை இழந்துவிடுகிறான்.

நான் நினைத்தேன் ; வெங்கிட்டு சாப்பிட்டு விட்டு, அண் ணுவுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய வார்த்தை ஒன்றுகூடச் சொல்லாமல் டாக்டருடைய நர்ஸிங் ஹோமுக்குக் கிளம்பிவிடு வான். சுவாமிநாதனும் அவனுடன் போய்க் குழந்தையைப் பார்த்துவிட்டு வந்தாலும் வருவார் ; ஆனல் இரவு வீடு திரும்பி விடுவார். டாக்டர் போ என்று வற்புறுத்துவார். தவிரவும் வீட்டில் அவர் மனைவிக்கு யாரும் துணை இல்லை. திரும்பி வந்து படுக்கையை விரிப்பார், படுப்பார். படுக்கை கொள்ளாது; தூக்கம் வராது ; எழுந்து கைகளைப் பின் கட்டாகக் கட்டிக் கொண்டு முன் கூடத்தில் உலாத்துவார். ஈஸிசேரில் சிறிது நேரம் சாய்வார். படிக்கலாமா என்று தோன்றும். விளக்கைப் போட்டு ஒரு புஸ்தகத்தை எடுத்துப் பிரிப்பார் ; ஆனல் படிப்பு ஓடாது. இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் தூங்கிக்கொண் டிருக்கும் மனைவி விழித்துக்கொண்டு, "என்ன படிப்பு, அர்த்த ராத்திரிக்கு ? விளக்கு, கண்ணைக் குத்தறது ! படுத்துக் கோங்கன்னு !" என்பாள். 'எனக்கு மட்டும் தூக்கம் வர வில்லையே ! குழந்தையின் தாயாகிய அவளுக்கு மட்டும் எப் படித் தூக்கம் வருகிறது ?' என்று ஆச்சரியத்துடன் சிந்தித்த படியே விளக்கை அணைத்துவிட்டு, சுவாமிநாதன் மீண்டும் ஈஸிசேரில் அமர்வார். மீண்டும் மீண்டும் முதல் குழந்தையையும் இந்தக் குழந்தையையும் பற்றிச் சிந்தனைகள், உருத் தெரியாத சிந்தனைகள் பல எழுந்து அவர் உள்ளத்தில் குமுறும். முதல் நாள் தாம் அதை ஹோட்டலுக்கு அழைத்துப்போய் வடை வாங்கிக் கொடுத்தது தவறு என்று எண்ணுவார். ஆனல் அடுத்த விநாடியே கடவுள் சித்தம் அதுவானல் தாம் வேறு

என்னதான் செய்திருக்க முடியும் என்றும் எண்ணுவார். கோழி கூவும்; கிழக்கு வெளுத்துவிடும்!

குழந்தையின் தாய் எப்படியோ நிம்மதியாகத் தூங்கிவிடுகிறாள். இந்த விஷயத்தில் பெண்களை அறிவாளிகள் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுக்குக் கற்பனை குறைவு; நம்பிக்கை அதிகம். எந்தக் கஷ்டமும் வருவதற்கு முன் அவர்கள் மனசை அவ்வளவாகப் பாதிப்பதில்லை.

இப்படி எல்லாம் என்ன என்னவோ சிந்தித்துக்கொண்டே நான் பத்தரை மணிக்கெல்லாம் தூங்கிவிட்டேன்.

காலையில் எழுந்திருக்கும்போது மணி எட்டு. அவசர அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு காபி சாப்பிட்டுவிட்டு, சுவாமிநாதனின் வீட்டை நோக்கிக் கிளம்பினேன்.

சுவாமிநாதன் முன் கூடத்தில் கைகளைப் பின் கட்டாகக் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தார்.

"ராத்திரி பூரா நீங்க தூங்கவே இல்லைபோல் இருக்கே!" என்று கேட்டுக்கொண்டே நான் அவர் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன்.

"ஆமாம் ஸார், மனசை எவ்வளவோ திடப்படுத்திப் பார்த்துக்கொண்டும் தூக்கம் வர மறுத்துவிட்டது. படுக்கிறதும், ஈஸிசேரில் சாயறதும், பித்துப்பிடித்தவன் மாதிரி உலாத்துவதுமாக இப்படியே இரவைக் கழித்துவிட்டேன். ஆச்சு, எட்டரை ஆகிறதே! வெங்கிட்டு வந்துவிடுவான்" என்றார் சுவாமிநாதன்.

"நீங்க இருந்தாலும் இப்படிக் கோழை மனசாக இருக்கக்கூடாது, ஸார்! ஆச்சு! இதோ வெங்கிட்டு வந்துவிடுவான், குழந்தையையும் எடுத்துண்டு" என்றேன்.

சுவாமிநாதன் பதில் சொல்லவில்லை.

நான் மேலும் சொன்னேன்; "போனிலே வேணுமானல் கூப்பிட்டுக் கேட்கலாமே! உடம்பு சரியாகப் போயிருக்கும்! ஆனல் உங்க கவலையால் உங்களுக்குத்தான் உடம்புக்கு வந்து விடும்போல் இருக்கு!"

"போன்லே கேட்க வேண்டாம்னு பார்த்தேன். அவனுகச் சொல்லப்படாதோ? போன்லே சொல்லாதவன், கவலைப் படுவாளேன்னு மணி ஒன்பதாச்சே, வரக்கூடாதோ? என்ன தம்பி, ஸார்!" என்று சுவாமிநாதன் சொல்லிக்கொண் டிருக்கும்போது தெருத் திருப்பம் திரும்பி வெங்கிட்டு வந்துகொண் டிருப்பது தெரிந்தது. அவன் மட்டுந்தான் வந்துகொண் டிருந்தான். அவன் கையில் குழந்தையைக் காணேம் என்று கவனித்த நான் திடுக்கிட்டேன். சுவாமிநாதன் என்ன எண்ணிஞரோ என்று அறியவேண்டி நான் திரும்பிப் பார்த்தேன்.

அவர் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து தெருவில் ஓடித் தம் தம்பியை விசாரிக்கப் போவார் என்று எதிர்பார்த்த நான் ஏமாந்து போனேன். மூலையில் கிடந்த ஈஸிசேரை இழுத்து என் எதிரில் கொண்டு வந்து போட்டுக்கொண்டு அதில் சாய்ந்துகொண்டார் சுவாமிநாதன்.

இதற்குள் தெருவோடு போய்க்கொண் டிருந்த யாருடனே வம்வளப்பதற்குத் தாமதித்துவிட்டான் வெங்கிட்டு. சுவாமிநாதன் தம் தம்பியை மனசுக்குள் திட்டிஞரோ என்னவோ? ஆனல் அவர் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. எது வந்தாலும் வரட்டும், அநுபவிக்கத் தயார் என்று சொல்பவர்போல ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்; கண்களை மூடிக்கொண்டார்.

அரைப் பர்லாங்குக்கு அப்பால் தெருவில் யாருடனே நின்று உத்ஸாகமாகப் பேசிக்கொண் டிருந்த வெங்கிட்டுவையும், ஈஸிசேரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண் டிருந்த சுவாமிநாதனையும் நான் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். என்ன சொல்வது, என்ன செய்வது என்று எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.

திடீரென்று சுவாமிநாதனின் தலை ஒரு புறமாகச் சாய்ந்தது. அடுத்த விநாடி அவர் குறட்டை விடும் சப்தம் கேட்டது.

வெங்கிட்டு தடதடவென்று மாடிப் படியில் ஏறி வந்துகொண்டிருந்தான். சுவாமிநாதனின் மனைவி மாடிப்படியண்டை போய், "சப்தம் செய்யாமல் வாயேண்டா! தூங்கிண்டிருக்கிறார் அவர்" என்று குசுகுசுவென்று வெங்கிட்டுவை எச்சரித்தாள்.

குழந்தையைப் பற்றி அவள் ஒன்றும் விசாரிக்கவில்லை. ஆனால் அவள் விசாரிக்கு முன் வெங்கிட்டு, "மணி டாக்டர் ஆத்துக் குழந்தைகளோடே விளையாடிக்கொண்டிருக்கிறான். உடம்பெல்லாம் சரியாப் போச்சு. டாக்டர் தம் காரில் மத்தியான்னம் அழைத்துக்கொண்டு வந்துவிடுவதாகச் சொன்னார்" என்று மெதுவாகச் சொன்னது என் காதிலும் விழுந்தது.

# கிறுக்கெழுத்து

இன்னும் மயிரிழை தப்பியிருந்தால், பஸ் ஆறுமுகத்தின் மேல் ஏறியிருக்கும். பஸ்காரன்மேல் பிசகில்லை. தெரு ஓரத்தில் நடை பாதையில் மெள்ளத் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்த ஆறுமுகம் திடீரென்று நடு ரோடுக்கு அப்படி எகிறிக் குதித்து ஓடி வருவானென்று பஸ் ஓட்டுபவன் எதிர் பார்த்திருக்க முடியுமா என்ன ?

"என்னப்பா ? வூட்டிலே சொல்லிக்கினு வந்தூட்டியா?" என்று தன்னைப் பஸ்காரன் கோபமாக ஏசியது ஆறுமுகத்தின் காதில் விழுந்தது. அவனுக்கு வீடுமில்லை, சொல்லிக்கொள்ள யாருமில்லை என்று பாவம், அந்தப் பஸ்காரனுக்கு எப்படித் தெரியும் ? தன்னைத் தாண்டி ஓடிவிட்ட பஸ்ஸைப் பார்த்துக் கொண்டே ஆறுமுகம் ஆடி விழுந்துகொண்டு மேலே நடந்தான்.

அவன் ஆட்டத்துக்குக் காரணம் குடி அல்ல. அவன் அன்று குடிக்காததற்குக் காரணம் அவன் கையில் காசு இல்லாததுதான். அவன் கையில் இரண்டு காசிருந்தால் நிம்மதியாகக் குடித்துவிட்டுத் தன் கவலைகளையெல்லாம் மறந்து ஏதோ ஒரு தினுசான இன்பமும் சாந்தியும் பெற்றிருப்பான். அவனுக்கு அந்த உரிமைகூட இல்லையென்று யார் தடுக்க முடியும் ? ஒரு வாரமாக ஈசுவரன் அவனுக்கு அந்த அல்ப சாந்திக்குக்கூட வழியில்லாமல் வைத்துவிட்டான். ஆறுமுகம் குடித்தே ஒரு வாரம் ஆய்விட்டதென்றால், அவன் சாப்பிட்டு எவ்வளவு நாள் ஆகியிருக்குமென்று கணக்கில் நிபுணர்களைத்தான் கேட்க வேண்டும்.

"அந்தப் பஸ்ஸிலே மாட்டிக்கொண்டு உசிரை விட்டிருந்தாலும் சரியாய்ப் போயிருக்குமே!" என்று எண்ணினான் ஆறுமுகம்.

அப்படி எண்ணுவது சுலபமே தவிர, அந்த விநாடியிலே கூட அவனுக்கும் உயிர் வாழவேணுமென்ற ஆவல்தான் தலை தூக்கி நின்றது. சற்றுமுன் அவன் தெரு ஓரத்திலிருந்து நடுத் தெருவுக்கு எகிறிக் குதித்த காரணம் இந்த உயிர் வாழும் ஆவல் தான். ஓரத்தில் கிடந்த பாம்பு கடித்து உயிரை இழக்க அவனுக்கு இப்போது மனமில்லை. ஆனால் இப்போது...ஆறுமுகம் திரும்பிப் பார்த்தான். தெரு ஓரத்தில் சுருட்டிக்கொண்டு கிடந்தது பாம்பல்ல. ஒரு நீண்ட கப்பாணிக் கயிறுதான். பட்டணத்துப் பாதையிலே பாம்பு வெளிவந்து விட்டால்...!

"தெய்வமே, எனக்கு ஒரு வழி காட்ட மாட்டாயா?" என்று பிரார்த்தித்துக்கொண்டே ஆறுமுகம், கால்கள் பின்ன, தள்ளாடித் தடுமாறிக் கண்ணும் உடலும் சோர மேலே நடந்தான்.

அவனும் ஒரு காலத்தில் மனிதனாக, உழைத்துச் சாப்பிட்டு வாழ முயன்றவன்தான். அப்போதெல்லாம் அவனுக்கு அன்றாடம் அரை ரூபாய், முக்கால் ரூபாய் என்று கூலி வரும். அவனுடன் அவன் வறுமையையும் சுக துக்கங்களையும் பங்கிட்டுக்கொள்ள ஒரு பெண்பிள்ளையும் இருந்தாள். அதைவிட எவ்வளவோ சிறந்த வாழ்க்கை நடத்துபவர்கள் அநேகர் இருக்கலாம். ஆனால் ஆறுமுகம் அதையெல்லாம் எண்ணி ஆசையோ பொறாமையோ படவில்லை. ஏதோ அவன் வாழ்வும் அதிகக் கஷ்டமின்றி நடந்தது; பொழுது சில சமயம் கழிவதே தெரியாமலும் சில சமயம் வெகு சிரமமாகவும் கழிந்தது! உடம்பிலே பலம் இருந்தது; மனத்திலே எப்பொழுதும் சோர்வில்லை. சில விநாடிகளாவது தெம்பு இருந்தது.

திடீரென்று ஒரு நாள் அவனுக்குக் குளிரும் காய்ச்சலுமாக வந்துவிட்டது. ஒரு நாள், இரண்டு நாள்...ஐந்து நாள் பார்த்

தாள் அவன் பெண்சாதி. பிறகு யாரையோ இழுத்துக் கொண்டு அவனை விட்டு விட்டுப் போய்விட்டாள்.

ஆனால் அந்தக் காய்ச்சல் அவனை விட்டு வெகுநாள் வரை போக மறுத்தது: மாசக் கணக்காக அவன் தர்ம ஆஸ்பத்திரியில் கேட்பாரின்றிக் கிடந்தான். இதற்கிடையில் அவன் பிரக்ஞை இல்லாமல் கிடக்கும்போது அவன் குடிசையின் சொந்தக்காரன் குடிசையில் இருந்த சொற்ப தட்டுமுட்டுகளையும் வாடகை பாக்கியென்று பறிமுதல் செய்துகொண்டு போய்விட்டான்.

ஆஸ்பத்திரியிலிருந்து நடைப்பிணமாக வெளியே வந்தான் ஆறுமுகம். உடம்பிலே தெம்பில்லை. ஊரிலே தங்க இடமில்லை. பிழைக்க வழியும் இல்லாமல் போய்விட்டது. கொஞ்ச நாள் மயிலாப்பூரில் ஒரு வக்கீல் வீட்டில் தோட்டக்காரனாக வேலைக்கு அமர்ந்தான். ஆனால், முதல் மாசமே தம் மனைவியைத் திருப்தி செய்யும்படியாகத் தோட்டத்தில் உழைத்து அவனால் பாடுபட முடியவில்லை என்று அவனிடம் சம்பளப் பாக்கியைக் கொடுத்து விட்டு விரட்டி விட்டார் வக்கீல்.

அதுவரையில், குடிப்பதைத் தலைமுறை தத்துவமாக வந்திருக்கும் ஓர் வழக்கமாகச் செய்துவந்த ஆறுமுகம், குடியில் ஓர் இன்பம்—தன் வாழ்க்கையில் வேறு எதிலுமில்லாத ஓர் இன்பம்—இருக்கிறதென்று குடியை நாட ஆரம்பித்தான். அகப்பட்ட வேலையைச் செய்துகொண்டு, கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டு, காசு இருக்கும்போது குடித்துவிட்டுப் பட்டணத்துச் சோதாக்களில் ஒருவனாக ஆறுமுகம் தலையெடுத்து இப்பொழுது ஒரு வருஷத்துக்குமேல் ஆகிவிட்டது.

மயக்க வஸ்துக்கள் என்று சொல்லுகிறார்களே குடி, கஞ்சா இவை போன்ற வஸ்துக்களுக்கு மட்டுந்தான் மயக்கந் தரும் சக்தி உண்டென்று சொல்லுவதற்கில்லை. பசிக்கும் மயக்கம் உண்டு, போதை உண்டு. லட்சியம், காமம் இவையும்

கவனிக்குமிடத்து, மனிதன் மனத்தை மயக்கவல்ல சாதனங்களாகவே தோன்றுகின்றன.

ஆறுமுகம் குடித்து ஒரு வாரத்துக்கு மேலேயே ஆகிறது. சரியான உணவு அருந்திப் பத்துநாளுக்கு மேல் இருக்கும். பசி லாகிரியில் அவன் ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிபோலக் கனமின்றி, நடக்கிறோம் என்ற பிரக்ஞையில்லாமல் நடந்துகொண்டிருந்தான்.

ஆனால், நல்ல வேளை, அவனுக்கு லட்சியமென்ற போதை இல்லை. அவன் எழுதப் படிக்க அறியாதவன். தமிழில் ஒரு கவி, 'தனி ஒரு மனிதனுக்கு...' என்று ஆரம்பித்துக் கவிதை செய்து வைத்திருக்கிறார் என்று அவனுக்குத் தெரியாது. ரஷ்யா என்றால், 'வக்கீலையா தோட்டத்துக்கு அப்பால் இருக்கிறதே, அதுவா?' என்று கேட்பான் அவன். ஆனால் அவன் மங்கிய கண்கள் தூரத்தில் எங்கேயோ கனவு போலத் தெரிந்த ஏழைமை, பட்டினி பசி என்பதறியாத ஒரு லோகத்தில்தான் லயித்திருந்தன. இதையெல்லாம் வார்த்தைகளில் சொல்ல அவன் அறியான். சோஷியலிஸம் என்ற கொள்கை அவசியம் என்பதற்கே ருசுப்போல அமைந்திருந்தன அவன் உடலும் உள்ளமும்.

அவன் வயிறு பசித்தது. நா வறட்சி எடுத்தது. தன் பசிக்கு ஒரு கவளம் சோறு அளிக்காத உலகம் என்ன உலகம் என்று உலகைப் பற்றிய விசாரத்தில் ஆறுமுகம் இறங்கவில்லை. உலகத்துக்கு எங்கும் போக்கிடம் கிடையாது என்று அவனுக்குத் தெரியும்.

ஆனால் அவன் போய்விட முடியும். அவனை வெளியேற்றத்தான் உலகம் தன்னாலான முயற்சியைச் செய்துகொண்டிருந்தது. அப்படியும் அவன் உலக வாழ்வை இகழ்ந்துவிடவில்லை. அரைக்கால் வயிறு உணவாவது, தொண்டை நனையக் கள்ளாவது அச்சமயம் கிடைத்துவிட்டால், அவன் "ஓஹோ ஹோ! இந்த உலகம், பூவுலகம், இன்பமயமானது" என்று ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்திருப்பான்.

அருகிலிருந்த ஒரு லாந்தர்க் கம்பத்தின்மேல் சாய்ந்து கொண்டு, நடந்ததனால் ஏற்பட்ட களைப்பை ஆற்றிக்கொள்ள முயன்றான். தெருவிலே ஜன நடமாட்டம் அதிகமில்லை. மாலை நேரம். வானத்திலும் மேகங்கள் கவிழ்ந்திருந்தபடியால் வெளிச்சம் அதிகமில்லை. பட்டணத்துக் கடியாரப்படி இன்னும் 'லைட்டிங் டயம்' ஆகவில்லை. அந்த மங்கிய ஒளியில் களைப்பால் இருண்டுகொண்டிருந்த ஆறுமுகத்தின் கண்களில் தெருவில் எதிர்ப்புறத்தில் அவனுக்கு நேரே ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. பிச்சைக்காரனுக்கு எதிரே விரித்திருந்த துணியில் ஆறு, ஏழு காலணாக்கள் கிடந்தன.

அந்தப் பிச்சைக்காரனைக் கவனித்தான். அவன் குருடனென்று முதலில் ஆறுமுகத்துக்குத் தெரியாது. அது நிச்சயப்பட்டவுடன், அவன் மனத்தில் பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது.

தெருவிலே அதிக வெளிச்சமோ ஜன நடமாட்டமோ இல்லாதிருந்தது ஆறுமுகத்தின் காரியத்துக்கு ஒத்தாசையாக இருந்தது. யாரும் தன்னைப் பார்க்க முடியாத சமயம் பார்த்து எதிர்ப் பக்கம் போய்ச் சட்டென்று குனிந்து குருட்டுப் பிச்சைக்காரன் துணியில் கிடந்த ஏழு காலணாக்களையும் கையில் சப்தமின்றி எடுத்துக்கொண்டான்.

ஆனால் அவன் பிறகு நகர்ந்தபோது அவன் காலடிச் சப்தம் குருடன் காதில் விழுந்துவிட்டது போலும்! குருடன் வழக்கம் போலக் கையை நீட்டி. "கண்ணிலாத கபோதி ஐயா! காலணா போடையா, பிரபுவே!" என்று பரிதாபமான குரலில் கெஞ்சினான்.

உடனே ஆறுமுகம் தன் கையிலிருந்த காலணாக்களில் ஒரு காலணாவை எடுத்துத் தாராளமாகப் பிச்சைக்காரனுக்கு முன் எறிந்துவிட்டுத் தன்னால் முடிந்த வேகத்துடன், அங்கிருந்து நடந்துவிட்டான்.! ஒரு வழியாக அத்தெரு மூலை திரும்பியாகி விட்டது.

அடுத்த தெருவில் வேறு ஒரு லாந்தர்க் கம்பத்தின்மேல் சாய்ந்துகொண்டு வெகு நேரம் நின்றான் ஆறுமுகம். அவன் மனத்தில் என்ன என்ன சிந்தனைகள் தோன்றி மறைந்தன என்று நவீன மனத் தத்துவ ஆராய்ச்சி நிபுணர்களால்கூடக் கண்டுபிடிக்க முடியாது. அவன் சிந்தனைகளின் வேகம் அவனுக்கே தெரியவில்லை. மடியில் வைத்துக்கொண்ட ஆறு காலணாக்களையும் கையில் எடுத்துக்கொண்டு ஆறுமுகம் வந்த வழியே திரும்பினான். மூலை திரும்பியதும் அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் பழைய இடத்திலேயே உட்கார்ந்திருந்தது தெரிந்தது. ஆனால் அவன் இப்போது தனியாக இல்லை. அவனை ஒட்டிக் கண் பார்வையுள்ள ஒரு சிறு பெண் உட்கார்ந்திருந்தாள். அவர்களுக்குப் பக்கத்தில் இன்னும் இரண்டொரு பிச்சைக்காரர்களும் வந்து உட்கார்ந்திருந்தார்கள்.

தெருவில் காலடிச் சப்தம் கேட்டவுடன் குருடன், "கண் தெரியாத கபோதி ஐயா, காலணாப் போடையா!" என்று வழக்கம்போலக் கெஞ்சினான். பக்கத்திலிருந்த மற்றப் பிச்சைக்காரர்களும் குரல் கொடுத்தார்கள். ஆறுமுகம் கையிலிருந்த ஆறு காலணாக்களையும் குருட்டுப் பிச்சைக்காரன்முன் விரித்திருந்த துணியில் போட்டுவிட்டு மேலே வேகமாக நடக்க முயன்றான்.

முடியவில்லை. அவன் கால்கள் பின்னின, குருடனுக்குப் பக்கத்திலிருந்த பிச்சைக்காரர்கள் இப்படிப்பட்ட 'தர்மப் பிரபு' தங்களைத் தாண்டிக்கொண்டு போவதைப் பார்த்துச் சும்மா இருப்பார்களா! இந்தத் தர்மப்பிரபு ஏதோ ஒரு தினுசாகத்தான் இருந்தான்.

ஆனால் அவர் எப்படி இருந்தால் என்ன? அவர்களுக்கு ஆளுக்கு ஒரு காலணா கிடைத்தால் சரிதான். "ஐயா ஒரு காலணா" என்று முனகிக்கொண்டே குருடனுக்குப் பக்கத்தில் இருந்த பிச்சைக்காரர்கள் எழுந்து ஆறுமுகத்தைப் பின் தொடர்ந்தனர்.

ஆறுமுகம் ஈனமான குரலில் என்ன சொல்லிப் பார்த்தும் அவர்கள் அவனை விடுவதாக இல்லை. ஆறுமுகம் நின்று திரும்பித் தன்னை நோக்கிக் கெஞ்சிக் கைநீட்டிய பிச்சைக் காரர்களையே கெஞ்சும் பாவனையில் நோக்கிக் கையை நீட்டினுன்.

அவனுக்கு வார்த்தை சொல்லச் சக்தி இல்லை. இருந்திருந் தால், "ஐயா ஒரு காலணு!" என்று அவனும் கேட்டிருப்பான்.

அதே விநாடி கார்ப்பொரேஷன் தெரு மின்சார விளக்கு கள் பளிச்சென்று எரியத் தொடங்கின.

பிரம்மதேவரின் உள்ளத்திலே ஏதோ சுருக்கென்று முள் போலத் தைத்தது. மூக்குக் கண்ணுடியை எடுத்து மாட்டிக் கொண்டு பூலோகத்தை நோக்கினுர்.

மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்த சென் னைமா நகரிலே நம்மாழ்வார் தெருவிலே பூமாதேவியின் மடியிலே தவழ்ந்து விளையாடி நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து முப்பதாவது வயசை எட்டி விட்ட ஆறுமுகம் பிள்ளை புதிதாகப் பிச்சைக்காரனுகிப் பிச் சைக்காரர்களிடமே பிச்சை கேட்கும் மாபெரும் சாயுஜ்யத்தை அடைந்துவிட்டான் என்று அவர் கண்டார். ஆனல் அதற்குமேல் ஆறுமுகத்தின் லிபி என்ன என்று அவருக்குச் சரியாகத் தெரிய வில்லை. அந்த நிலைமையை எவ்வளவு நேரம் நீடித்து வைப்பது?

பிரம்மதேவர் தம் மேஜைமேலிருந்த ஒரு வெள்ளி மணி யைப் பதற்றத்துடன் நாலு தரம் தட்டினுர். காரியதரிசிக்குப் பதிலாக ஸரஸ்வதிதேவி வந்தாள். அதைக் கவனியாமல் காரிய தரிசிதான் வந்தாராக்கும் என்று எண்ணி, பிரம்மதேவன் அதட்டும் குரலில், "ஆறுமுகம் பிள்ளையின் லிபிப் பிரதிச் சுவடியை எடுத்து வாரும், ஜல்தி!" என்று அதிகாரம் செய்தார்.

"என்ன இது? அதிகாரம் பலமாயிருக்கு!" என்று ஸரஸ் வதிதேவி கேட்டபின்தான், பிரம்மா நிமிர்ந்து பார்த்து வந்தது யாரென்று அறிந்துகொண்டார்.

பிறகு காரியதரிசி வந்தார்.

"ஆறுமுகம் பிள்ளையின் லிபிச் சுவடியை எடுத்துவாரும்" என்று உத்தரவிட்டார் பிரம்மதேவர். அவர் குரலில் கலவரமும் அவசரமும் தொனித்தன.

"எந்த ஆறுமுகம் அது?" என்றார் காரியதரிசி.

பிரம்மாவுக்குக் கோபமே வந்துவிட்டது. "என்ன! ஏது என்றெல்லாம் நான் சொல்லுவதற்காகவா ஐயா, உம்மைக் காரியதரிசி என்று சம்பளம் போட்டு வைத்திருக்கிறது?" என்றார்.

காரியதரிசி, போனேன் வந்தேன் என்று ஒரு விநாடியில் கையில் மண்டையோட்டைப் போன்ற ஒரு வஸ்துவுடன் திரும்பிவந்தார்.

அந்த மண்டை ஓட்டைக் கையில் வாங்கிப் பிரம்மதேவர் தம் மேஜை இழுப்பிலிருந்து ஒரு கண்ணாடியை எடுத்து அதன் மூலம் பார்த்தார். எதையோ வாசிப்பதைப் போல அவர் வாய் முணுமுணுத்தது. நெற்றியைச் சுருக்கிக்கொண்டு மண்டை ஓட்டைக் கண்ணருகில் கொண்டுபோய்ப் பார்த்தார். பொத்தானை அமுக்கி விளக்கை ஏற்றிப் பார்த்தார். கடைசியில், "ஊஹும்! புரியவில்லை. நீர் பாரும் புரிகிறதா என்று? இதற்கு மேலே என்ன எழுதியிருக்கிறது? என் எழுத்தாணி அன்று எதையோ கிறுக்கிவிட்டது. என் எழுத்து எனக்கே புரியவில்லையே" என்று சொல்லி மண்டை ஓட்டைத் தம் காரியதரிசியிடம் கொடுத்தார்.

ஒரு நிமிஷம் அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு, "எனக்கும் புரியவில்லையே!" என்றார் காரியதரிசி.

பிரம்மதேவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு சொன்னார் :—"ம்......எழுத்தாணியை இப்படிக் கொடும். வேண்டாம்; நீரே அதன்மேல் எழுதும். ஆறுமும் பிள்ளைக்கு லாட்டரிச் சீட்டில் ஒரு லக்ஷம் கிடைத்துவிடுகிறது..."

காரியதரிசி எழுதுவதை நிறுத்திவிட்டு, "பிரபோ, ஒரு சந்தேகம். அவன் முன்பு எதுவும் லாட்டரிச் சீட்டு வாங்கியதாக இதுவரை காணப்படவில்லையே" என்றார்.

"என்ன ஐயா இது? உலகத்திலே இருக்கிற பத்திரிகையெல்லாம் நம்ம ஆபீஸுக்கு வருகின்றன. நீங்கள் அவற்றில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றைக்கூடப் பிரித்துப் பார்த்ததில்லையா? பார்த்திருந்தால் இந்தச் சந்தேகம் உமக்குத் தோன்றியிராது. ஆறுமுகம் லாட்டரி டிக்கட் வாங்காவிட்டால் என்ன? தெருவில் யாரோ நழுவ விட்டுவிட்டுப்போன லாட்டரிச் சீட்டு அவனுக்குக் கிடைக்கிறது. அந்தச் சீட்டுக்குத்தான் பரிசும் விழுகிறது .."

"புத்தி" என்றார் காரியதரிசி.

"எழுதி விட்டேன். தமிழ்ப் பத்திரிகைப் பாணியிலேயே மற்றதையும் எழுதிவிடட்டுமா? 'அந்தோ! பரிதாபம்! அவன் அந்த லக்ஷத்தை அனுபவிக்காமல் இறந்துவிட்டான்! என்னே கொடுமை!' என்று எழுதிவிடட்டுமா?" என்றார்.

"வேண்டாம். அவன் அந்த லக்ஷத்தைப் பாங்கில் பத்திரப் படுத்திவிட்டு, சோஷியலிஸ்ட் கக்ஷியில் சேர்ந்துவிட்டான் என்று எழுதும்" என்றார் பிரம்மதேவன்.

"இளம்பலாமா? நாழியாகிறது" என்றாள் ஸரஸ்வதி தேவி.

காரியதரிசியை நோக்கிப் பிரம்மதேவன், "அவ்வளவு தான்; நீர் போகலாம்" என்றார்.

பூலோகத்திலும் பிரம்மலோகத்திலும் நடந்ததெல்லாம் இதுதான்.

---

## “ நீங்க தூங்கறச்சேதான் ”

என்னவோ பட்டணத்திலே காபி சாப்பிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் தினம் சாப்பிடுகிறார்கள். ‘காபி என்றால் உசிரு ஸார் எனக்கு’ என்கிறார்கள்.

‘காபி இல்லாவிட்டால் என்றால் உயிர் வாழவே முடியாது ஸார்’ என்கிறார்கள். இவர்கள் சாப்பிடுவதெல்லாம் காபிதான் என்கிற ஞாபகம் போலும் இவர்களுக்கு, பாவம்! பட்டணத்தார் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

நல்ல காபி என்றால் என்ன? அதை எப்படிச் சாப்பிட வேண்டும் என்று உங்களுக்குத் தெரிய வேண்டுமானால்......

ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே என்பார்களாம். நான் இங்கே பேரை மட்டும் சொல்லப்போகிறேன்; ஊரைச் சொல்லப்போவதில்லை. இந்தக் காலத்தில் ஊரைச் சொல்லிவிட்டால் நல்ல காபி சாப்பிடலாமே என்று எல்லோருமே டிக்கெட் வாங்க எழும்பூருக்கு ஓடிவிடுவார்கள். அந்த ஊரில் ஏதோ விசேஷம்போல் இருக்கிறது என்று இரண்டு வாரம் அந்த ஊருக்கும் சுற்று வட்டப் பிராந்தியங்களுக்கும் டிக்கெட் கொடுப்பதை ரெயில்வேக்காரர்கள் நிறுத்திவிடுவார்கள்; ஆபத்துத்தான்.

ஊரைச் சொல்லமாட்டேன்; பெயரைமட்டும் சொல்லுகிறேன். ராமலிங்கையர் கடைக்குப் போனால் நல்ல காபிமட்டுமல்ல; சுவாரஸ்யமான பேச்சும் கதையும் அநுபவமும் கிடைக்கும்.

கொஞ்சம் பழக்கமானவரைத் தெருவிலே கண்டுவிட்டால் போதும். ராமலிங்கையர் அந்தப்புரத்துக்குக் குரல்

கொடுப்பார். 'தேய்ச்ச டவரா டம்ளரிலே காபி 8 பலம், சர்க்கரை டிகாக்ஷன் ஜாஸ்தி! எனக்குக் காபி அப்படித்தான் வேண்டும்' என்பார். 'அப்படியே எனக்கும் ஒரு ரெண்டு பலம் காபி' என்பார். நம்மோடு கூடக் காபி சாப்பிட ஆயத்தம் செய்து கொள்வார். 'வேறு ஏதாவது சாப்பிடுகிறீர்களா?' என்று உபசாரம் செய்வார். 'புத்துருக்கு நெய்யில் செய்த அல்வா இருக்கு' என்பார்.

திடீரென்று "காலிப்பயலே!" என்பார் உரத்த குரலில். இது காபி சாப்பிடத் தன் கடையைத் தேடி வந்தவரையல்ல என்று ராமலிங்கையர் கடைக்குப் போய்ப் பழகியவர்களுக்குத்தான் தெரியும். 'காலிப்பயலே! என்ன தூக்கம்? உட்கார்ந்தபடி தூங்காதே என்று எத்தனை தரம் சொல்றது" என்று அதட்டுவார் பையனை.

அந்தப் பையன் அல்வாவோ வடையோ உங்கள் முன் கொண்டுவந்து வைத்துவிட்டுப் பெஞ்சியில் எதிரில் உட்கார்ந்து கொண்டு, "எங்கே ஸார், இவ்வளவு நாளாக உங்களைக் காணோம்?" என்று விசாரிப்பான். ஏதோ அவ்வளவு அக்கறையாகக் கேட்கிறானே என்று பதில் சொல்லத் தொடங்கி விடாதீர்கள். ஏனென்றால் பையன் அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டு உடனே அந்த க்ஷணத்திலேயே தூங்கிப்போய்விடுவான். நீங்கள் சொல்வதில் முதல் வார்த்தையே அவன் காதில் விழாது என்பது நிச்சயம்.

ராமலிங்கையர், 'காலிப்பயலே!' என்று முதல் தரம் சொல்லி இரண்டாந்தரமும் சொல்லி, 'டே பயலே?' என்று கூப்பாடு போடும் வரையில் உட்கார்ந்தபடியே நித்திரையில் ஆழ்ந்திருப்பான் அவன். 'டே பயலே!' என்று அவர் கூப்பிட்டு அவன் விழித்துக்கொண்டவுடனே அவன் கைகள் பழக்க வேகத்தால் தாமாகவே தா்டையில் சற்று ஓங்கியே போட்டுக்கொள்ளும். "சப்தம் கேக்கல்லியே; ஓங்கி" என்பார் ராமலிங்கையர். இன்னும் சற்று ஓங்கியே போட்டுக்கொள்வான் பையன். அதற்குப் பிறகுதான் நீங்கள் கேட்டது என்னவோ அல்வாவோ தோசையோ காபியோ கொண்டுவரப் போவான்.

கொண்டுவந்து வைத்துவிட்டு உங்கள் எதிரிலேயே மீண்டும் உட்கார்ந்து தூங்கத் தொடங்கிவிடுவான்.

இந்தப் பையனைப்பற்றிப் பல அபூர்வமான கதைகள் சொல்வார் ராமலிங்கையர். நிஜமோ, பொய்யோ அந்த நிமிஷக் கற்பனையோ-நல்ல கதைகள். காபி சாப்பிடப் போகிறவர் காபி நன்றாக இருக்கிறது என்று ஒப்புக்கொண்டே தீர வேண்டும். ஆனால் அவர் சொல்கிற கதை உண்மைதான் என்று ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியம் இல்லையல்லவா? உங்கள் அவநம்பிக்கை முகத்திலே பிரதிபலித்துவிடும். அவ்வளவுதான்! தாம் சொன்னது உண்மை என்று நிரூபிக்கத் தொடங்கி விடுவார் ராமலிங்கையர். 'டே பயலே' என்பார். தாடையில் ஓங்கி இரண்டு கைகளாலும் போட்டுக்கொண்டே விழித்துக் கொள்வான் பையன்.

"நான் சொன்னதெல்லாம் நிஜந்தானேடா" என்பார் ராமலிங்கையர்.

"ஆமாம், மாமா" என்பான் பையன். அதற்கப்புறமும் நம்ப மாட்டேன் என்று நீங்கள் எப்படிச் சொல்லமுடியும்?

ராமலிங்கையர் சொல்வார்; "இந்த டிராயரிலே பணம் நோட்டு நோட்டாகப் போட்டுப் பூட்டி விட்டுப் போவேன் ஸார். திரும்பி வந்து பார்க்கிறபோது நாலு ஐந்து குறையும். 'என்னடா இது? நான்தான் கணக்குத் தப்பா நினைத்தேனே?' என்று எண்ணுவேன். இப்படி ஏழெட்டுத் தரம் நாள் தவறாமல் கணக்குத் தப்பாப் போனதும், நான் பையனைக் கவனிக்க ஆரம்பித்தேன். இதோ பாருங்கோ, உங்க எதிரிலே டிராயரிலே நாலைந்து நோட்டுப் போட்டுப் பூட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஏழெட்டு ரூபாய் நோட்டுகளைப் போட்டு டிராயரைப் பூட்டிச் சாவியை இடுப்பிலே செருகிக் கொள்வார்.

காபி சாப்பிடப் போனவர்கள் எல்லோரும் என்ன செப்பிடு வித்தை இது என்று ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பார்கள்.

'டே பயலே!' என்று வழக்கத்தை விடச் சற்று உரக்கவே கூவுவார் ராமலிங்கையர். அவர் குரல் விழித்துக்கொண்டிருக்கும் உங்களையே தூக்கி வாரிப் போடும். பையன் விழித்துக்கொண்டு தாடையில் போட்டுக்கொள்வான்; அவர் உத்தரவு தரு முன் மறுபடியும் ஒருதரம் போட்டுக்கொள்வான்.

"இந்த டிராயரிலே" என்று இரண்டு வார்த்தைகள்தான் சொல்வார் ராமலிங்கையர்.

தந்திரங்கள் பழகிய நாய்க்குட்டி யசமானின் ஒரு வார்த்தையைக் கேட்டு எந்தத் தந்திரம் செய்து காட்ட வேண்டும் என்று புரிந்துகொண்டு செய்வதுபோலப் பையன் என்ன செய்யவேண்டுமென்று அநுமானித்துக்கொண்டு மேசையண்டை வருவான். பூட்டிய டிராயர் பூட்டியபடியே இருக்கும். மேசையில் திறந்திருக்கும் மறு பக்கத்து டிராயரை முன்னுல் இழுத்துவிட்டு அடியில் கைவிட்டுப் பூட்டியிருக்கும் டிராயரில் போட்டிருந்த நோட்டுகளை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்து மேசைமேல் வைப்பான் பையன்.

"இந்த வித்தை எல்லாம் உங்களுக்குத் தெரியுமா ஸார்? ஏதோ பி. ஏ. எம். ஏ. என்று படித்திருக்கிறீர்களே!" என்று கேட்பது போல உங்களைப் பார்ப்பார் ராமலிங்கையர்.

'யம காதகப் பயலாக இருக்கிருனே!' என்று முணுமுணுத்துக்கொண்டே நீங்கள் காபி சாப்பிட்டாகி விட்டதனுல், 'பாக்கி' என்று ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுப்பீர்கள்.

"சில்லறை வாங்கியாடா!" என்று பையனை அந்தப்புரத்துக்குள் அனுப்பிவிட்டு ராமலிங்கையர், "உட்காருங்கோ ஸார், சில்லறை வரட்டும்" என்பார்.

சில்லறை வருகிற வரைக்கும் சும்மா உட்கார்ந்திருப்பானேன் என்று தன் பையனின் பிரதாபங்களைச் சற்று விரிவாகவே சொல்ல ஆரம்பிப்பார்:

ஒருசமயம் நடந்ததைச் சொல்லுகிறேன்; புகையிலை வாங்கிண்டு வாடா என்று ஒரு நாள் பையனிடம் அரையணுக் கொடுத்

தனுப்பினேன். பத்து நிமிஷம் கழித்து அரையணுவுக்குப் புகையிலையுடன் வந்தான் பையன். அவன் கையில் கடிதாசு பிரிக்காத புதுச் சோப்புக்கட்டி ஒன்றும் இருந்தது. " ஏதுடா சோப்பு ?" என்றேன். கடைக்காரன் தூங்கிக்கொண்டிருந்தான் மாமா, " நைசாக எடுத்துண்டு வந்து விட்டேன் " என்றான். " திருடலாமாடா பயலே ! இனிமே திருடினுயானல் முதுகுத் தோலை உரித்து விடுவேன் போ " என்று அதட்டினேன். நெருப்புப் பெட்டி வாங்க மறு நாளோ அதற்கு மறு நாளோ ஓரணு கொடுத்தனுப்பினேன். பையன் நெருப்புப் பெட்டியும் காலணுவும் என் கையில் கொடுத்தான். அவன் கையிலும் சீவாத புதுப் பென்சில் ஒன்று இருந்தது. " ஏதுடா பென்சில் " என்றேன். "கடைக்காரன் தூங்கிக்கொண்டிருந்தான் மாமா" என்று ஆரம்பித்தான். எனக்கு உண்மையிலேயே அன்று பிரமாதமாகக் கோபம் வந்து விட்டது. அந்தக் கோபத்திலே அவனை ஓர் அறை விட்டிருந்தால் அவன் சுருண்டு விழுந்திருப்பான். " போட்டுக்கோதானுகவே கன்னத்திலே நாலுதரம். மறுபடியும் திருடினுயானல் கடைக்காரனிடமே சொல்லி விடுவேன் " என்றேன். நாலைந்து நாள் கழிந்து மறுபடியும் ஏதோ காலணு சமான் வாங்கப் போனவன் ஒரு புது ரப்பர்ப் பந்தை—அந்த இரண்டரையணு ரப்பர்ப் பந்து இல்லே—கொண்டு வந்தான். பழைய கதை தான்—கடைக்காரன் தூங்கினனும் ; கடைக்காரனையே கூப்பிட்டுச் சொன்னுல் பையனை அடித்து நொறுக்கி விடுவான். திருடியதற்காக அவனை அடிக்கிற வேலை எனக்கு மிச்சம் என்று எண்ணிக்கொண்டு பையனை உள்ளே அனுப்பிவிட்டுக் கடைக்காரனைக் கூப்பிட்டேன். அதோ நாலாவது கடையில் இருக்கிருனே அவன்தான். " என்ன ஐயா ! வியாபாரம் செய்யற அழகு ரொம்ப ஜோராக இருக்கு. பட்டப்பகலிலே கொள்ளை போகிறது தெரியாமல் தூங்குகிருயே" என்றேன்! "என்ன சாமி விளங்கல்லையே?" என்றுன் கடைக்காரன். "நீ கடையிலே தூங்கறப்போ என் கடைப்பையன் உங்கிட்டே இருந்து அன்றைக்கு ஒரு சோப்பு, ஒரு பென்சில், இன்றைக்கு ஒரு ரப்பர்ப் பந்து எல்லாம் கிளப்பிண்டு வந்திருக்கானே ஐயா ; நன்றுயிருக்கு நீ வியாபாரம் செய்யற அழகு" என்றேன். தலையைச் சொறிந்தான்

கடைக்காரன். "பந்து இரண்டரையணுக் காசு கொடுத்து வாங்கிட்டு வந்தாங்க!" என்முன். எனக்குத் திக்கென்றது. கடைக்காரன் மேலும் சொன்னுன்! "அன்னிக்கு ஸோப்பு நேற்ருே, முந்தா நாளோ ஒரு பென்சில் எல்லாம் காசு கொடுத்துத்தானே வாங்கிச்சு தம்பி. நேத்துக்கூட வாங்கிச்சு; காலையிலே ஓரணுக் கொடுத்துக் கலர் சாப்பிட்டுச்சு" என்முன் கடைக்காரன். "டே பயலே!" என்றேன் "உண்மையைச் சொன்னுல் ஒழிய உயிர் போயிடும்" என்றேன். பையனுக்கு என் குரலிலேயே தெரிஞ்சு போச்சு, "ஏதுடா உனக்கு இதெல்லாம் வாங்கக் காசு?" என்று ஒரு தரம் முறைத்துப் பார்த்து அதட்டிக் கேட்டேன். "நீங்க தூங்கறச்சேதான் டிராயரிலிருந்து எடுத்தேன் மாமா" என்று உண்மையைச் சொல்லிவிட்டான்...

ராமலிங்கையர் கதையை முடிப்பதும் பையன் சில்லறையுடன் வருவதும் சரியாக இருக்கும்.

"உங்களுக்கு நம்பிக்கை யில்லாவிட்டால் பையனையே கேளுங்களேன்" என்பார் ராமலிங்கையர். "ஏண்டா பயலே நான் சொன்னதெல்லாம் நிஜந்தானேடா?" என்பார்.

"நிஜந்தான் மாமா" என்பான் பையன்.

ஆனல் சில்லறையை எண்ணிப் பையில் போட்டுக்கொண்டு நீங்கள் கிளம்பும்போது பையன் பெஞ்சியில் உட்கார்ந்த படியே தூங்கிக்கொண் டிருப்பான். 'இந்தத் தூங்குமூஞ்சிப்பயல் உண்மையிலேயே ராமலிங்கையர் சொல்லுகிறபடி அவ்வளவு எமகாதகப் பயலாகவா இருப்பான்!' என்று உங்களுக்குச் சந்தேகம் வருவது சகஜந்தான்.

ஆனல் ராமலிங்கையர் கடைக் காபி உண்மையிலேயே நன்ருகத்தான் இருக்கும். அதை நான் சொல்லுகிறேன்; நீங்கள் பூரணமாக நம்பலாம்.

# படித்த பெண்

டெல்லியிலிருந்து சுந்தாப் பாட்டியினுடைய மூத்த பிள்ளையின் பெண் வயிற்றுப் பேத்தி வந்திருந்தாள். வரும்போதே பேத்திக்கும் பாட்டிக்கும் சம்வாதம் ஆரம்பமாகிவிட்டது.

பேத்தியின் பெயர் பத்மாஸனி. வயசு இருபத்திரண்டாகிறது. கல்யாணம் இன்னும் ஆகவில்லை. மெடிகல் காலேஜில் படித்துக்கொண்டிருக்கிறாள். இன்னும் இரண்டு மூன்று வருஷங்களில் 'டாக்டர்' என்று போர்டு போட்டு விடுவாள்.

கையில் அழகான சிறு பையும், உதட்டில் அவ்வளவு அழகில்லாத செயற்கைச் சிவப்பும், முகத்தில் பட்டை பட்டையாகப் பவுடரும், குதிகால் உயர்ந்த பூட்ஸுமாக 'டாக் டாக்' கென்று நடந்து வந்தவளைச் சுந்தாப் பாட்டி, "வாடியம்மா! துரைசாணியம்மா, வா!" என்று வரவேற்றாள்.

"இது நான் எதிர்பார்த்ததை விடப் பெரிய குக்கிராமமாயிருக்கிறதே!" என்றாள் பத்மாஸனி. அவளுக்கு நினைவு தெரிந்து இதுவரை சாத்தனூருக்கு வந்ததில்லை.

"டெல்லியிலே வளர்ந்தாலும் கூடத் துரைசாணியம்மா பிறந்ததெல்லாம் இந்தக் குக்கிராமத்திலேதான்" என்றாள் சுந்தாப் பாட்டி.

சுந்தாப் பாட்டி நடுக் கூடத்தில் போட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். சுவரோரமாகப் போட்டிருந்த ஒரு நாற்காலியிலே உட்கார்ந்துகொண்டு பத்மாஸனி தன் பூட்ஸுகளைக் கழற்றினாள். கடைத் தெருவுக்குப் போய்விட்டுத் திரும்பிய நான், "வா பத்மா, வா!" என்று வந்தவளை வரவேற்றேன். பிறகு, "பாட்டியும் பேத்தியும் அதற்குள்ளேயே சிநேகமாகி விட்டாற்போல் இருக்கிறது" என்றேன் தமாஷாக.

பத்மாஸனி சிரித்தாள். "பாட்டியும் நானும் ஒண்ணுதான். அம்மாகூட அடிக்கடி சொல்லுவாளே!" என்றாள். கால்

பூட்ஸைக் கழற்றிவிட்டு, ஒரு பூட்ஸில் பட்டிருந்த அழுக்கைத் தன் கைக் குட்டையால் துடைத்தாள்.

"அப்படி என்னடியம்மா உங்கம்மா என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிருள்?" என்று விசாரித்தாள் சுந்தாப் பாட்டி.

தலைமயிர் பறக்காமல் இருப்பதற்காக அணிந்திருந்த கறுப்பு வலையை அவிழ்த்துக்கொண்டே பத்மாஸனி மீண்டும் சிரித்தாள். "பாட்டிக்கும் பேத்திக்கும் யார் என்ன சொன்ன போதிலும் கோபமே வராது என்று அம்மா சொல்லுவாள்" என்ருள்.

"அப்படிச் சொல்லுடி மருத்துவச்சியம்மா!" என்ருள் சுந்தாப் பாட்டி.

"அம்மாகூடச் சொல்லுவாள்; 'ஊரிலே யாருக்குப் பிரசவம் பார்க்கணும் என்ருலும் சுந்தாதான் போவாள். அதே மாதிரி என் பெண்ணும் டாக்டருக்குப் படிக்கிறேன் என்கிறது' என்பாள். நான்கூட உன்னைப் போல லேடி டாக்டர்தான், பாட்டி!"

"கோபம் வராத இந்தக் குணசாலியைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறவன் மிகவும் புண்ணியவாளுக இருக்க வேண்டும். அத்துடன் ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டக்காரனுகத் தான் இருக்க வேண்டும்."

பத்மாஸனி கலகலவென்று சிறித்தாள். "சந்தேகம் என்ன, பாட்டி? ரொம்ப அதிர்ஷ்டக்காரனுகத்தான் இருக்க வேண்டும். லாட்டரியிலே லக்ஷம், இரண்டு லக்ஷம் என்று யாருக்காவது எப்பொழுதாவது கிடைத்து விடும். ஆனுல் அதைவிட அதிர்ஷ்டக்காரனுகத்தான் இருக்க வேண்டும், இந்தப் பத்மாஸனி பாயைக் கல்யாணம் செய்துகொள்கிறவன். ஏனென்ருல் நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லையே!"

"அது யாரடி அது, பத்மாஸனி பாய்! பாயாமே பாய்! தலைகாணி, மெத்தையில்லாமே!" என்று கேலி செய்தாள் சுந்தாப் பாட்டி.

கோபமே வராத பத்மாஸனிக்குக் கூடக் கோபம் வந்து விடும்போல இருந்தது. ஒரு விநாடிதான்; அதற்குள்ளாகவே சமாளித்துக்கொண்டு விட்டாள். ஆனால் அதைக் கவனிக்காமல் இருந்துவிடுவாளா சுந்தாப் பாட்டி? "கோபமே வராது என்று சொன்னாயே உனக்கு, அதுமாதிரிதானாக்கும் இதுவும்!" என்றாள்.

"பாரேன்!"

"அதுதான் பார்க்கப்போகிறேனே! இந்த மாதிரி கல்யாணமே பண்ணிக்கொள்ள மாட்டேன் என்று சொன்னவர்கள் ரொம்பப் பேரை நான் பார்த்திருக்கிறேன்" என்றாள் சுந்தாப் பாட்டி.

தன் கைப் பையிலிருந்து சின்ன முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை எடுத்து அதில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டு, உதட்டுச் சிவப்பைக் கைக்குட்டையால் லேசாக அழித்து விட்டுக்கொண்டு, பத்மாஸனி சொன்னாள்: "இந்த வீட்டிலே காப்பி-கீப்பி உண்டானால் வரட்டுமே!"

என் பெண், எட்டு வயசிருக்கும் அவளுக்கு. வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றவள் உள்ளே போனாள். இரண்டு டம்ளரை எடுத்து வந்தாள். "இதில் காப்பி, இதில் கீப்பி" என்று இரண்டு டம்ளரையும் பத்மாஸனியின் முன் வைத்தாள்.

சுந்தாப் பாட்டி சொன்னாள்: "இது குக்கிராமம்தானேடியம்மா; நீ பல் தேய்த்துவிட்டுத்தான் காப்பி சாப்பிடுவா யாக்கும் என்று நினைத்திருப்பார்கள்."

"பல் தேய்க்கிறதெல்லாம் குளிக்கும்பொழுதுதான்!"

"அப்படியா? பூட்ஸைத் துடைக்கிற கைக்குட்டையாலேயே, உதட்டையும் துடைக்கிற நாகரிகத்தைச் சேர்ந்ததாக்கும் இதுவும்!" என்றாள் சுந்தாப் பாட்டி.

தெருக் குழந்தைகளெல்லாம் என் வீட்டில் ஏதோ காரியம் இருக்கிற மாதிரி வந்து வந்து போய்க்கொண் டிருந்தன.

அவர்கள் நவயுக நாகரிகத்தை அதிகம் காணுதவர்கள் ; பாவம்! மாலையில் தெரு ஸ்திரீகளெல்லோரும் டெல்லியிலிருந்து வந்திருந்த பத்மாஸனியைப் பார்க்க வந்துவிட்டுப் போவார்கள். உண்மையிலேயே சாத்தனூர், குக்கிராமந்தான் என்று எண்ணியவளுக நான் சொன்னேன் : "இரண்டுமே கைநகத்தைக் கடிக்கிற நாகரிகத்தைச் சேர்ந்ததுதான் !"

பத்மாஸனி தன் கை நகங்களைப் பார்த்துக்கொண்டாள். பளபளவென்று வர்ணம் தீட்டப்பட்டிருந்தன, அவள் நகங்கள் ; ஆனால் கடிக்கப்பட்ட நகங்கள்தாம்.

நான் பின்னும் சொன்னேன். "பாட்டியும் பேத்தியும் இப்படி ஆரம்பத்திலேயே சண்டை போட்டுக்கொள்கிறீர்களே ?"

"சண்டையா ராஜா, இதெல்லாம் ?" என்ருள் சுந்தாப் பாட்டி.

"சண்டையில்லை மாமா, சண்டையில்லை. ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொள்ளுகிறோம்" என்ருள் பத்மாஸனி.

பிறகு என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் சொன்ஞள் : "இந்தப் பாட்டி ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரி என்று எங்கம்மா சொல்லுவாள். நான் பேசுகிறதெல்லாங்கூட இந்தப் பாட்டி மாதிரியேதான் பேசுகிறேன் என்று சொல்லுவாள்" என்ருள்.

பத்மாஸனி இதை என்னிடம் சொன்னதில் தவறில்லை. ஆனால் இதை ஆங்கிலத்தில் சொன்னதுதான் தவறு. சுந்தாப் பாட்டிக்குப் புரியக்கூடாது என்ருல் ஆங்கிலமும் ஹிந்தியும் தவிர வேறு எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் சொல்லியிருக்கவேண்டும். சுந்தாப்பாட்டி ஆங்கிலம் பேசமாட்டாள் ; ஆங்கில வார்த்தைகளைக் கூட அதிகம் உபயோகப்படுத்த மாட்டாள். ஆனால் யார் என்ன பேசினுலும் புரிந்துகொண்டு விடுவாள். மிடில் ஸ்கூல் ஹெட்மாஸ்டரின் மனைவியாக நாற்பது வருஷம் வாழ்க்கை நடத்தியவள் அல்லவா ? அதிலும் வீட்டி

லேயே நடந்த ஸ்கூல். தவிரவும் அந்தக் காலத்து மிடில் ஸ்கூல் என்றால்......மிடில் ஸ்கூல் ஆங்கிலப் பரீக்ஷைத் தாள்களுக்கு இந்தக் காலத்து பி. ஏ. மாணவன் கூட விடை எழுதத் திணறி விடுவானே!

நான் பத்மாஸனிக்கு எதுவும் பதில் சொல்லாமல், சுந்தாப் பாட்டியைப் பார்த்தேன். சுந்தாப் பாட்டி சொன்னாள்: "தஸ் புஸ்னு நீ படித்திருக்கிற இங்கிலீஷிலே இரண்டு வார்த்தை பேசிவிட்டால், நான் பயந்து போய்விடுவேன் என்று நினைத்தாயா? நீயும் கெட்டிக்காரிதான்—நானும் கெட்டிக்காரி தான்—உங்கம்மாவும் கெட்டிக்காரிதான். உனக்குப் பிறக்கப் போகிற பெண், பேத்தி, எல்லாருமே, உன்னைப் போலவும் என்னைப்போலவும் கெட்டிக்காரியாகத்தான் இருப்பார்கள்!"

பத்மாஸனி பதில் சொல்லவில்லை.

"டில்லிக்குப் போனால் என்ன? அதற்கப்பால் சீமைக்குப் போனால்தான் என்ன? பிறந்து நாலு வருஷம் இந்தக் கால்களிலே படுத்துக்கொண்டு, எண்ணெய் தேய்க்கிற போதெல்லாம் 'வராட்டு வராட்டு' என்று முகம் சிவக்க அழுத ஜன்மந்தானேடியம்மா இது!" என்றாள் சுந்தாப் பாட்டி.

பத்மாஸனி இதற்குப் பதில் சொல்லவில்லை. சுந்தாப் பாட்டியுடன் பேசுவதென்பது அவளுக்கு ஒரு புதிய அநுபவமாக அமைந்துகொண்டிருந்தது.

"இந்தக் கொள்ளுப் பேத்திக்குப் பெண் பிறந்தாலும், நீதானே பாட்டி எண்ணெய் தேய்த்துவிடப் போகிறாய்?" என்றேன் நான்.

"நானா? நான் அதுவரையிலும் இருப்பேன். அதற்கப்புறம் அந்தப் பேத்திக்குப் பேத்தி பிறக்கிற வரைக்குங்கூட இருப்பேன். ஆனால் டாக்டருக்குப் படித்து பெரிய மருத்துவச்சியாகிவிட்ட துரைசாணியம்மா, தனக்குத்தானே பிரஸவம் பார்த்துக்கொண்டு விட்டாலும் பார்த்துக்கொண்டு விடுவாள்! இந்

தக் கர்நாடகத்தைக் கிட்ட அண்டவிடுவாளோ, என்னவோ?" என்றாள் சுந்தாப் பாட்டி.

"குறைப்பட்டுக்கொள்ளாதே பாட்டி, உனக்காகவாவது நான் கல்யாணம் பண்ணிக்கொண்டு அடுத்த வருஷமே பிள்ளையைப் பெற்றுக்கொள்கிறேன்" என்றாள் பத்மாஸனி. இதைச் சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

நானும் சொன்னேன்: "ஆமாம் பாட்டி, நீ குறைப்பட்டுக்கொள்ளாதே! பத்மாஸனி படித்த பெண்தான் என்றாலும், நம் வீட்டுப் பெண் இல்லையா? ஏதாவது கொஞ்சம் நல்ல குணங்களும் இருக்கும்" என்றேன்.

"நல்ல குணங்கள் நாலு பழகிக்கொண்டு போகலாம் என்றுதானே, லீவுக்கு இரண்டு மாசம் பாட்டியிடம் தங்கிவிட்டுப் போக வந்திருக்கிறேன்" என்றாள் பத்மாஸனி.

"ஏன் பாட்டி! இந்தப் படித்த பெண்களெல்லாமே......!" என்று நான் ஆரம்பித்தேன்.

"நிறை குடம் தளும்பாதடி, தளும்பாது! நிறையாத குடந்தான் தளும்பும். எனக்குக்கூட, அந்தக் காலத்திலேயே ஒருத்தி, மாட்டுப் பெண்ணாக வந்து வாய்த்தாளே, அவளும் படித்த பெண்தான்..." என்று ஆரம்பித்து நிறுத்தினாள் பாட்டி.

"கதையா பாட்டி? சொல்லு" என்று கேட்டவாறே பத்மாஸனியும் பாட்டியின் பக்கத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டாள்.

"கதையில்லையடி அம்மா, கதையில்லை!" என்றாள் பாட்டி.

"சொல்லு, பாட்டி!" என்றேன்.

* * * *

ஊஞ்சலை லேசாக ஆட்டிக்கொண்டே சுந்தாப்பாட்டி சொன்னாள்.

"எனக்கு ஸ்ரீனிவாசன், ஸ்ரீனிவாஸன் என்று உருப்படாத பிள்ளை ஒன்று இருந்தது. பெயர் மட்டும் லக்ஷ்மிகரமாக இருந்ததே தவிர அவனிடம் மூதேவிதான் குடியிருந்தாள். அப்பாவுக்கோ அம்மாவுக்கோ வீட்டிலிருந்த மற்றப் பெரியவர்களுக்கோ சிறிதும் அடங்காத பிள்ளை.

குழந்தையாக இருக்கும்போது முதலே வீட்டிலேயும் வெளியிலேயும் அவனுக்கு எப்போதும் ஓயாத ஒழியாத சண்டைதான். அவன் உடம்பில் காயமில்லாத நாள் கிடையாது. ஊர் வம்பு, ஊர்ச் சண்டை எல்லாவற்றையும் விலை கொடுத்தும் விலை கொடுக்காமலும் வாங்கி வந்து விடுவான். அவனை நம்ம வீட்டுப் பிள்ளை என்று சொல்லிக்கொள்ளவே வெட்கமாக இருக்கும்.

கெட்டிக்காரன்தான். ஆனால் அவனுக்குப் படிப்பே வரவில்லை. பள்ளிக்கூடத்து வாத்தியார் வீட்டுப் பிள்ளைக்கே பாடமும் படிப்பும் வரவில்லையே என்று ஊரார் கேலிசெய்தார்கள்.

கல்யாணம் பண்ணி வைத்தாலாவது பையன் திருந்திவிட மாட்டானா என்று எனக்கும் உங்கள் கொள்ளுத் தாத்தாவுக்கும் ஆசை. அவனுக்குப் பத்து வயசு நடக்கும்போதே ஒரு நல்ல இடத்தில் பார்த்துக் கல்யாணம் செய்துவிட்டோம். பிரபலமான ஒரு பண்டிதர் வீட்டுப் பெண் — சாஸ்திர விற்பன்னர் வீட்டுப் பெண் — அலமேலு என்று பெயர். கல்யாணத்தின்போது அவளுக்கு ஏழு வயசு இருக்கும்.

கல்யாணமான பிறகுங்கூட ஸ்ரீனிவாஸன் அப்படி ஒன்றும் திருந்திவிடவில்லை. பாடம், படிப்பு ஒன்றுமில்லாமல் தத்தாரியாகத் திரிந்துகொண்டிருந்தான். துடுக்கும் குறையவில்லை அவனுக்கு; திமிரும் ஏறிக்கொண்டிருந்தது. ஊரிலே அவன் அடிபடாத நாளே கிடையாது. வாத்தியார் வீட்டுப் பிள்ளை என்று எத்தனை நாள்தான் எத்தனை பேர் சலுகை தருவார்கள்? என்றைக்காவது உயிருக்கே ஆபத்து வந்துவிடப்

போகிறதே என்று நான் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தான் இருந்தேன்.

வயசு ஆக ஆக அவனுடைய அக்கிரமங்கள் அதிகரித்துக் கொண்டிருந்தன. 'நம்மாலாகாது; மனைவி வந்த பிறகு திருந்துகிறுன, பார்க்கலாம்!' என்று அலமேலுவை வரவழைத்து வைத்துக்கொண்டேன். அப்போது அவளுக்கு வயசு பதின்மூன்று இருக்கும்.

பெண்டாட்டி வீட்டுக்கு வந்தபிறகுங்கூட ஸ்ரீனிவாஸன் திருந்தவில்லை. அப்படியேதான் இருந்தான். அலமேலு அழகி, அறிவுள்ளவள்தான். ரொம்பவும் அடக்கமானவள். அவள் நம் வீட்டுக்கு வந்து நாலைந்து வருஷங்களுக்குப் பிறகுதான் எனக்கே தெரியும் — அவள் தகப்பனார் பண்டிதர் அல்லவா? தமிழும் சம்ஸ்கிருதமும் முறையாகத் தன் பெண்ணுக்குச் சொல்லித் தந்திருந்தார். படித்ததிலே பெருமை உண்டு அந்தப் பெண்ணுக்கு; ஆனால் ஜம்பம் இல்லை. குணங்களிலும் அறிவிலும் நிறைந்திருந்தாள் அவள்.

என் மூத்த பிள்ளைக்கும் மூன்ருவது பிள்ளைக்கும் சர்க்கார் இலாக்காக்களில் வேலையாயிருந்தது. அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் ஊர் ஊராகச் சென்றுகொண்டிருந்தார்கள். இருந்ததை வைத்துக்கொண்டு கிராமத்தோடு பழைய ஆளாகவே முப்பது வயசு இருந்தான் ஸ்ரீனிவாசன். ஊர்வம்பு, ஊர்ச் சண்டை, கோர்ட்டு விவகாரம்—இதுதான் அவனுக்கு ஆயுசுள்ள வரையில் வேலை. அவனுக்கு ஒரே ஒரு பிள்ளைதான் பிறந்தது. அந்தப் பிள்ளை பிறப்பதற்கு முன் என் கணவர் இறந்துவிட்டார். அலமேலுவின் தகப்பனரும் இறந்துவிட்டார்.

என் வீட்டிலே லக்ஷணமாக அலமேலு பதினைந்து பதினறு வருஷங்கள் இருந்தாள். பிறகு ஸ்ரீனிவாஸன் திடீரென்று ஏதோ ஜுரத்தில் அல்பாயுஸாகப் போய்விட்டான். மீளாத அந்தத் துக்கத்தில் விழுந்த பிறகுதான் அலமேலுவின் அரிய குணதிசயங்கள் எனக்கே சரிவரத் தெரிய வந்தன. தன்னுடைய ஒரே பிள்ளையை வைத்துக்கொண்டு இதே அக்கிரகாரத்தில்

அலமேலு நாலைந்து வருஷம் இருந்தாள். பிறகு அந்தப் பிள்ளை மேல் படிப்புப் படித்தது.—நல்ல வேளை! படிப்பில் அது அம்மாவைக் கொண்டிருந்தது; அப்பாவைக் கொண்டில்லை.

அந்த அலமேலுவைப் போலப் படித்த பெண்ணையும் நான் பார்த்ததில்லை; அடக்கமான பெண்ணையும் நான் பார்த்ததில்லை."

* * * *

கதையைச் சொல்லி முடித்ததும் சுந்தாப் பாட்டியின் கண்களிலே நீர் துளித்திருந்ததை நான் கவனித்தேன். எனக்குப் பெரியப்பா ஸ்ரீனிவாசன் கதை தெரியும். எதற்காக அதை இப்போது சுந்தாப்பாட்டி தன் கொள்ளுப் பேத்திக்குச் சொன்னாள் என்று எனக்குப் புரியவில்லை.

பத்மாஸனி கேட்டாள்: "அது சரி, அலமேலு படித்தவள் தான். ஆனால் அவள் படிப்பெல்லாம் பயனடையவில்லையே!"

"பல் துருத்திக்கொண்டிருக்கிற மாதிரி படிப்பும் துருத்திக் கொண்டிருந்தால்தான் பிரயோசனப்பட்டதாக அர்த்தமோ?" என்று கேட்டாள் சுந்தாப்பாட்டி.

"துருத்த வேண்டாம். ஆனால் மூடனைத் திருத்த முடியாத படிப்பு...?"

"உனக்கு ஒரு மூடன் புருஷனாக வரணும். அவனை நீ திருத்துகிறதை நான் பார்க்கணும்" என்றாள் சுந்தாப்பாட்டி.

"அது சரி, பாட்டி! இருந்தாலும் உன் கதை என்னவோ எனக்குத் திருப்தியாக இல்லை" என்றாள் பத்மாஸனி.

"நான் என்ன? உன்னைப்போல் புஸ்தகம் படித்தவளா? கதை சொல்ல எனக்கென்ன தெரியும்? நம் வீட்டுக் கதை ஒன்றைச் சொன்னேன்" என்றாள் சுந்தாப்பாட்டி. ஒரு நிமிஷம் கழித்து அவள் சொன்னாள்: "இந்தக் காலமானால் விவாக ரத்து, ஜீவனாம்சம் என்று அமர்க்களப்படும். அந்த நாளில்

அடக்கமாக இருந்து குப்பை கொட்டி, மூடனை ஒரு கணவ னுடன் வாழ்ந்து பிள்ளையைப் பெற்றெடுத்துப் படிக்க வைத்து .........."

"சரி, இப்போது அந்த அலமேலுவும் அவளுடைய பிள்ளை யும் எங்கே இருக்கிறார்கள் ?" என்று கேட்டாள் பத்மாஸனி.

"அலமேலுவின் பிள்ளைக்குப் பெயர் உங்கள் கொள்ளுத் தாத்தா பெயர்தான். சீமைக்கெல்லாம் போய்விட்டு வந்து இப் பொழுது ஒரு மெடிகல் கல்லூரியில் பிரபலப் பேராசிரியராக இருக்கிறான்" என்றாள் சுந்தாப் பாட்டி.

"யாரு ? மெடிகல் கல்லூரியிலா ? டாக்டர் சுப்ரமணியனா ? ஆமாம், இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னாடிகூடப் பத்திரிகைகளில் அமர்க்களப்பட்டதே! எனக்குக்கூட ஞாபகம் இருக்கிறது !" என்றாள் நெற்றியை அழகாகச் சுளித்துக் கொண்டு பத்மாஸனி.

"நாளைக்கு அம்மாவும் பிள்ளையும் இங்கே லீவுக்குத் தங்கு வதற்காக வருகிறார்கள்" என்றாள் சுந்தாப் பாட்டி.

"ஏது ? எனக்குக் கூடத் தெரியாதே" என்றேன் நான். விஷயம் புரிய ஆரம்பித்தது எனக்கு.

"ஏதேது, என் லீவு வீணாகப் போகாது" என்றாள் பத்மாஸனி.

"வீணாகப் போகிறதாவது ? லீவு கல்யாணத்திலேதான் முடியும். சுந்தாப் பாட்டி மனசு வைத்தால் அதற்கப்புறம் அதிலேயிருந்து யாராவது தப்ப முடியுமா ?" என்று கேட்டுக் கொண்டே சமையல் உள்ளே யிருந்து என் மனைவி வந்தாள்.

பத்மாஸனி, "யாருக்குக் கல்யாணம் ?" என்று கேட் டாள்.

"உனக்கு மாமாவாகணும் அவன். வயசு முப்பதாகிறது. இன்னும் கல்யாணமாகவில்லை" என்ருள் சுந்தாப்பாட்டி.

"நான் கல்யாணமே..." என்று ஆரம்பித்த பத்மாஸனி பாய், ஏதோ யோசனையில் ஆழ்ந்தவளாகப் பாதி வாக்கியத்தில் நிறுத்திஞள்.

நான் அவளைப் பார்த்தேன். எவ்வளவு படித்தவளாக இருந்தால்தான் என்ன? சுந்தாப்பாட்டியின் சூழ்ச்சியிலிருந்து அப்படி ஒன்றும் சுலபமாகத் தப்பிவிட முடியாது என்று எனக்குத் தெரியும்.

---

# மகாத் தியாகம்

"தான் ஆடாவிட்டாலும் சதை ஆடத்தானேடா செய்கிறது.........என்ன செய்ய?" என்றார் கிழவர்.

"இதோ பார் அப்பா! இந்த வயசில் நீ இன்னமும் என்னால் கஷ்டப்பட்டுக்கொண் டிருப்பது சரியல்ல; நியாயமல்ல. நீ உன் பாட்டைப் பார்த்துக்கொள். ஏதோ சர்க்கார் தயவு பண்ணித் தருகிற பென்ஷன் வருகிறது, உனக்குப் போதும்..." என்றான் ராஜாமணி.

"பிரமாதப் பென்ஷன்தான்...இருபத்தெட்டு ரூபாய்" என்றார் கிழவர்.

"பிரமாதமோ பிரமாதமில்லையோ, அது போதும் உனக்கு. தவிரவும் அந்தப் பென்ஷன் குறைந்ததும் என்னாலேதானே. இருபது ரூபாயைக் கம்யூட் பண்ணிப் பணமாகக் கொடுத்தே. கடைசியாக, அதையும் தீர்த்துவிட்டேன். நான் தொட்டதெல்லாம் ஏனோ துலங்கவே மாட்டேன் என்கிறது..." என்றான் ராஜாமணி.

"போகவேண்டியதெல்லாம் போகட்டும்" என்றார் கிழவர். அவர் மனசிலிருந்த ஆத்திரத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட அவருடைய குரலில் தொனிக்கவில்லை.

"நீ என்னை விட்டுப் பிரிந்து தனியாக இருப்பதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த வயசில் என் கஷ்ட நஷ்டங்களில் உன்னையும் பங்கெடுத்துக்கொள்ளச் சொல்வது சரியல்ல. காலம் வராதா? நல்ல காலம் வந்ததும் மறுபடியும் சேர்ந்துகொள்வது!" என்றான் ராஜாமணி.

"சின்னப் பையனுக்குச் சொல்ற மாதிரி ஏதேதோ சொல்றயே! வயசு அறுபத்துநாலு ஆயிடுத்து, போன சித்திரைக்கு. இந்த மார்கழி மாசம்வரை தாங்கினால் பெரிசு..."

"சாகறத்துக்கு ஆசைப்படற மாதிரி பேசறயே!"

"சாகறத்துக்கு யாருடா ஆசைப்பட்ரு? வயசு அறுபத்து நாலு ஆச்சே! படற கஷ்டமெல்லாம் பட்டாச்சு, போகலா மின்னு மனசு கேக்கறதா? கேக்க மாட்டேன் என்கிறது. இப்படியே இருக்கலாமே, இருந்துண்டே இருக்கலாமேன்னு தான் இருக்கு" என்ருர் கிழவர்.

ராஜாமணி அவரை நிமிர்ந்து பார்த்தான். அவன் தகப்பனர் கெட்டிக்காரர்தான். அதாவது ஒரு காலத்தில் கெட்டிக்கார ராக இருந்தவர்தாம். இப்பொழுது அறிவு மழுங்கிவிட்டது. மற்றப்படி புலன்கள் அதிகமாக அடங்கிவிடவில்லை. கண் தெரிந்தது-பல்லெல்லாம் சரியாகத்தான் இருந்தது; இன்னமும் நாலு மைலானலும் பாராட்டாமல் நடந்து வருவார். தெய்வசித்தம் அப்படியானல் அவர் இன்னும் பத்து வருஷங்கள் சுகமாக இருக்கலாம்.

ஆனல் அவருக்குக் கஷ்டமெல்லாம் அவர் பிள்ளையால் ஏற்பட்டதுதான். அதை ராஜாமணியே ஒப்புக்கொண்டான்.

"மார்கழி, தை என்று கணக்குப்பண்ணுதே அப்பா. எனக்கு இதுவரையில் நேர்ந்த கஷ்டங்களை எல்லாம் விட அது மகாப் பெரிய கஷ்டமாகிவிடும்," என்ருன் ராஜாமணி.

உண்மையிலேயே அது மகாப் பெரிய கஷ்டமாகத்தான் போய்விடும். முதலில் அப்பா மூலம் கிடைத்துக்கொண் டிருந்த பென்ஷன் தொகை போய்விடும்.

கிழவர் கிருஷ்ணசாமி சாஸ்திரி சொன்ஞர்: "இத்தனை வயசு இருந்தாச்சு. எனக்கு இனிமேல் கஷ்டம் நஷ்டம் வந்தாலுங்கூடத் தொடாதுன்னுதான் சொல்லணும். உன்னைத் தவிர வேறு யார் எனக்கு? வேறே எங்கே போய் நான் எப்படிச் சௌகரியமாக இருக்க முடியும்? எங்கே போய் நான் எதற்காக உசிர் வச்சுண் டிருக்கணும்? நீ கஷ்டப் படறச்சே, உன் கண்ணில் படாமே, உன்னுடன் இருக்காமல் நான் சுகப் படணும்னு நினைக்கப்படுமாடா?"

ராஜாமணி பதில் எதுவும் சொல்லவில்லை. கிழவருக்குப் போக வேறு இடம் இல்லைதான். அதுதான் எல்லாவற்றிலும்

மகா கஷ்டமாகப் போய்விட்டது. போ என்று நிர்த்தாக்ஷிண்ய மாக எப்படிச் சொல்வது?

"கஷ்டமோ நஷ்டமோ நானும் பட்டுண்டு உன்னோடே இருப்பதுதாண்டா எனக்குச் சுகம்" என்றார் கிழவர்.

ராஜாமணி தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டான்: 'நீ போற வரையிலும் என் கஷ்டங்களும் என்னைவிட்டு அகலா. நீ போன பிறகுதான் என் நிலைமையும் திருந்தும் என்று தோன்றுகிறது. அது உன் அதிர்ஷ்டமோ என் அதிர்ஷ் டமோ, எப்படிச் சொல்றது?' பிறகு உரக்கச் சொன்னான்: "என்னோடே இருந்து நீ என்ன சுகத்தைக் கண்டு விட்டயோ? இனிமேல் என்ன சுகத்தைக் காணப் போறியோ, அது கட வுளுக்குத்தான் வெளிச்சம்" என்றான். அவன் குரல் எதிர் பாராத துக்கத்தால் சற்றுக் கம்மியது. அவன் கண்கள் கண் ணீரால் மங்கின. அவன் உள்ளத்திலே ஓர் ஏக்கம் குடி புகுந் தது. உணர்ச்சி வேகம் அவன் உடலை ஒரு தாக்குத் தாக்கி உலுக்கியது. "சீ! இதுவும் ஒரு வாழ்க்கையா!" என்று தன்னையே நொந்துகொண்டான்.

* * * *

தன் தகப்பனாருடைய அறுபத்துநாலு வருஷ வாழ்க்கையும், தன்னுடைய முப்பத்தைந்து வருஷ வாழ்க்கையும் அவன் கண்முன் திரை ஓடின.

தன் ஆதி நாளையக் கதையை எல்லாம் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளே அவனுக்குப் பல தடவைகளில் சொல்லியிருந் தார். அதப் பாதாளத்திலிருந்து கரையேறி மெல்ல மெல்ல அடி வைத்து அவர் ஒரு சிறு சிகரத்தை எட்டிப் பிடித்தவர். ஆனால் அந்தச் சிறு சிகரத்தின் மேல் கூட அவரால் அதிக நேரம் நிலைத்து நிற்க முடியாமல் போய்விட்டது. அச் சிகரத்தை அடுத்திருந்த சிகரத்தை நோக்கி இரண்டடி எடுத்து வைத்திருந் தால் போதும்; நிலைத்துக்கொள்ளலாம். ஆனால் ஓரடி எடுத்து வைத்தால் ஒன்பதடி சறுக்கிவிட்டது. முன்னேற ராஜாமணி

அவருக்கு உதவியிருக்க வேண்டும். அந்த விஷயத்தில் ராஜா மணி அவருக்குச் சற்றும் உதவவில்லை என்பது மட்டுமல்ல; அவர் சறுக்கி விழ அதிகம் உதவினுன்.

அவர் மகன் ராஜாமணியின் வாழ்க்கை...... 'சே! அதுவும் ஒரு வாழ்க்கையா!' என்றிருந்தது கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி களுக்கு.

அறுபத்துநாலு வருஷ வாழ்க்கையில் அவர் கண்டு அநுப வித்த சுக வாழ்வெல்லாம் ஏழெட்டு வருஷங்களுக்குமேல் இராது. அதற்குப் பிறகு வந்துபோன வருஷங்களை எல்லாம் அவர் அந்த ஏழெட்டு வருஷ இன்ப ஞாபகங்களோடுதான் ஓட் டிக்கொண்டிருக்கும்படி நேர்ந்துவிட்டது.

அவரே எத்தனையோ தரம் தம் தகப்பனுரைப்பற்றி ராஜா மணியிடம் சொல்லியிருந்தார். "என் அப்பா நல்லவர்தாம். ஆனுல் அவருடைய ஒரே ஒரு கெட்ட பழக்கம் அவர் வாழ்க் கையை மட்டுமன்றி என் வாழ்க்கையையும் பாழாக்கி விட்டது. அவர் ஸ்திரீ லோலர். அவர் அந்தக் காலத்துக்குச் சற்றுச் சிறப் பாகவே சம்பாதித்தார். சம்பளத்தைப் போல நாலைந்து மடங்கு அதிகமாகவே கடன் வாங்கித் தாசிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். அவர் இறந்த பிறகு என் இருபது வருஷ சம்பாத்தியம் பூராவும் கொடுத்து நான் அவர் பட்ட கடன்களைத் தீர்க்க வேண்டியிருந்தது. அந்த இருபது வருஷங்களில் ஏழை இந்தியாவில் என் போல ஏழை வாழ்வு வாழ்ந்தவன் யாரும் இருக்க மாட்டான் என்பது நிச்சயம்" என்பார் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள்.

"அந்த வறுமையில் எனக்குத் தைரியமும் ஆதரவும் தந்தது என் தாய்தான். மகாலக்ஷ்மி என்றுதான் அவளைச் சொல்ல வேணும். வேறு என்ன சொல்ல முடியும்? அவளுக்கும் கணவன் கொடுத்து விட்டுப்போன பிரசாதம் நீங்காத வியாதி ஒன்றுதான். என்ன பொறுமை! என்ன சாமர்த்தியம்......" என்பார் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள்.

ராஜாமணி சொல்வான், "வியாதியோ வியாதியில்லையோ, பாட்டி தன் கணவனுடன் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் ஈடு செய்யக்கூடிய வழியிலே உன்னோடு—தன் பிள்ளையோடு, திருப்திகரமான வாழ்வு வாழ்ந்துவிட்டாள்!"

கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளுக்கே இது பெரிய பெருமை தான். அந்தத் தாயின் மனம் கோணாமல் நடந்துகொள்வது அவருக்குச் சாத்தியமாக இருந்தது, அவர் மனைவியின் உதவியால் தான். மாமியாரே போற்றிய மாட்டுப்பெண் அவள். ஆனால் அவளைப்பற்றி எல்லாம் நன்றியுடன் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் நினைப்பது கூடக் கிடையாது. அவளைப்பற்றி நினைக்க ராஜாமணிக்கு இடமேயில்லை. அவனுடைய சிறு வயசிலேயே அவள் இறந்துவிட்டாள். பத்து வயசுக்குப் பிறகு தன் தாயை அறிய ராஜாமணிக்குச் சந்தர்ப்பமே தராமல் போய்விட்டாள்.

அவள் கணவனுக்கும் மாமியாருக்கும் கணவனின் தம்பி மார்களுக்கும் திருப்திகரமாக எப்படியோ நடந்துகொண்டு வாழ்க்கை நடத்திவிட்டாளே தவிர, அவ்வளவாகக் கெட்டிக் காரியல்ல. ஏழெட்டுக் குழந்தைகள் பெற்றெடுத்தாள். அவற்றில் மூத்தது ஒரு பெண்ணும் கடைசிக் குழந்தை ஒரு பிள்ளையுந்தான் மிஞ்சியது. பெண்ணுக்கு உரிய காலத்தில் உரியபடி கல்யாணம் செய்து வைத்தார் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள். ஆனால் அந்தப் பெண்ணின் அதிர்ஷ்டம் சரியாக இல்லை. மகா சுயநலக்காரர்களான அவள் கணவனும், கணவனின் தாயுமாகச் சேர்ந்து, பெண்ணின் நடத்தை சரியாக இல்லை என்று கதை கட்டிவிட்டு அவளைப் பிறந்த வீட்டுக்கே திருப்பி யனுப்பி விட்டார்கள். இதைவிடப் பெரிய துக்கம் தாய்க் காரிக்கு வேறு என்ன வேண்டும்?

எப்போதுமே பலவீனமாக இருந்த தாய் தன் பெண் வீடு திரும்பிய இரண்டொரு வருஷங்களுக்குள்ளாகவே மனமுடைந்து இறந்துவிட்டாள். தன் தகப்பனுக்கும் தம்பிக்கும் அதிகக் கஷ்டம் கொடுக்கக்கூடாது என்று எண்ணியவள் போல, அந்தப் பெண்ணும் தன் தாய் இறந்து நாலைந்து வருஷங்களுக்குள்ளாகவே இறந்துவிட்டது. அவள் அப்படி

இறந்துவிட்டதுபற்றி ராஜாமணிக்கோ அவன் தகப்பனுருக்கோ ஒன்றும் துக்கம் இல்லை. இருந்து சகிக்க முடியாத கஷ்டங்களை அநுபவித்துக்கொண் டிருப்பதைவிட, அவள் போய்விட்டதே மேல் என்றுதான் இருவருக்கும் தோன்றிற்று. இருந்தாலும் சில சமயங்களில் அந்தப் பெண்ணினுடைய அர்த்தமற்ற வாழ்க்கையை அவர்களால் நினைக்காமல் இருக்க முடிந்ததில்லை.

ராஜாமணி செய்கையற்றுப் போனதற்கெல்லாம் அடிநாளிலிருந்து இதை ஒரு காரணமாகச் சொல்லலாம். அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவன் அக்கா, வீட்டில் இருந்தாள். தாயின் மரணம்—தொடர்ந்து சகோதரியின் மரணம்! 'என் செயலால் ஆவது இனி ஒன்றும் இல்லை' என்று செயலற்றுவிட இளம் பிராயத்திலேயே கற்றுக்கொண்டு விட்டான் ராஜாமணி. முடிவு காணுத தத்துவ விசாரங்களைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றும் கை வரவில்லை.

கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளின் தம்பிமார்கள் இருவரும் சகல விதங்களிலும் தங்கள் அண்ணுவுக்கும், தங்கள் அண்ணு பிள்ளைக்கும் எதிர்மாருன குணங்கள் உள்ளவர்கள். மூத்தவரைப் பீடித்த மாதிரி குடும்பக் கவலைகள் ஆரம்பமுதலே அவர்களைப் பீடிக்கவில்லை. அவர்கள் அந்தக் குடும்பத்தில் வேர் ஊன்றவே யில்லை என்று கூடச் சொல்லலாம். அவர்கள் வேர் ஊன்ருமலே, முத்தண்ணுவின் செலவில் வளர்ந்து மரமாகிப் பூத்துக் காய்த்தும் விட்டார்கள்.

அவர்கள் வடக்கே வெவ்வேறு இடங்களில் மிகவும் சௌகரியமாக இருந்தார்கள். முத்தண்ணு அவர்களில் யாரையாவது பார்ப்பது மாமாங்கத்துக்கு ஒரு முறைதான். முத்தண்ணுவின் குடும்பக் கவலைகளோ கஷ்டங்களோ அவர்களைத் தொடவே இல்லை. யாரோ மூன்ருவது மனுஷனைப்பற்றி நினைப்பது போலத்தான் அவர்கள் முத்தண்ணுவைப் பற்றி நினைத்தார்கள் என்று சொல்வது மிகையாகாது.

இதுபற்றி ராஜாமணிக்கு ரொம்பவும் கோபம். விஷயம் தெரிந்தது முதல் அவன் தன் சிற்றப்பன்களிடம் போவது கூடக் கிடையாது. ஆனால் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் இதை எல்லாம் பாராட்டுகிற மாதிரி காட்டிக்கொள்வது கிடையாது; "அவர்கள் என்னை லட்சியம் செய்யா விட்டால் என்ன? எங்கேயாவது நன்றாக இருந்தால் சரிதான்" என்று சொல்லுவார். ஆனால் அவருக்கும் மனசில் இது ஒரு பெரிய குறைதான்.

ஒரொரு சமயம் ராஜாமணியே சொல்லுவான்: "நம்மோடு சேர்ந்துகொண்டார்களானால் அவர்களையும் நம்முடைய துரதிருஷ்டம் பிடித்துக்கொண்டாலும் பிடித்துக் கொண்டுவிடும். சேராமல் இருப்பது நல்லதுதான். அவர்களாவது சௌகரியமாக இருக்கட்டும்" என்பான்.

கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் அறுபத்து நாலு வருஷங்களில் ஒரு தவறுகூடச் செய்ததில்லை. மனசில் உறுத்தக் கூடியதாக ஒரு தவறுகூடச் செய்ததில்லை என்பது அவருக்கு மிகவும் ஆறுதல் அளித்த விஷயம்.

"அப்பாவின் வாழ்க்கையிலிருந்து ஒன்றுதான் நான் கற்றுக்கொண்டேன். ஸ்திரீகள் விஷயத்தில் கெட்டவனாக இருப்பவன், குடும்பத்துக்கு லாயக்கற்றவன் என்று கண்டு கொண்டேன். ஸ்திரீலோலனாக இருப்பவன் தன் வாழ்வு மட்டுமல்ல, தனக்குப் பின் வருகிற சந்ததியின் வாழ்வையும் குலைத்து விடுகிறான் என்று அறிந்துகொண்டேன். ஸ்திரீகள் விஷயத்தில் நல்லவனாக இருப்பது என்று அன்றே தீர்மானித்துக்கொண்டு விட்டேன் நான்."

ஸ்திரீகளைப் பற்றிய மட்டிலுந்தான் என்றில்லை. மற்ற எல்லா விஷயங்களிலுமே அவர் நல்லவராகவே தம் வாழ்நாட்களைக் கழித்துவிட்டார். யாரும் அவரைப்பற்றிக் குறை கூறவே துணிய மாட்டார்கள். அவர் புறம் கூறியதில்லை; பிறர் சொத்துக்கு ஆசைப்பட்டதில்லை; பிறருக்குக் கெடுதல் நினைத்ததுமில்லை, செய்ததுமில்லை. அவர் பிறர் காரியங்களில் கலந்து

கொண்டதுமில்லை. தாம் உண்டு தம் காரியம் உண்டு என்று இருந்துவிட்டவர்.

நல்லவர்களுக்கு இகபோகத்தில் எதுவும் கிடையாது என்பதற்கு எடுத்துக்காட்டு, கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள்.

"மற்றதெல்லாம் பாழ்த்துவிட்டது உண்மைதான் என்றாலும், எனக்கு எஞ்சியிருப்பது ராஜாமணி. அவன் தலைப்பட்டு என் துக்கங்களையெல்லாம் துடைத்துவிடுவான். அவன் உள்ள வரையில் எனக்கு என்ன கஷ்டம்!" என்றுதான் ஆரம்பத்தில் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் எண்ணினார். அவர் அப்படி எண்ணியதில் தவறு ஒன்றும் இல்லையே! ஒரு நாளில் அறுபது நாழிகை நேரமுமா இருட்டாகவே இருந்துவிடும் ?

இதுதான் விசேஷம். நாளில் அறுபது நாழிகை நேரமும் இருட்டாகவே இருந்துவிட்டது என்பது மாத்திரமல்ல, அடுத்த நாளும் இருட்டிலேயே தொடங்கிற்று!

ராஜாமணி நன்றாகவேதான் படித்தான், திருப்திகரமாகவே தான் பரீட்சைகளில் தேறினான். சூட்டோடு சூடாக ஒரு வேலையிலும் அமர்ந்தான். 'என் கஷ்டங்களெல்லாம் தீர்ந்தன' என்று எண்ணிக் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் மனம் பூரித்தார்.

ஆனால் அந்தப் பூரிப்பு ஏழெட்டு மாசங்களுக்குக்கூட நீடிக்கவில்லை. ராஜாமணிக்குத் திடீரென்று வேலை போய் விட்டது. காரியாலயத்தில் ஓர் அயோக்கியன் செய்த காரியம் அஜாக்கிரதையுள்ள ராஜாமணியின் தலையில் சுமத்தப்பட்டது. ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டிய ராஜாமணி தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டான்.

சில நாட்களிலேயே ராஜாமணிக்கு மீண்டும் வேலை கிடைத்தது. செய்கையற்று, தான் செய்யாத காரியங்களுக்கெல்லாம் அளவு மீறிய தண்டனையை எதிர்பார்த்த வண்ணமே ராஜாமணி தன் வேலையைச் செய்தான்; நாட்களைக் கடத்தினான். தண்டனை ஒன்றும் கிடைக்கவில்லை. இச் சமயம்—வேலை சீக்

கிரமே போய்விட்டது. சாமர்த்தியமான வேலைக்கு லாயக்கற்றவன் என்பது அவன் காரியாலயத்தில் அவனைப்பற்றி ஏற்பட்ட அபிப்பிராயம்.

இதற்குள் ராஜாமணியைப் பற்றிக் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் வைத்திருந்த நம்பிக்கைகளும் ஆசைகளும் படிப்படியாக இறங்கிக்கொண்டே வந்துவிட்டன. தம்முடைய கடைசித் துயரத்தை ஏற்றுக்கொள்ள, சகித்துக்கொள்ளத் தயாராஞர் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள்.

இடையில் ராஜாமணிக்குக் கல்யாணம் ஆயிற்று. மீண்டும் தகப்பனுக்கும் பிள்ளைக்கும் வாழ்க்கையில் நம்பிக்கை பிறந்துவிடும்போல் இருந்தது. மிகவும் நல்ல இடத்தில் எப்படியோ எக்கச் சக்கமாக நேர்ந்துவிட்டது அது. ராஜாமணிக்குக் கல்யாணம் ஆயிற்று. அழகான பெண், பணக்கார வீட்டுப் பெண். அந்தக் கல்யாணத்திற்குப் பிறகு ராஜாமணிக்குங்கூட வாழ்க்கையில் ஒரு பிடிப்பு உண்டாவது போல் இருந்தது. மீண்டும் மனிதஞக வாழ்க்கை நடத்திவிடுவது என்று தீர்மானித்தவஞக ராஜாமணி, பல வருஷங்களுக்கு முன் விட்ட இடத்திலிருந்து அடி எடுத்து வைத்து முன்னேற முயன்முன். மனைவி என்கிற புதுத் தெம்பின் உதவியால் இரண்டொரு படிகள் ஏறக்கூட ஏறிஞன்.

ஆஞல் அந்த மனைவி என்கிற தெம்பு அதிக நாள் இருக்கவில்லை. கல்யாணமான இரண்டாவது வருஷத்தில் டைபாய்டில் படுத்தாள். கணவன் மனசில் ஏராளமான ஏக்கங்களைப் போராட விட்டுவிட்டு அவள் ஒரு நாள் போய்விட்டாள்.

அதற்குப் பிறகு ராஜாமணி தலை நிமிரவே யில்லை. விதியுடன் போராடத் தனக்குத் தெம்பு இல்லை என்று தீர்மானித்து விட்டான். வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிவிட முயன்முன். கிழத் தகப்பனுக்காகத்தான் அவன் வாழ்க்கையுடன் ஒட்டிக்கொண்டிருந்தான் என்றுகூடச் சொல்லலாம்.

அவனைத் தூண்டிவிடக் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளுக்குத்தான் எங்கிருந்து, இவ்வளவும் ஆனபிறகு தெம்பு வரும்?

ஒரு சமயம் தம் பிள்ளைக்கு இரண்டாவது கல்யாணம் செய்து வைக்க முயன்றார். அந்தப் பேச்சு காதில் விழுந்ததும் தம் பிள்ளை தம்மைப் பார்த்த பார்வையை அவரால் ஆறு வருஷங்களுக்குப் பிறகு இன்னமும் மறக்க முடியவில்லை.

சாவை எதிர்பார்த்துக்கொண்டு நாட்களை எண்ணிக் கொண்டிருப்பதைத் தவிர அவருக்கு வேறு ஒன்றும் வாழ்க்கையில் சாத்தியமில்லை. ஆனாலும் சாவு என்று எண்ணினால் அவர் மனசு துணுக்குற்றது. அறுபத்துநாலு வயசிலும் அவர் மரணத்தை வரவேற்கத் தயாராக இல்லை.

* * * *

ராஜாமணியினுடைய சிந்தனைகளில் கிழவரின் குரல் குறுக்கிட்டது. "போ! போய்க் காரியத்தைப் பாரு. குளி. சாப்பிடலாம்" என்றார் கிழவர்.

ராஜாமணி எழுந்தான். கொடியில் இருந்த துண்டை எடுத்துக்கொண்டு அவன் கிளம்பும் சமயம் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் சொன்னார்: "மார்கழி, தை என்று தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறேனே தவிர, சாவை இன்றே வரவேற்க எனக்குத் தைரியம் இல்லை."

ராஜாமணி சற்றுத் தயங்கினான்; "ஏனப்பா இன்றைக்கு இப்படிப் பேசறே!" என்றான்.

கிழவர் அவன் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ஆனால் அவர் மனசில் ஒரு விஷயம் அன்று பளிச்சிட்டது. 'என் துரதிருஷ்டந்தான் என் பிள்ளையையும் இப்படி விடாமல் பாதிக்கிறது. நான் போய்விட்டால் ஒருவேளை அவன் சுகமாகவே இருப்பான். அது சாத்தியமே!' என்று எண்ணினார். அந்த எண்ணம் அவர் மனசிலே விசுவரூபம் எடுத்தது.

தம் பிள்ளை தம்மையே பார்த்துக்கொண்டு நின்றதைப் பார்த்தார் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள்: "போ, போய்க் குளித்துவிட்டு வா, எனக்குப் பசிக்கிறது" என்றார்.

ராஜாமணி பதில் சொல்லாமல் மனம் நிறைந்தவனாகச் சென்றான். கிணற்றிலிருந்து நாலு குடம் ஜலம் இழுத்துவிட்டுக்கொண்டபின்தான் அவனுக்கு ஞாபகம் வந்தது. சற்று முன் அவன் மனசில் ஓர் எண்ணம் தோன்றியது: 'அவர் போனபிறகுதான் எனக்கு நல்ல காலம் தொடங்கும்' என்ற அந்தச் சிந்தனையின் எதிரொலி அவர் மனசிலும் எழுந்திருந்தால்......? கிணற்றில் விட்ட குடத்தை அப்படியே விட்டு விட்டுத் துண்டால் தலையைப் பரபரப்பாகத் துடைத்துக் கொண்டு உடம்பிலிருந்து ஈரம் சொட்டச் சொட்டக் கூடத்துக்கு வந்தான்.

நடுக் கூடத்தில் தெற்கு வடக்காகத் துணியை விரித்துக் கொண்டு படுத்திருந்தார் கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள். அவர் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்திருந்தது.

"அப்பா" என்றான் ராஜாமணி.

பதில் சொல்லுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவர் பதில் சொல்லவில்லை.

பிரேதத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை ராஜாமணிக்கு. ஈரத் துணியால் முகத்தை மூடிக் கொண்டு, கூடத்துத் தூணில் சாய்ந்தான் ராஜாமணி. அவன் ஈர முதுகிலிருந்து ஜலம் தரையில் ஓடியது.

"முதலில் தாய் இருந்தாள்—கடைசியில் பிள்ளை இருந்தான். அவர்களுக்கென்று தியாகம் செய்வது அவருக்குச் சாத்தியமாக இருந்தது. எனக்கு யார் இருக்கிறார்கள்? யாருக்கென்று நான் என்ன தியாகம் செய்வதற்காக உயிர்வாழ வேண்டும்?" என்று தன்னையே கேட்டுக்கொண்டான் ராஜாமணி.

இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை.

"வயசு முப்பத்தைந்துதான் ஆகிறது. நானும் அவர் வயசு வரை இருக்கும்படி நேர்ந்துவிட்டால்......?"

இந்தக் கேள்விக்கும் பதில் ஏது?

அவன் மீண்டும் சுய நினைவு பெற்றபோது, இருட்டத் தொடங்கிவிட்டது.

---

# இரண்டு தோழர்கள்

இது வெறும் கதை என்றுதான் பலருக்கும் தோன்றும்; ஒப்புக்கொள்கிறேன். ஆனால் என் கண்முன்னாலேயே நடந்தது. முழுவதும் உண்மை என்கிற உத்தரவாதத்துடன்தான் நான் கதையைத் தொடங்க வேண்டியதாக இருக்கிறது. இந்த மாதிரி விஷயங்களில் நானும் சில வாரங்களுக்கு முந்தி வரையில், நம்பிக்கையற்றவன்தான்! ஆனால் இப்போது நம்பத் தான் வேண்டியதாக இருக்கிறது—என்ன செய்வது?

நாலைந்து வருஷங்களாக என் வீட்டிலே இருந்துகொண்டு ஒரு பையன் படித்துக்கொண் டிருக்கிறான். அவன் பெயர் ராமு. இப்போது அவனுக்கு வயசு பதினாறுகிவிட்டது. எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் இவ்வருஷம் நல்ல மார்க்குகளுடன் தேறி விட்டான். அவனுக்குப் பரீட்சை தேறிய கதைதான் இது. ஆனால் கதை என்றால் கதை அல்ல; உண்மை.

*  *  *  *

ராமு எனக்குத் தூர பந்து. அவன் பெற்றோர் மிகவும் ஏழைகள். பையன் எஸ். எஸ். எல். சி. என்கிற சொர்க்க வாசல் தாண்டி, குமாஸ்தா லோகம் என்கிற சொர்க்கத்தை—லட்சிய பூமியை அடைந்துவிட வேண்டுமென்பது அவனுடைய பெற்றோரின் விருப்பம். அவனுடைய படிப்பையும் நடத்தையையும் அவர்களுக்குத் திருப்திகரமாகக் கவனித்துக்கொள்வேன் என்கிற நம்பிக்கையில் அவனை என்னிடம் விட்டு வைத்திருந்தார்கள்.

நடத்தையைப் பற்றிய வரையில் அவனிடம் பிசகு சொல்லவே முடியாது. வெகு நல்ல பையன்; பரம சாது. எதிர்த்து வாயாடுவது என்றால் என்ன என்றே அவனுக்குத்

தெரியாது. கள்ளங் கபடமில்லாமல் பேசுவான். எது சொன்ஞலும் மறு வார்த்தை பேசாமல் செய்வான். என்னைவிட என் மனைவி ராஜிக்கு அவனிடம் பிரியம் அதிகம். சொந்தத் தம்பியையும்விட அவனிடம் அதிகப் பரிவு காட்டுவாள். காலத்தில் அவன் வயிறு நிறையச் சோறு போட்டுவிடுவாள். இது ஒன்றுதான் அவனிடம் குறை என்று சொல்ல முடியும்; கொஞ்சம் சாப்பாட்டு ராமன். அதனுல் என்ன?

படிப்பிலே அவனைச் சொல்லிப் பயனில்லை. அவன்மேல் வஞ்சம் கிடையாது. அகப்பட்ட நேரமெல்லாம் விழுந்து விழுந்துதான் படிப்பான். வீடு அதிரத் தவளை மாதிரி உரக்கப் பாடம் பாடமாகப் படிப்பான். இரவு எல்லோரும் தூங்கிய பிறகு, சில சமயம் பன்னிரண்டு மணி வரைக்குங்கூடப் படிப்பான். ஆனுல் படித்ததொன்றும் அவனுடைய களிமண் மூளையில் ஏருது! அவன் படித்துவிட்டு வருகிற பாடத்தில் அதே சமயம் கேள்வி கேட்டால்கூட அவனுல் பதில் சொல்ல முடியாது. கவனம் அவ்வளவு! ஆருவது பாரம் வரட்டும், பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டு விட்டேன் நான். எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு இரண்டு மாதம் இருக்கும் போது உட்கார்ந்து இரவு பகலாக அவனுக்கு எல்லாவற்றையும் கரைத்துப் புகட்டிவிடலாம் என்று எனக்கு எண்ணம்.

படிப்பு வரவில்லையே தவிர ராமுவை அசடு என்று சொல்லிவிட முடியாது. கடை கண்ணிக்குப் போய் வருவதெல்லாம் என் வீட்டில் அவன் இருந்த வரையில் அவன்தான் செய்து வருவான். சாமர்த்தியமாகத்தான் செய்வான்—குற்றம் சொல்லும்படியாகவே இருக்காது.

தன் வயதுப் பையன்களுடன் அதிகமாகச் சேரமாட்டான். ஆனுல் அவன் வகுப்பில் அவன் வயதுப் பையன் ஒருவன் - அவன் பெயரும் ராமுதான். இருவரும் அத்தியந்த நண்பர்கள் - இணைபிரியாத தோழர்கள். அந்த ராமுவும் ஏழைதான் - ஆனுல் அநாதை. மாமா வீட்டில் போட்ட சோற்றை நாய் மாதிரி தின்றுவிட்டு, பெற்ருேர் அன்பை உணராமல் வளர்ந்து

கொண்டிருந்தான். சமயம் நேருகிற போதெல்லாம் இரண்டு ராமுகளும் சேர்ந்துதான் இருப்பார்கள்.

குண விசேஷங்கள், உருவம், தோற்றம், நடை உடை பாவனை, வயசு, எல்லாவற்றிலுமே இரண்டு பேரும் ஒன்று தான். ஆனால் இருவருக்கும் ஒரு விஷயத்தில் மட்டும் பெரிய வித்தியாசம் இருந்தது. எங்கள் வீட்டு ராமு படிப்பில் அந்த வகுப்பில் கடைசி என்று சொல்ல முடியாது - தேறக் கூடியவர்களில் கடைசி என்று சொல்லலாம். ஆனால் அந்த ராமு தான் வகுப்பில் எல்லாப் பாடங்களிலும் முதல். இத்தனைக்கும் அவன் மாமா வாசிப்பதற்குப் பாடபுஸ்தகங்கள் கூட வாங்கித் தரமாட்டார்.

இப்படி இரண்டாவது பாரத்திலிருந்து ஐந்தாவது பாரம் வரையில் இரண்டு ராமுகளும் நெருங்கிய தோழர்களாகப் படித்து வந்தார்கள். ஐந்தாவது பாரத்திலும் தேறி, ஆறுவது பாரத்திற்கும் இருவரும் வந்துவிட்டார்கள். எஸ். எஸ். எல். சி. வகுப்பல்லவா ? இருவருமே பொறுப்புடன் படித்து வந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். படிப்பு, அந்த ராமுவின் விஷயத்தில் பலன் அளிக்கும்போல் இருந்தது. எங்கள் வீட்டு ராமுவின் விஷயத்தில் பலன் தராதுபோல் இருந்தது. அவ்வளவு தான். இருவரும் சில சமயம் சேர்ந்தும் படிப்பார்கள்.

## 2

கிறிஸ்துமஸ் லீவுக்குப் பிறகு அந்த ராமு ஏனோ தெரியவில்லை—பள்ளிக்கூடத்துக்குத் திரும்பவில்லை. 'நாளை வருவான், நாளை வருவான்' என்று எங்கள் ராமு காத்திருந்தான். வரவில்லை. ஒரு வாரம் கழித்து ராமுவின் மாமா வீட்டிற்குப் போய் விசாரித்ததில்தான் விஷயம் தெரியவந்தது. லீவில் போன ராமு, எங்கேயோ காவேரியில் நீந்தப் போய் ஆற்றில் இறந்துவிட்டானாம் !

கை இழந்தவன்போல் ஆகி விட்டான் எங்கள் ராமு. படித்தாலும் புரிந்துகொள்ளாதவன் ; இப்போது படிப்பதே அரிதாகி

விட்டது. தன் புஸ்தகங்களைப் பிரித்து வைத்துக்கொண்டு, மனம் எங்கெல்லாமோ ஓட, பிரமித்தவன் போல, பேயடித்தவன் போல, உட்கார்ந்திருப்பான். நான் அவன் மனத்தைத் திருப்பிப் படிப்பில் செலுத்த முயன்றதெல்லாங்கூடப் பயன் தரவில்லை. 'சரிதான்; இந்த வருஷம் போகட்டும்; அடுத்த வருஷம் தானாக மனம் தேறிவிடுவான்' என்று நான் அவனை அதிகமாக வற்புறுத்தாமல் இருந்துவிட்டேன்.

தினம் உத்ஸாகமில்லாமல் பள்ளிக்கூடம் மட்டும் போய் வந்துகொண் டிருந்தான். மற்றப்படி முன்போலெல்லாம் அவன் சாப்பிடுவதுகூட இல்லை. வீட்டு வேலைகளைக்கூட அவன் அதிகமாகக் கவனித்துக்கொள்வதில்லை. நானும் ராஜியும், "பாவம்! அன்பு நிறைந்த தோழனை இழந்து விட்டவனை அதிகமாக எதுவும் சொல்லக்கூடாது" என்று விட்டுவிட்டோம்.

பரீட்சைக்கு இரண்டு வாரங்கள் இருக்கும்போது ஒரு நாள் மாலை அவன் கையில் ஒரு கட்டுப் புஸ்தகங்கள், நோட்டுப் புஸ்தகங்களுடன் வந்தான்.

"ஏதடா ராமு, இதெல்லாம்?" என்று நான் கேட்டேன்.

"ராமுவினுடையது. வாங்கிண்டு வரணும்னு எனக்குத் தோன்றியது. வாங்கிண்டு வந்தேன்" என்றான் ராமு.

"......ம்...... உங்கிட்ட இல்லையா, இந்தப் புஸ்தகங்களெல்லாம்?" என்று கேட்டேன் நான்.

சிறிது நேரம் தயங்கினான் எங்கள் ராமு. பிறகு சொன்னான்: "என்னவோ இதை எல்லாம் வாங்கிண்டு வரணும்னு தோணித்து; வாங்கிண்டு வந்தேன்" என்றான் மீண்டும்.

பாவம்! தன் சிநேகிதனின் ஞாபகார்த்தமாகத் தன்னிடம் அவனுடைய புஸ்தகங்களும் நோட்டுப் புஸ்தகங்களுமாவது இருக்கட்டும் என்று ஆசைப்படுகிறான் என்று எண்ணிக் கொண்டேன். இருந்துவிட்டுப் போகட்டுமே!

"ராமுவுடைய மாமாவுக்கு இதற்கெல்லாம் ஐந்து ரூபாய் வேண்டுமாம்" என்றான் ராமு.

'ஐந்து ரூபாயா? அவரிடமே திருப்பி எறிந்துவிடு!' என்று சொல்ல முதலில் எண்ணினேன். பிறகு ராமுவின் முகத்தைப் பார்த்தேன். "சரி, ஐந்து ரூபாயைக் கொண்டு போய்க் கொடுத்துவிடு; ராஜியைக் கேட்டு வாங்கிண்டு போ!" என்றேன். ராமு முகம் மலர உள்ளே போய்விட்டான்.

இந்தச் சம்பவத்துக்கு ஏழெட்டு நாட்களுக்குப் பிறகு தான் நான் கவனித்தேன். ராமு இப்போதெல்லாம் உரக்கப் படிப்பதே இல்லை; படித்தாலும்—அதுவே எனக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது. மனசிற்குள்தான் படித்துக் கொண்டான். நான் அவனுக்கு வருஷ ஆரம்பத்தில் வாங்கிக் கொடுத்த புஸ்தகங்களை அவன் தொடுவதே இல்லை. இறந்துபோன ராமுவின் புஸ்தகங்களையும் நோட்டுப் புஸ்தகங்களையும் பிரித்து வைத்துக்கொண்டு மணிக்கணக்காகப் பேயறைந்தவன் போல உட்கார்ந்திருப்பான். நான் கவனிப்பதைக் கவனித்தால் சில சமயம் திடுக்கிட்டு விழித்தெழுவான். நான் கவனிப்பதைக் கவனிக்காமலே இருந்துவிடுவான் பல தடவைகளில்.

பரீட்சை நெருங்கிக்கொண் டிருந்தது.

ஒரு நாள் இரவு எங்கள் ராமு படித்துக்கொண் டிருந்ததை வெகு நேரமாகக் கவனித்துக்கொண்டிருந்த ராஜி சொன்னாள்: "ராமு கையை வைக்காமலே, பக்கம் புரளுகிறதே!" என்றாள்.

"போடி அசடே!" என்றேன் நான்.

"அதென்னவோ, இதற்கு முன்பு கூட நான் நாலைந்து தடவை பார்த்துவிட்டேன். காற்று இல்லாதபோதுகூட ராமுவுக்கு முன்னால் இருக்கிற புஸ்தகத்தை, யாரோ கண்ணில் படாத ஒருவர் புரட்டுகிற மாதிரி இருக்கிறது. பக்கங்கள் தாமாகப் புரளுகின்றன!" என்றாள் ராஜி.

"உனக்குப் பைத்தியந்தான் பிடித்துவிட்டது!" என்றேன் நான். பின்னால் நடந்ததை எல்லாம் கவனித்துச் சேர்த்துப் பார்க்கும்போதுதான் அவள் சொன்னதில் ஏதோ விஷயம் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

பரீட்சைக்கு முதல் நாளும் இப்படித்தான். "என்னடா படித்தாய், ராமு?" என்று நான் கேட்டபோது; "ஒன்றுமே படிக்கவில்லையே?" என்று அந்த நிமிஷம் வரை புஸ்தகத்தின் முன் உட்கார்ந்திருந்த ராமு பதில் அளித்தான். எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. படிக்காமல் புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு என்னதான் செய்துகொண்டிருந்தானோ?

ராமுவாகவே சொன்னான். "ராமு மட்டும் இருந்தானால்—எப்படிப் படிப்பான்! எனக்கும் சொல்லித் தருவானே!" என்றான்.

"அவனை நினைத்துக்கொண்டாவது நீ நன்றாகப் படித்துப் பாஸ் பண்ண வேண்டாமா? படித்திருக்கிறாயா? பாஸ் பண்ணிவிடுவாயா?" என்று கேட்டேன்.

"என்னவோ?" என்றான் ராமு.

## 3

எஸ். எஸ். எல். சி. பரீட்சைகள் முடிந்துவிட்டன. அன்றன்று கேள்வித்தாளை ராமுவிடமிருந்து கையில் வாங்கி அவனைப் பரீட்சித்துப் பார்த்தேன். கேள்வித் தாள்களில் இருந்த ஒரு கேள்விக்காவது அவனால் பதில் சொல்ல இயலவில்லை. "என்னடா எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டால், "என்ன எழுதினேனோ, தெரியவில்லை!" என்றான்.

எனக்குப் புரியவில்லை. 'எப்படியாவது நடக்கட்டும்; பார்த்துக்கொள்ளலாம்' என்று விட்டுவிட்டேன்.

பரீட்சைகள் முடிந்து ராமு தன் ஊருக்குப் போன பிறகு ராமுவின் உபாத்தியாயர் கோபாலையரைத் தற்செயலாகச் சந்தித்தேன். அவர் ராமுவை விசாரித்தார். "ஊருக்குப் போய்விட்டானு? சரிதான்; பரீட்சையில் குனிந்த தலை நிமிராமல் ரொம்பவும் நன்ருக எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுதியிருக்கிறுன் என்று ஹாஸ்டல் சூபரிண்ட்டாக இருந்த ராமசாமி நாயுடு சொன்ஞர்" என்ருர்.

"அப்படியா!" என்றேன் நான்.

பரீட்சை முடிவுகள் வந்தவுடன் ராமு தேறிவிட்டான் என்று தெரிந்தது. எஸ். எஸ். எல். சி. புஸ்தகங்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்த பிறகுதான் தெரிந்தது—எங்கள் ராமு நானூற்றைம்பது மார்க்குகளுக்கு மேல் வாங்கி, அவன் பள்ளிக்கூடத்திலே முதல்வஞக, ராஜதானியிலே முதல் நூறு பேர்வழிகளுக்குள் இருந்தான்.

ராமு வந்திருந்தான். பரீட்சை முடிவுகளைப் பார்த்து அவனே ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தான்.

ராஜி சொன்ஞள்; "பரீட்சை தேறி இத்தனை மார்க்குகள் வாங்கி யிருப்பது நம்ப ராமு இல்லை!" என்ருள்.

"பின் யாராம்?" என்று கேட்டேன் நான்.

"அவன் தோழன் ராமுதான்! படித்தது, பரீட்சை எழுதியது, மார்க் வாங்கியது எல்லாம் அந்த ராமுதான். இந்த ராமு சாப்பாட்டைத் தவிர மற்றதிலெல்லாம் எவ்வளவு சோப்பளாங்கின்னு நமக்குத் தெரியாதா?" என்ருள் ராஜி.

"அந்த ராமு இருந்தால் இந்த மார்க்கும் வாங்கியிருப்பான், இன்னும் அதிக மார்க்கும் வாங்கியிருப்பான்!" என்றேன் நான்.

எங்கள் ராமுவின் கண்களில் ஜலம் துளித்திருந்தது.

ராமுவின் பெற்றோர், நான்தான் தங்கள் பிள்ளைக்குப் பாடமெல்லாம் சொல்லிக் கொடுத்துவிட்டேன் என்று என்னைப் போற்றுகிறார்கள். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

எது எப்படி இருந்தாலும் மனிதனுடைய சக்தியை மீறிய ஒரு சக்தியிலே இப்போது எனக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

# சோதனை

மனிதனை அவனுடைய சக்தியை மீறிக் கடவுள் சோதிப்பதே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒரு மனிதன் இவ்வளவுதான் தாங்குவான் என்பது கடவுளுக்குத் தெரிகிறது. ஆனால் மனிதனே மனிதனைச் சோதிக்கத் தொடங்கும்போது...

"அணுக்குண்டும் ஹைட்ரஜன் குண்டும் தோன்றிவிடுகின்றன" என்றார் நண்பர்.

"உண்மைதான். ஆனால் அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டு விவகாரங்களெல்லாம் ரொம்ப ரொம்பப் பெரியவர்கள், பிரதம மந்திரிகள், தேசத் தலைவர்கள் கூடித் தீர்க்கவேண்டிய இன்றைச் சில்லறை விஷயங்கள். நாம் எதற்காக அதில் ஈடுபட்டு மனசைக் கலக்கிக்கொள்ள வேண்டும்?" என்றேன்.

நண்பர் சொன்னார்: "நாம் மனசைக் கலக்கிக்கொள்ள மறுத்தாலுங்கூட அவை எல்லாம் காலைத் தினசரித் தாளில் தொடங்கி இரவு முதல் ஜாம சொப்பனாவஸ்தை வரையில் நம்மை விடாமல் துரத்துகின்றனவே, என்ன செய்வது? தப்பி எங்கே ஓடி ஒளிவது?"

இதற்கு நேரடியாக நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சோதனை என்று நான் சொன்னபோது 1942, 1943-இல் என் வீட்டில் நடந்த ஒரு போலீஸ் சோதனையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் சொன்னேன். அதைப்பற்றி அந்த நண்பருக்குத் தெரியாது.

"1942, 1943-இலா? நீங்கள் எப்போதுமே அரசியலில் ஈடுபடாதவராயிற்றே?" என்று கேட்டார் நண்பர்.

"பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதிகளான இந்தியப் போலீஸ் இலாகா அதற்காக என்னை விட்டுவிடுவார்களா?" என்றேன்.

"நீங்கள் போலீஸ் சோதனை என்ற பிறகு எனக்குக்கூட ஒரு போலீஸ் சோதனைக் கதை ஞாபகம் வருகிறது. முதலில் நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள், பிறகு நானும் ஒரு கதை சொல்லுகிறேன்" என்றார்.

"நான் சொல்ல வந்தது கதை அல்ல; ஒரு சின்ன அநுபவம்."

"உம்......"

"சர்வதேசக் கதை மலர்கள் என்று நான் ஒரு வரிசை மொழிபெயர்ப்புக் கதைகள் வெளியிட்டிருக்கிறேன்."

"ஆமாம், நானும் பார்த்திருக்கிறேன்" என்றார் நண்பர்.

"அவற்றின் அட்டையில் **காதற்கதை. இத்தாலி - காளி - ஜெர்மனி** என்று கொட்டை எழுத்துக்களில் போட்டிருந்தது."

"ஆமாம். எனக்கும் ஞாபகம் இருக்கிறது" என்றார் நண்பர்.

"1942 கடைசியில் ஒரு நண்பரின் உதவியால் நான் சர்க்காரின் கவனத்துக்கு இலக்கானேன். அச் சமயம் ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு, வாடகை கொடுக்காத ஒரு 'வாடகை பஸ்'ஸில் ஒரு போலீஸ் கோஷ்டி என் வீட்டை அவசரச் சோதனை போட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே கவிழ்த்துவிடுவதற்கான மூலாதாரமான ஒரு திட்டம், ஒரு ஆயுதம், ஒரு...என்னவென்று சொல்வது...ஏதாவது என் வீட்டில் நானும் அறியாமலே வந்து புகுந்துகொண்டிருக்குமோ என்று எனக்கே அந்தப் போலீஸ் படையைப் பார்த்ததும் சந்தேகமாகப் போய்விட்டது. எனக்குத் தூக்கக் கலக்கம். வீட்டிலும் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. நல்ல வேளையாகப் போலீஸ்காரர்கள் கையில் வேறு எதுவும் அகப்படவில்லை

இந்தச் சர்வதேசக் கதைகளின் அட்டையில் போட்டிருந்த ஜெர்மனி, இத்தாலி என்கிற விஷயத்தை ஒரு போலீஸ் மேலதிகாரியும் ஒரு போலீஸ் சின்ன அதிகாரியும் தொண்ணூறு நிமிஷங்களுக்கு மேல் விவாதித்தார்கள், விவாதித்தார்கள், விவாதித்தார்கள்; இரவு இரண்டு மணி வரையில் விவாதித்தார்கள்.''

"வேடிக்கையாக இருக்கிறதே!'' என்றார் நண்பர்.

"எனக்கு அப்போது அது வேடிக்கையாக இல்லை. அவர்கள் விவாதம் எப்படி முடியுமோ என்ற பீதியுடன் நான் காத்திருந்தேன். ஜெர்மனி, இத்தாலி என்கிற பெயர் போட்ட புஸ்தகங்களில் என்ன என்ன இருக்கலாம் என்று இரண்டு போலீஸ் அதிகாரிகளும் முடிவு கட்ட முயன்றபோது, நானே பயந்துபோனேன்......''

"அன்றிரவு உலகத்தில் சிறந்த இரண்டு கதைகளுக்கு வேறெவ்விதத்திலும் கிடைத்திருக்க முடியாத இரண்டு போலீஸ் வாசகர்கள் கிடைத்து விட்டார்கள்'' என்றார் நண்பர்.

"மூன்று மணி சுமாருக்கு அந்தப் புஸ்தகங்களில் ரகசிய பாஷை, சங்கேதங்கள், விரோதி தேசங்களுக்குச் சாதகமான தகவல்கள், காங்கிரஸ் அநுதாப இலக்கியம்-எதுவும் இல்லை என்கிற முடிவுக்கு வந்தார்கள் போலீஸ் அதிகாரிகள்.''

நண்பர் சொன்னார்: "போயும் போயும் நீங்களும் ஜெர்மனி, இத்தாலி என்று விரோத தேசக் கதைகளைத்தானே பார்த்து மொழி பெயர்த்தீர்கள்? நேச தேசக் கதைகளாகப் பார்த்து வெளியிட்டிருக்கக் கூடாதோ?''

"செய்திருக்கலாம், முந்திய யுத்தத்தில் ஏற்பட்ட இந்த அநுபவத்தின் காரணமாக அடுத்த யுத்தத்தில் நான் நேச தேசங்களின் கதைகளை மட்டுமே படிப்பது என்று தீர்மானித்து விட்டேன். ஆனால் இருபதாம் நூற்றுண்டின் மூன்ருவது உலக யுத்தத்தில் விரோத தேசங்கள் எவை எவை, நேச தேசங்கள் எவை எவை என்று......''

நான் வாக்கியத்தை முடிக்குமுன் நண்பர் குறுக்கிட்டார். "வேண்டாம். பேச்சு மறுபடியும் அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டு என்கிற விஷயத்துக்கே திரும்பிவிடும்போல் இருக்கிறதே! வேண்டாம், நான் சொல்ல வந்த போலீஸ் சோதனைக் கதையைச் சொல்லி விடுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினார் நண்பர்.

*  *  *  *

இதுவும் கிட்டத்தட்ட நள்ளிரவு சமயத்தில் நடந்த ஒரு சோதனைக் கதைதான். உண்மையாகவே நடந்தது. ஏனென்றால் இதில் ஒரு பகுதியை நான் நேரில் பார்த்தேன். மற்றப் பகுதி பிறகு கேள்விப்பட்டதாகும். முதலில் நான் நேரில் கண்டதைச் சொல்லி விடுகிறேன்.

சாதாரணமாக நாங்கள் இரண்டு மூன்று பேர்வழிகள் தினம் இரவு பத்து மணிக்கு ரெயில்வே ஸ்டேஷன் பக்கம் 'வாக்' போவோம்; 1942 சமயத்தில்தான் என்று ஞாபகம். தினம் இவர்கள் இரவு கூடி ஸ்டேஷன் பக்கம் போகிறார்களே என்று ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளும் பல நாள் எங்களைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான் என்பது எங்களுக்குப் பின்னர் பல நாட்கள் வரையில் தெரியாது. ஆனால் இதற்கும் நான் சொல்ல வந்த கதைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது.

'வாக்'கென்று கிளம்புவோமே தவிர நாங்கள் மூவருமே உண்மையில் அகாலத்தில் காபி சாப்பிடுவதை விரும்பிப் போகிறவர்கள்தாம். ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில், சாயங்காலமாகத் திறக்கிற ஒரு சிறு ஹோட்டலில் அந்தக் காலத்தில் நல்ல காபியாகக் கிடைக்கும். இரவு அந்தக் காபியைக் குடித்துவிட்டுத்தான் தூங்குவது என்கிற காரியத்தை நாங்கள் நாள் தவறுமல் செய்துகொண்டிருந்தோம். இரவு அகாலத்தில் காபி சாப்பிட்டால் தூக்கம் வராது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன் நான். ஆனால் எங்களுடைய அநுபவம் இதற்கு நேர்மாறானது.

இப்படி ஒரு நாள் இரவு; அன்று வியாழக்கிழமை என்று ஞாபகம். அன்று வழக்கத்தை விடச் சற்று அதிக நேரமாகி விட்டது என்றும் ஞாபகம். சுமார் பதினொரு மணி யிருக்கலாம். ஆற்றுப் பாலம் தாண்டி இறக்கத்தில் இறங்குகிறபோது இடது கைப் பக்கம் இருந்த திடலில் இரண்டு காஸ் லைட்டுகள் தெரிந்தன. பத்துப் பன்னிரண்டு போலீஸ்காரர்களின் உருவங் களும் தெரிந்தன.

ரோடு ஓரத்தில் இரண்டொருவர் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள். வேடிக்கை பார்த்தவர்கள் திட லுக்குள் போய்விடாதபடி அங்கே ஒரு போலீஸ்காரன் காவல் நின்றான். 1942-ல் என்று சொன்னேன். இல்லையா? போலீஸ் காரனைப் பேச வைப்பது, அதுவும் என்னையும், என் நண்பர்களை யும் போலக் கதர் அணிந்தவர்கள் பேசவைப்பது சிரமமாக இருந்தது.

ரோடு ஓரத்திலிருந்த மற்றவர்களுக்கும் ஒன்றும் தெரிய வில்லை. 'என்னவோ தேடுகிறார்கள்!' என்றான் ஒருவன். 'ஜப்பான் குண்டு விழுந்தது!' என்றான் வேறு ஒருவன். 'பாரசூட்டில் இறங்கினான் ஒருவன்; நான் சாயங்காலமே பார்த்தேன்' என்றான் ஒருவன். காபியையும் மறந்து விட்டு அது என்னவாயிருக்கலாம் என்று யோசித்தவர்களாக நாங்கள் நின்றோம்.

அறுபது எழுபதடிக் கப்பால் நடந்ததெல்லாம் காஸ்லைட் வெளிச்சத்தில் சற்றுத் தெளிவாகவே தெரிந்தது. பத்தடி, இருப தடி நடந்து போலீஸ் கோஷ்டியினர் காஸ்லைட்டுகளை இறக்கி வைக்கச் சொல்வார்கள். பிறகு மண்வெட்டி எடுத்து ஓரிடத் தில் வெட்டுவார்கள். அதிகமாக வெட்டவும் மாட்டார்கள். கூட இருந்த ஓர் உருவத்தை - அது ஒரு பெண் உருவம் என்பதைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை, நாங்கள் நின்ற இடத்திலிருந்து-ஏதோ அதட்டலாகக் கேட்பார்கள். ஏதாவது ஒரு கடுமையான போலீஸ் குரல் அவ்வளவு தூரத்துக்கப்பால் எங்கள் காதிலும் விழும். பிறகு காஸ்லைட்டுகளைத் தூக்கிக்

கொண்டு இன்னும் பத்தடி நடப்பார்கள். மறுபடியும் மண் வெட்டி எடுத்து வெட்டுவார்கள்.

எங்களுக்குக் கால் கடுக்கத் தொடங்கியது. காபி ஞாபகமும் தலை தூக்கியது. 'போகலாம்' என்று கிளம்புகிற சமயம் கான்ஸ்டேபிள்களும் போலீஸ் கோஷ்டியினரும் அவர்களுடன் இருந்த ஸ்திரீயும் ரோட்டுப் பக்கம் வருவது போலத் தெரிந்தது. பார்க்கலாமே என்று நின்றோம்.

காவல் நின்ற போலீஸ்காரன் எங்களைப், "போங்களையா! போங்களையா!" என்று அங்கிருந்து விரட்டினான். அவன் சொன்னது காதில் விழாதமாதிரியே நாங்கள் நின்றோம்.

கான்ஸ்டேபிள்களும் போலீஸ் கோஷ்டியும் அவர்களுடன் இருந்த ஸ்திரீயும் ரோடு ஓரத்துக்கு வந்துவிட்டார்கள். அந்தப் பெண்ணுக்கு வயசு இருபதுக்குள்தான் இருக்கும். அவளுடைய கண்கள் அழுதழுது சிவந்திருந்தன. முகம் விங்கியிருந்தது. கூலிவேலை செய்து பிழைக்கிற பெண்போலும் என்று எண்ணினோம்.

போலீஸ்காரர்களில் ஒருவன் சற்று அதட்டலாகவே சொன்னான். "இதோ பார்! அழுது அழுது ஏமாத்தி விடலாம்னு பாக்காதே! ஏமார்றவங்க நாங்க இல்லை! உன்னைப்போல மாய்மாலக்காரிங்க எத்தனையோ பேரை நாங்க பார்த்திருக்கோம்!" என்றான்.

வேறு ஒருவன் சொன்னான், "கழுத்தைத் திருகிப் புதைச்சதில் குறைச்சல் இல்லை. இப்போ ரோஷம் வரது; அழுகை வரதே!"

மூன்றாவது போலீஸ்காரன் சொன்னான்; "வழியாச் சொல்லிவிடு! குழந்தையைக் கழுத்தை முறிச்சுக் கையில் எடுத்துக்கிட்டு இங்கே வந்தே. இருட்டா இருந்தது; எந்தப் பக்கம் போனே? எத்தனை அடி நடந்தே? எங்கே குழி பறிச்சே?......காட்டி விடு" என்று அதட்டினான்.

அவளைப் போலீஸ்காரர்கள் சொன்னதை இங்கே மனுஷாள் காதால் கேட்கும்படி மாற்றிச் சொல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்!

திருட்டுக் கர்ப்பக் கதை என்று எண்ணினேன். 'போகலாம்' என்று நான் கிளம்புகிற சமயம் இன்னொரு போலீஸ்காரன் சொன்னான், "என்ன இருந்தாலும் பக்கத்து வீட்டுக் காரியோடே சண்டை என்றால் அவள் குழந்தையைக் கழுத்தைத் திருகிப் புதைத்துவிடறதா? வெறுமனே கேட்டால் சொல்லமாட்டாய் நீ!"

பக்கத்து வீட்டுக்காரியின் குழந்தையைக் கொலை செய்து விட்டாளா?

அடாடா! அவளைப் பார்த்தால் அப்படி ஒன்றும் கொலைகாரி மாதிரி தெரியவில்லையே என்று நாங்கள் எண்ணினோம்.

ஆனால் போலீஸ்காரர்களுக்கு அவள்தான் கொலைகாரி என்று நிச்சயமாகத் தெரியும்போலும்! குழந்தையைக் கழுத்தைத் திருகி அங்கே அந்தத் திடலில் எங்கேயோதான் புதைத்துவிட்டாள் என்றும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியும் போலும்! மறுபடியும் காஸ்லைட்டுகளைத் தூக்கச் சொன்னார்கள். அந்தப் பெண்ணை முன்னால் விட்டார்கள். "எங்கே போனாய்? எந்தப் பக்கம் திரும்பினாய்? எத்தனை அடி நடந்தாய்; காட்டு!" என்று அதட்டினார்கள்.

அந்தப் பெண் நாலடி நகர்ந்தாள், நின்றாள், மறுபடியும் போலீஸ் அதட்டலின் பேரில் இன்னும் நாலடி நகர்ந்தாள்.

அது பார்க்கச் சகிக்காத காட்சியாகப்பட்டது எனக்கு. 'வாங்களையா போகலாம்' என்றேன். நண்பர்களும் பதில் சொல்லாமல் கிளம்பினார்கள். வழக்கத்தை விட எங்களுக்கு அப்போது காபித் தாகம் அதிகரிப்பதுபோல் இருந்தது.

நாங்கள் தேடிப்போன ஹோட்டலின் முதலாளிக்கு ஊர் விவகாரங்கள் பூராவுமே தெரியும். நாங்கள் வரவேண்டும் என்று காத்திருந்தவர்போல ஆற்றுப் பாலத்து இறக்கத்தில்

நடந்துகொண்டிருந்த போலீஸ் சோதனையைப்பற்றிப் பாடம் ஒப்பிக்கத் தொடங்கிவிட்டார். அவருக்குச் சந்தேகமில்லை - அந்தப் பெண்தான் குற்றவாளி என்பதைப்பற்றி. நாங்கள் ஏற்கனவே அறிந்துகொண்டிருந்ததையே அவர் சற்று விரிவாக அசுர பாவத்துடன் சொன்னார்.

அன்று அந்த ஹோட்டலில் காபி எங்களுக்கு ருசிக்கவில்லை.

நாங்கள் வீடு திரும்பும்போதும் ஆற்றுப்பால ஏற்றத்தில் அந்தச் சோதனை நடந்துகொண்டிருந்தது.

“உணவு உற்பத்தி அதிகரிக்க ஓர் இலாகா ஏற்பட்டிருக்கிறதே! அதன் சூழ்ச்சி இது! அந்தத் திடல் பூராவும் இன்றிரவுக்குள் கொத்திவிடுவார்கள்” என்றார் நண்பர்களில் ஒருவர்.

ஆனால் அவரும் அதை ஹாஸ்யமாகச் சொல்லவில்லை; நாங்களும் அதை ஹாஸ்யமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

மறுநாள் நாங்கள் அதை மறந்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒருவரும் அதுபற்றிப் பேசத் துணியவில்லை.

இது நடந்தது ஒரு வியாழக்கிழமை என்று சொன்னேனல்லவா?

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாங்கள் காபி சாப்பிடப் போனபோது அந்த ஹோட்டல் முதலாளி தாமாகவே அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். “இரண்டு மூன்று நாள் முந்தி பாலமான் ஏற்றத்தில் அந்தப் பெண்...”

காபி சுட்டுவிட்டது போலஅவசர அவசரமாக டம்ளரைக் கீழே வைத்துவிட்டு, “என்ன ஆச்சு?” என்று கேட்டேன்.

“அந்தப் பெண்ணை விட்டு விட்டார்கள்” என்றார் ஹோட்டல் முதலாளி.

ஏன், என்ன? என்று நாங்கள் யாரும் கேட்கவில்லை.

ஹோட்டல் முதலாளி தாமாகவே சொன்னார். "திடலில் அவள் கொன்று புதைத்து விட்டதாகத் தேடிய அந்தக் குழந்தை அகப்பட்டுவிட்டது. அது உயிருடனேயே இருந்தது."

"விரோதத்தால் ஏற்பட்ட பொய்ப் புகாரோ?" என்றார் நண்பர்.

நான் கீழே வைத்த காபி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டேன்.

ஹோட்டல் முதலாளியின் கவனத்தை அச்சமயம் வேறு ஏதோ கவர்ந்தது. அவர் அந்தக் கதையைப் பூராவும் சொல்லவில்லை. நாங்களும் மேலே விசாரிக்க ஆசைப்படவில்லை.

வீடு திரும்பும்போது அந்தச் சம்பவத்தைப் பற்றி எங்களுடைய மூன்று நாளைய மௌனம் கலைந்தது.

"அந்தப் பெண்ணின் உருவம் இன்னும் என் கண்முன் நிற்கிறது" என்றார் ஒரு நண்பர்.

"ஏதோ கிரேக்க சோக நாடகங்களை எல்லாம் பற்றிக் கதைக்கிறார்களே; கொல்லாத ஒரு குழந்தையைக் கொன்றாய் என்று சொல்லி, எங்கே புதைத்தாய் காட்டு என்று...... அடாடா!" என்றார் இரண்டாவது நண்பர்.

"அந்தப் பெண் சம்பந்தப்படாத ஏதாவது ஒரு குழந்தை உடல் அன்று போலீஸ் சோதனையில் போலீஸார் கையில் அகப்பட்டிருந்தால்......!" என்றேன் நான்.

"அவ்வளவுதான்..." என்றார் என் நண்பர்.

நான் ஒன்றும் சொல்லாமல் இருந்ததைக் கண்டு, "எப்படி?" என்றார் ஒரு நிமிஷம் கழித்து.

"என்ன சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை" என்றேன் நான்.

# சரோஜாவின் சவுரி

கும்பகோணத்தில் நான் ரெயிலைப் பிடிக்கும்போது ரெயில் புறப்பட மூன்றே நிமிஷங்கள்தான் இருந்தன. அவசர அவசரமாக டிக்கட் வாங்கிக்கொண்டு இரண்டாம் வகுப்புப் பெட்டியைத் தேடி நடந்தேன்.

முதலில் கண்ணில் பட்ட இரண்டாம் வகுப்புப் பெட்டியில் இரண்டே இரண்டு பெண்கள் மட்டும் உட்கார்ந்திருந்தார்கள். அடுத்த பெட்டியில் பார்த்தேன். ஸீட்டுக்கு ஐந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள். வேறு துணையில்லாத பெண்களுடன் பிரயாணம் செய்ய என்னைப்போல் சங்கோஜப்பட்டவர்கள் தான் அன்று ரெயிலேறி இருந்தார்கள் போலும்!

ரெயில்வே கார்டை, "இது பெண்கள் வண்டி யில்லையே!" என்று கேட்டுக்கொண்டு அந்தப் பெண்கள் இருவரும் மட்டும் தனித்திருந்த வண்டியில் ஏறிக்கொண்டேன். உடனேயே வண்டியும் கிளம்பிவிட்டது.

கும்பகோணம் ஸ்டேஷனைவிட்டு வண்டி நகர்ந்ததும், அந்தப் பெண்களைக் கவனித்தேன் நான். நான் அந்தப் பெட்டியில் பிரயாணம் செய்வதற்கு அவர்கள் ஆக்ஷேபிக்க வில்லை. இருவரும் படித்தவர்கள்; அல்லது படித்துக்கொண் டிருப்பவர்கள் என்று எனக்குத் தோன்றியது. படித்துக்கொண் டிருப்பவர்களாய் இராது என்று எண்ணினேன். ஏனென்றால் படித்துவிட்டு வாழ்க்கையில் புகுந்து விட்டவர்களிடம் மட்டுமே சாதாரணமாகக் காணப்படும் ஓர் அடக்கம் அவர்களிடம் காணப்பட்டது. ஆடை அலங்காரங்களும் சற்று எளியனவாகவே இருந்தன. அவர்கள் தங்களுக்குள் சற்று உரக்கவே

பல விஷயங்களைப்பற்றி ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு பாஷையில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"எக்ஸ்யூஸ் மீ! நீங்கள் சிதம்பரத்தில் படித்தீர்களோ?" என்று அந்தப் பெண்களில் ஒருத்தியைப் பார்த்துக் கேட்டேன்.

இருவரில் பெரியவள் பதில் சொன்னாள். "ஆமாம். இவள் மூன்றுவது வருஷம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் பி.ஏ. படித்தாள். நான் பட்டணத்தில் எம்.ஏ. படித்துவிட்டுச் சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறேன். என் பெயர் சரஸ்வதி. இவள் பெயர் கௌரி" என்று தொடர்ந்து நான் கேட்டிருக்கக் கூடிய கேள்விகளுக்கும் சேர்த்துப் பதில் அளித்தாள்.

"அப்படியா? தங்களை அறிந்துகொண்டதில் எனக்கு ரொம்பவும் சந்தோஷமே!" என்று நான் உபசாரமாகச் சொன்னேன்.

"சிதம்பரத்தில் உங்களுக்குப் புஸ்தகக் கடை இருக்கிறது, இல்லையா?" என்றாள் சிதம்பரத்தில் மூன்று வருஷங்களுக்கு முன் படித்த மாணவி கௌரி.

"ஆமாம், அதுதான் உங்களை எங்கோ பார்த்த மாதிரியிருக்கிறதே என்று கேட்டேன்" என்றேன் நான்.

"புஸ்தகக் கடையா?" என்று கேட்டாள் சரஸ்வதி.

"ஆமாம், ஸார் அடிக்கடி தமிழ்ப் பத்திரிகைகளில் கதைகள் கூட எழுதுவார்" என்றாள் கௌரி.

அடாடா! தேவலையே; நம்ம புகழ் இவ்வளவு தூரம் எட்டியிருக்கிறதே! எனக்குத் திருப்தியாகத்தான் இருந்தது.

"எனக்கும் ஒரு ஜர்னலிஸ்டு ஆகிவிட வேணுமென்றுதான் ஆசை" என்றாள் சரஸ்வதி.

"ரொம்பவும் சிரமமான தொழில்தான். பொறுமையை ரொம்பவும் சோதித்துவிடும்" என்றேன்.

"பெண்களுக்குத்தான் பொறுமை சுபாவமாகவே உண்டே ?" என்றாள் சரஸ்வதி.

அவள் என்னை ஏதோ கேலி செய்கிறமாதிரி தோன்றிற்று எனக்கு. நானும் கேலியாகவே சொன்னேன். "இந்த நாட்களில் பெண்களுக்கு எது சுபாவமான குணம், எது சுபாவமல்லாத குணம் என்பதுதான் ஸ்திரமாகவேயில்லையே! பாம்பு சட்டையை உரித்துவிடுகிற மாதிரி, பெண்கள்தாம் தங்களுக்குரிய சுபாவத்தை எல்லாம் உரித்துத் தூர வைத்துவிடுகிறார்களே!"

"நீங்கள் பெண் கல்வியை ஆதரிப்பவர் அல்ல என்று தெரிகிறது" என்றாள் கௌரி.

"கோபித்துக்கொள்ளக் கூடாது. உங்களை என்று சொல்லவில்லை நான்."

"இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது ?" என்றாள் கௌரி.

"எங்களைப் பார்த்தால் எவ்வளவோ தேவலை, மற்றவர்களை எல்லாம் விட, என்று உங்களுக்குத் தோன்றுகிறது, இல்லையா ?" என்றாள் சரஸ்வதி.

உண்மையிலேயே அந்தப் பெண் கெட்டிக்காரிதான். அவள் கண்களிலும் சிரிப்பிலும் வார்த்தைகளிலுந்தான் எத்தனை கேலி தொனித்தது !

நான் அந்தக் கேலியைக் கவனியாதவன் போலவே சொன்னேன்: "வெறும் கட்சி கட்டுவதற்காகச் சொல்லவில்லை நான். ஆனால் இப்போதெல்லாம் படித்து விட்டுப் பட்டம் பெற்றுக்கொண்டு வருகிற பெண்களைப் பார்த்த பிறகும் யாருக்காவது பெண் கல்வியை ஆதரிக்கத் தோன்றுமா ?"

"தோன்றாதுதான். ஓரளவு வரையில் நீங்கள் சொல்வது உண்மை !" என்று ஒப்புக்கொண்டாள் கௌரி.

சரஸ்வதியும் ஒப்புக்கொள்ளத்தான் ஒப்புக்கொண்டாள். "ஆனால் எல்லோரையுமே கல்வி வீணாக்கி விடுகிறதா? ஒரு சிலருக்கு......"

நான் குறுக்கிட்டேன். "நன்கு படித்து. நல்ல அறிவு பெற்றவர்கள் ஒரு சிலர் தவிர வேறு யார் இப்படிச் சிந்தனை செய்து பார்க்கிறார்கள்?" என்றேன்.

"ஜர்னலிஸ்டாக இருக்க வேண்டுமானால் சமயம் பார்த்து முகஸ்துதி செய்யவும் தெரியணும்போல் இருக்கு!" என்றாள் சரஸ்வதி.

உண்மையிலேயே அவள் கெட்டிக்காரிதான்.

நான் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டேன்.

வண்டி திருநாகேசுவரம் தாண்டி விட்டது. அந்த இரண்டு பெண்களும் தங்களுக்குள்ளேயே பல பழைய ஞாபகங்களைப் பரிமாறிக்கொள்ளத் தொடங்கினார்கள். அவளைத் தெரியுமா? இவளைத் தெரியுமா? அவள் என்ன செய்கிறாள்? இவள் கல்யாணம் செய்துகொண்டு விட்டாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. இப்படியாக அவர்கள் இருவரும் தங்களுடன் படித்த பல மாணவிகளையும் பற்றிப் பேசிக்கொண்டே வந்தார்கள். எனக்காகப் பேசிய மாதிரியும் தோன்றவில்லை. ஒன்றிலிருந்து ஒன்று என்று நிரம்பவும் இயற்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நான் கையில் வைத்திருந்த புஸ்தகத்தில் ஈடுபட்டிருப்பவன் போலப் பாசாங்கு செய்தேனே தவிர, என் கவனமெல்லாம் அவர்கள் பேச்சில்தான் இருந்தது. என்ன சுவாரசியமான பேச்சு! அடாடா! எவ்வளவு திவ்வியமான வம்பு! அவர்கள் பேச்சில் எத்தனை கதைகளுக்கு விஷயம் இருந்தது?

"எங்கள் ஹாஸ்டலில் வார்டனுடன் சண்டை போட்டுக் கொண்டாளே, சரோஜா......" என்று சரஸ்வதி சொன்னதும், எனக்கும் அவர்கள் பேச்சில் கலந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

"அந்த சரோஜாவை எனக்கும் தெரியும். பட்டணத்தில் ......ஹாஸ்டலில் தங்கிப் பி. ஏ. படித்தாளே?" என்றேன் நான்.

"ஆமாம்" என்றாள் சரஸ்வதி. ஒரு விநாடி கழித்துச் சிரித்துவிட்டுச் சொன்னாள் ; "ஜர்னலிஸ்டுகளுக்குப் பொறுமை ரொம்ப வேணும் என்று சொன்ன உங்களுக்கே பொறுமை அதிகம் இல்லையே!"

"எனக்குப் பொறுமை ஏது? நான் கேவலம் ஆண். தவிரவும் நான் ஜர்னலிஸ்டு அல்ல. எப்பொழுதாவது விஷயம் அகப்பட்டால் மட்டுந்தான் எழுதுவேன். இதையெல்லாம் விடச் சிறந்த காரணமுண்டு நான் பொறுமை இழந்ததற்கு. அந்த சரோஜா லேடி வார்டனுடன் சண்டை போட்டதெல்லாம் பற்றி அந்த நாட்களில் பத்திரிகைகளி லெல்லாம் வெளிவந்தது. லேடி வார்டன் ராஜிநாமாச் செய்துவிட்டது வரையில் செய்தி வந்தது. ஆனால் அந்தச் சண்டையின் காரணம் பற்றி எதுவும் வெளி வரவில்லை......" என்றேன் நான்.

"சரோஜாவைத்தான் தெரியுமென்றீர்களே ? கேட்டுப் பார்க்கிறதுதானே ?" என்றாள் சரஸ்வதி.

ஏது, நம்மை மடக்கிவிடுவாள்போல் இருக்கிறதே என்று எண்ணிக்கொண்டே நான் சொன்னேன் : "சரோஜாவைக் கேட்காமலா ? கேட்டுப் பார்த்தேன். அவள் சொன்னால் தானே! 'யாரோ ஒருத்தியைக் கொணர்ந்து வார்டனாகப் போட்டுவிட்டார்கள்' என்று திரும்பத் திரும்பச் சொன்னாளே தவிர வேறு எதுவும் சொல்லமாட்டேன் என்று சொல்லி விட்டாள்!"

"சரோஜாதான் அந்த லேடி வார்டனைப் படாதபாடு படுத்தி ராஜிநாமாச் செய்கிற வரைக்கும் கொண்டுவந்து விட்டு விட்டாள்" என்றாள் சரஸ்வதி. ஒரு விநாடி கழித்துத் தொடர்ந்தாள் : "விஷயம் என்னவோ ரொம்பச் சின்ன விஷயந்தான் ; அதை இப்போது நினைத்தால்கூடச் சிரிப்புத் தான் வருகிறது" என்றாள்.

"சொல்லேன்" என்றாள் கௌரி.

இதற்குள் ரெயில் ஆடுதுறையில் நின்றது. எங்கள் வண்டியில் ஹாட்டும் ஸூட்டுமாக ஒரு மனிதர் ஏறிக்கொண்டார்.

ரெயில் ஆடுதுறையை விட்டுக் கிளம்புகிற சமயம் அவர் கதவுப் பக்கம் நின்றுகொண்டு வெளியே நின்ற யாருக்கோ ஏதோ உத்தரவுகள் கொடுத்துக்கொண் டிருந்தார். யாரோ உத்தியோகஸ்தர் என்று எண்ணினேன்.

சரஸ்வதி சொன்னாள்: "ரொம்பவும் சின்னக் கதைதான். நான் என்ன கதாசிரியையா? ஐந்து நிமிஷக் கதையை ஐந்நூறு பக்கத்தில் சொல்வதற்கு?" என்றாள்.

"ஏது? என் புஸ்தகம் எதையோ படித்திருக்கிற மாதிரியே பேசுகிறீர்களே!" என்றேன் நான்.

என்னைப் பார்த்துச் சிரித்தபடியே சரஸ்வதி சொன்னாள்: "சரோஜாவுக்கும் வார்டனுக்கும் சண்டை எப்படித் தொடங்கியது என்று எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை! ஏதோ ரொம்பவும் சர்வ சாதாரணமான ஒரு வாக்கு வாதம். அவ்வளவுதான்."

"உங்களுக்கே மறந்து போய்விட்டது என்றால் மிகவும் சின்ன விஷயமாகத்தான் இருக்கவேண்டும்" என்றேன் நான்.

சரஸ்வதி சொன்னாள்: "சரோஜாவுக்கு எப்பவுமே தலையில் கூந்தல் அதிகம் கிடையாது. எங்கள் ஹாஸ்டலில் பல மாணவிகளுக்குக் கூந்தல் நீளமாகவும் அழகாகவும் இருக்கும். அதைப் பற்றி ரொம்பவும் பெருமைப்பட்டுக்கொள்வார்கள். சரோஜாவும் அரை டஜன் சவுரிகளை வாங்கிவைத்து, மாறி மாறி அணிந்துகொண்டு சர்வ ஜாக்கிரதையாகத் தன் நீண்ட கூந்தலைப் பற்றிப் பெருமை பேசிக்கொள்வாள். சக மாணவர்களுக்கே இந்த விஷயம் தெரியாது. முதலில் எனக்கே தெரியாது."

இது வரையில் வண்டிக் கதவண்டையிலேயே நின்றுகொண்டிருந்த ஆடுதுறையில் ஏறிய மனிதர் என் பக்கத்தில்

வந்து உட்கார்ந்துகொண்டார். அவரும் சரஸ்வதி மேலே சொன்ன கதையைக் கேட்டார்.

சரஸ்வதி சொன்னுள் ; " சரோஜாவுக்கும் லேடி வார்ட னுக்கும் ஏதோ ஒரு சிறு விஷயம் பற்றி வாக்குவாதம் முற்றியது. சரோஜாவைச் சமாதானப்படுத்துகிற முயற்சியில் லேடி வார்டன் அவளுடைய தோள் பட்டையைப் பிடித்தாள். தோள் பட்டை அவள் கையில் அகப்படவில்லை. சரோஜா நகர்ந்துவிட்டாள். அவளுடைய நீண்ட கூந்தல்தான் லேடி வார்டன் கையில் அகப்பட்டது."

" ......உ......ம் " என்றேன் நான்.

என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஆசாமியும் கதையைச் சுவைத்துக் கேட்பது மாதிரி இருந்தது.

சரஸ்வதி சொன்னுள் ; " அவ்வளவுதான். சரோஜாவின் சவுரி வார்டன் கையில் இருந்தது. அப்போது சரோஜாவுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! அடாடா! அடாடா!" என்ருள் சரஸ்வதி.

இதைச் சொல்லி விட்டு சரஸ்வதி தன் பின்னலை எடுத்து முன்னுல் விட்டுக்கொண்டாள். கை விரல்களால் தடவி விட்டுக்கொண்டாள். அவள் பின்னல் சாட்டை மாதிரி நீளமாக மேகம் போல இருண்டிருந்தது.

சரஸ்வதி சொன்னுள் : " சரோஜாவுக்கு உண்மையிலேயே தலை மயிர் ரொம்பவும் குறைச்சல்தான். எலி வால் மாதிரி ஒரு சாண்தான் இருக்கும் ! " என்ருள்.

தியாகராஜபுரத்தில் ஒரு நிமிஷம் நின்றுவிட்டு வண்டி கிளம்பியது.

" அப்புறம் ? " என்றேன் நான்.

" சரோஜா வார்டனைப் படாத பாடு படுத்தி வைத்துவிட்டாள். இந்தச் சனியன் விட்டால் போதும் என்று லேடி

வார்டன் தானகவே ராஜீநாமாச் செய்துவிட்டுப் போய் விட்டாள்.''

''இந்த மெதுவான ரெயிலையும் இவ்வளவு வேகமாகப் போகச் செய்துவிட்டீர்களே, சபாஷ்! அந்த உதவிக்கு என் நன்றி! நான் வருகிற ஸ்டேஷன் நரசிங்கன்பேட்டையில் இறங்குகிறேன்'' என்றேன்.

நான் சொன்னதைக் காதில் வாங்காமல் சரஸ்வதி சொன்னாள்: ''அந்த சரோஜாவை நான் அதற்கப்புறம் பார்க்க வில்லை. என்ன செய்கிறாளோ தெரியவில்லை'' என்று கூறித் தன் தலைப் பின்னலைப் பின்னால் எடுத்து விட்டுக்கொண்டாள்.

என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த, ஆடுதுறையில் ஏறிய ஆசாமி ஏதாவது சொல்லலாமா வேண்டாமா என்று தயங்கு பவர் போலச் சிறிது நேரம் இருந்தார். பிறகு சொன்னார்: ''அந்தச் சரோஜா என்னைக் கல்யாணம் செய்துகொண்டாள். நான் ஒரு தாவர நூல் ஆராய்ச்சியாளன்'' என்று தம்மையே அறிமுகம் செய்துகொண்டார்.

''அப்படியா? உங்களைச் சந்தித்தது பற்றி ரொம்பச் சந்தோஷம். சரோஜா சௌக்கியமா யிருக்கிறாளா? ரொம்ப நாளாகச் சரோஜாவைப் பார்க்கவேண்டும் என்று எனக்கு ஆவல்!'' என்று விசாரித்தாள் சரஸ்வதி.

ரெயில் நரசிங்கன் பேட்டையில் நின்றுகொண் டிருந்தது.

ஆடுதுறை ஆசாமி சொன்னார்: ''இன்னமும் சரோஜாவுக்கு அதே எலி வால் பின்னல்தான்!'' என்று.

கௌரிக்கும் சரஸ்வதிக்கும், ''நமஸ்காரம். வரட்டுமா? நான் இங்கே இறங்குகிறேன்'' என்றேன்.

கௌரி உட்கார்ந்தபடியே கை கூப்பினாள்.

சரஸ்வதி எழுந்து கை கூப்பினாள். அவள் பின்னல் கண்ணாடி ஜன்னல் தாழ்ப்பாளில் சிக்கிக்கொண் டிருந்ததை

அவள் கவனிக்கவில்லை. எழுந்த வேகத்தில் அவள் தலைச் சவுரி ஜன்னல் தாழ்ப்பாளிலேயே சிக்கி நின்றுவிட்டது.

சரஸ்வதிக்கும் சுயத் தலைமயிர் அதிகம் இல்லைதான். எனிவாலுக்கும் ஓரங்குலம் அதிகம் இருக்கலாம்.

இதை எல்லாம் கவனித்த மாதிரியே காட்டிக்கொள்ளாமல் நரசிங்கன்பேட்டையில் இறங்கி நான் என் வழி நடந்தேன்.

# வாழ்க்கைப் பந்தயத்தில்

ராஜாவும் சிவசங்கரனும் முப்பது வருஷங்களாகச் சிநேகிதர்கள். அவர்கள் இருவரும் அந்தக் காலத்தில் ஒரு வகுப்பில் அல்ல, ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். இருவருக்கும் ஒரு வயது வித்தியாசம். படிப்பிலும் ஒரு வகுப்பு வித்தியாசம். ராஜா பெரியவன் - ஆறுவது பாரத்தில் வாசித்துக்கொண் டிருந்தான். சிவசங்கரன் ஐந்தாவது பாரத்தில் வாசித்துக்கொண்டிருந்தான்.

பல வருஷங்களுக்குப் பிறகு அந்த நண்பர்கள் இருவரும் சந்திக்கிறார்கள். பேசுவதற்கு நிறையவே இருந்தன விஷயங்கள். முப்பது வருஷங்களில் அவர்கள் ஏழெட்டுத் தடவைகள் தான் சந்தித்திருப்பார்கள். கடைசியாகச் சந்தித்தது பத்து வருஷங்களுக்கு முன், 1940 வாக்கில். ஒருவருக்கு மற்றவருடைய க்ஷேமலாபங்கள் பொதுவாகத் தெரியும். பரஸ்பரம் நண்பர்கள் மூலமாக விசாரித்து அறிந்துகொள்வார்கள். கடிதம் எழுதிக்கொள்ளுகிற வழக்கம் மட்டும் கிடையாது. ஆனால் ஹிட்லர் யுத்தம் தொடங்கியதற்குப் பின் அவர்களுடைய தொடர்பு விட்டுப் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு சென்றுவிட்ட வருஷங்களில் அவர்கள் பரஸ்பர நண்பர்களில் கூட யாரையும் சந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. பேசுவதற்கு உண்மையிலேயே விஷயம் நிறையத் தான் இருந்தது. இளமைப் பருவத்து நினைவுகளுக்கு நடு வயதில்தான்—அதாவது நாற்பது வயது வரும்போதுதான்—சக்தி அதிகம் பிறப்பது போலத் தோன்றுகிறது. பலதரப்பட்ட சிந்தனைகளின் வேகம் மூண்டு மூண்டு அதிகப்படுவது அந்த நடு வயதுக் காலத்தில்தான்.

பள்ளியிலும் கலாசாலையிலும் இந்த இரண்டு நண்பர்களும் ஏறக் குறைய ஒரே படியில் இருந்தவர்கள். அவரவர்கள் வகுப்பில் அவரவர்கள் முதல்தான். அதாவது பள்ளியிலும், பிறகு கலாசாலைக் கடைசி வகுப்பை எட்டும் வரையிலும் இரு வருக்குமே படிப்பிலே ஆர்வம் இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இன்டர்மீடியட் பாஸ் பண்ணிவிட்டு ராஜா பி. ஏ. வகுப்பில் சேர்ந்தான். அதற்கடுத்த வருஷம் சிவசங்கரன் அதே கலாசாலையில் வந்து ஆனர்ஸ் வகுப்பில் சேர்ந்தான். இரு வருக்குமே கலாசாலையில் படிப்பில் கடைசி வருஷம் சப்பிட்டு விட்டது. ராஜா இரண்டு வருஷம் பி.ஏ. யில் தவறிவிட்டு மூன்ரு வது வருஷந்தான் தேறினன். சிவசங்கரன் ஆனர்ஸ் பரீக்ஷை முதல் வருஷம் பரீக்ஷை கொடுக்காமல் தள்ளிவிட்டு, மறு வரு ஷம் பரீக்ஷை கொடுத்தும் பாஸ் பண்ணுமல் பி. ஏ. டிக்ரியே பெற்ருன். இரண்டு நண்பர்களுமே ஒரே கான்வகேஷனில் தான் பட்டம் பெற்ருர்கள். அதைத் தொடர்ந்து அவர்களுக்கு நடந்த கல்யாணங்களும் ஒரே வருஷத்தில் ஒரே மாதத்தில் ஒரே முகூர்த்தத்தில்தான் நடந்தன; வெவ்வேறு ஊர்களில் நடந்தன என்பதால், ஒருவன் கல்யாணத்துக்கு மற்றவன் போகவில்லை.

ராஜாவுக்கு ஒரு தமக்கை மட்டும் உண்டு. சிவசங்கரனுக்கு ஒரு தங்கை மட்டும் உண்டு. அவர்கள் இருவருடைய தகப்பன் மார்களும் கூட ஒரே மாதிரியான சர்க்கார் உத்தியோகங்களில் ஒரே மாதிரியான சம்பளங்கள் வாங்கிக்கொண் டிருந்தார்கள். பிரதி வருஷமும் ஒரே மாதிரியான சம்பள உயர்வும் மூன்று வருஷங்களுக்கு ஒரு தரம் என்று ஒரே மாதிரியான மாற்றல் களும் பெற்று உத்தியோகம் பார்த்து வந்தார்கள். பொரு ளாதாரத் துறையில் இரண்டு குடும்பங்களுமே சரி சமம் என்று தான் சொல்லவேண்டும். கிராமத்தில் இரு குடும்பங்களுக்கும் சிறு வீடுகளும் ஏதோ கொஞ்சம் நிலபுலன்களும் இருந்தன.

ராஜாவுடைய தகப்பனரும் சிவசங்கரனுடைய தகப்ப னரும் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில்தான் ரிடையரானர்கள். சற்றேறக்குறைய ஒரே மாதிரியான பென்ஷனும், இன்ஷ்யூரன்ஸ்

பணமுந்தான் அவர்களுக்குக் கிடைத்தன, அந்த நாட்களில்- அதாவது 1932, 1933 என்று வைத்துக்கொள்ளுங்களேன். ஐயாயிரம் ரொக்கமும் மாதாந்திரப் பென்ஷனும் ஒரே பிள்ளையும் கொண்ட குடும்பங்களைப் பணக்காரக் குடும்பங்கள் என்றுதான் பெருமையுடன் ஊரார் சொல்வார்கள்.

ராஜாவுக்கும் சிவசங்கரனுக்கும் கல்யாணமான இடங்களும் ஏதோ நல்ல இடங்கள்தாம். பரீக்ஷை போய்விட்டது என்றாலுங்கூட இருவருக்குமே கெட்டிக்காரர்கள் என்று பெயர் உண்டு. இருவருமே குமாஸ்தாவாகப் போவது என்கிற ஆசையை விட்டொழித்தவர்கள். யாருக்காவது அடங்கி அடிமைப்பட்டுக் கைகட்டிச் சேவகம் செய்வது தங்கள் சுயமரியாதைக்கு உகக்காது என்று இருவருமே தீர்மானம் செய்து விட்டவர்கள். இருவருமே சுயேச்சையான வாழ்வை விரும்பினுர்கள். சிவசங்கரன் ஏதோ சிறு தொழில் செய்வதில் முனைந்தான். ராஜா எழுத்தாளனுனன்.

வாழ்க்கைப் பந்தயத்தை அன்றுவரை ராஜாவும் சிவசங்கரனும் ஒரேவிதமான அநுகூல பிரதிகூலங்களுடன் ஒரே விதமான சாதன சாதனைகளுடன் தொடங்கினுர்கள் என்கிற ஞாபகத்துடன் அவர்களுடைய பிற்கால வாழ்க்கையைக் கவனிக்க வேண்டியதாகிறது. காலம் 1933 முதல் 1949 வரை என்றும் கவனத்தில் வைக்கவேண்டும்.

சிவசங்கரன் கையில் அகப்பட்ட, தகப்பனுர் கண்ணில் ரத்தம் தெறிக்கக் கொடுத்த முதலை வைத்துக்கொண்டு ஏதேதோ தொழில்கள் செய்தான். சற்றேறக்குறைய ஆறேழு வருஷங்களில் கையிலிருந்த பொருள் பூராவுமோ அல்லது முக்கால்வாசியுமோ கரைந்துவிட்டது. ராஜாவினுடைய நிலைமையுமே சற்றேறக்குறைய அதுதான். ஏழு வருஷங்களில் எழுதிக் குவித்ததெல்லாம் ஆத்ம திருப்திக்குத்தான் உபயோகப்பட்டது. பெயரும் புகழும் கிடைத்திருக்கலாம்; அது பிற்காலத்தில் பெரு முதலாகப் பலன் தரலாம். அதுபற்றி நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. பொருளீட்டாமற் சாப்பிட்ட செல்வம் கரைந்துவிட்டது. அதாவது ராஜாவின் தகப்பனுர்

நாற்பது வருஷங்கள் கஷ்டப்பட்டுச் சேர்த்ததெல்லாம் பூராவும் இல்லாவிட்டாலும் முக்கால் வாசியும் போய்விட்டது.

1940-ல் கடைசித் தடவையாக நண்பர்கள் இருவரும் சந்தித்தபோது நிலைமை இதுதான். இருவருக்குமே சற்றேறக் குறைய வயது முப்பதாகிவிட்டது. வாழ்விலே இருவரும் தோல்வியை—பொருளாதாரத் துறையில் தோல்வியை—எதிர் பார்த்து நின்றனர். அப்படி ஒன்றும் மகத்தான தோல்வியல்ல என்றாலும் தோல்விதான். வாழ்க்கையில் மற்றதெல்லாம் இருந்தென்ன? பொருளீட்டத் தெரியாதவன், தோல்வியுற்றவன்தானே!

ராஜா அந்தத் தடவை சிவசங்கரனைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்குப் போன சமயம் அவன் வீட்டிலில்லை. அவனுடைய தகப்பனார் மட்டும் இருந்தார். தன் பிள்ளையின் ஆப்த நண்பனிடம் சிவசங்கரனின் போக்கை எல்லாம் சவிஸ்தாரமாகக் கூறி அழாத குறையாக வருந்தினார், அவன் தகப்பனார். 'பணம் போய்விட்டதென்பதுகூட எனக்குப் பெரிதல்ல. பணம் அப்படி ஒன்றும் சாசுவதமல்ல. ஆனால் பணம் போனதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய பாடங்களைத் தெரிந்துகொள்ளாதவனை அறிவாளி என்று எப்படிச் சொல்வது?' பத்திரிகைகளில் பெயர் பிரமாதமாக அடிபடுகிறதே, அதனால் ராஜா அறிவாளியாக இருப்பான் என்பது அவர் எண்ணம்போலும்! 'வருகிறது வருகிறது என்றிருந்த சண்டையும் வந்துவிட்டது. நிலைமை இன்னும் மோசமாகப் போகப் போகிறது! அதைத் தானாகவும் உணராமல், நான் சொன்னாலும் கேட்டுக்கொள்ளாமல் அவஸ்தைப்படப் போகிறான்' என்றார் சிவசங்கரனின் தகப்பனார்.

அதை ராஜா தன் நண்பனிடம் சொல்லவில்லை. பெரியவர் சொன்னதைத் தனக்கும் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

இப்போது 1950-ல் சிவசங்கரன் தன்னைத் தேடிக்கொண்டு வந்தபோது அதை எல்லாம் ஞாபகம் வைத்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தான். ஆனால் அதேபோல ஒரு ஞாபகம்

சிவசங்கரனின் மனத்திலும் உறுத்திக்கொண் டிருந்தது என்பது பாவம், ராஜாவுக்குத் தெரியாது. சிவசங்கரனை ராஜா அந்தப் பத்து வருஷங்களிலும் சந்திக்கவில்லையே தவிர அவன் தகப்பனர் சந்தித்திருந்தார். ராஜாவிடம் அன்று சிவசங்கரனின் தகப்பனர் பேசிய மாதிரியே அழாத குறையாக ராஜாவின் தகப்பனரும் சிவசங்கரனிடம் பேசியிருந்தார் என்பது பாவம், ராஜாவுக்குத் தெரியவே தெரியாது. இப்போது அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் சிவசங்கரனும் தன்னுடைய முப்பது வருஷத்து நண்பனுடன் பேசிக்கொண் டிருந்தான்.

வீட்டில் குழந்தை குட்டிகளின் எண்ணிக்கை, சுக சௌகரியங்கள் எல்லாவற்றையும் பற்றிப் பொதுவாகப் பேசி ஆன பிற்பாடு சிவசங்கரன் சொன்னன்: "உன் கதைகளை எப்பவாவதுதான் பத்திரிகைகளில் பார்க்கிறேன்" என்று.

"ஆமாம்; எப்பவாவதுதான் ஏதாவது எழுதுகிறேன்" என்றன் ராஜா.

"ஏன் அதிகம் எழுதக் கூடாதோ? எழுதலாமே; பத்திரிகைகள்தாம் அதிகம் இருக்கின்றனவே!"

"பத்திரிகைகளும் அதிகந்தான். எழுதுகிறவர்களும் அதிகந்தான்" என்றன் ராஜா.

"ஆனலும் உன்னைப் போன்ற எழுத்தாளன்......"

"இதோ பார், சங்கரா! ஒரு விஷயம். நான் எழுதுவது யாருக்குப் பிடிக்கிறது என்கிறய்? யாருக்குப் புரிகிறது என்கிறய்?" என்றன் ராஜா.

"நீயாகச் சொல்லவே, நான் சொல்கிறேன்; கோபித்துக் கொண்டு விடாதே!" என்றன் சிவசங்கரன்.

"சொல்லு."

சிவசங்கரன் சற்றுத் தயங்கினன்; பிறகு சொன்னன்: "நான் கூட உன்னைச் சந்திக்கும்போது கேட்க வேண்டும் என்று நினைத்தேன்." ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லி,

"அந்தப் பத்திரிகையில் உன் கதை ஒன்றைப் படித்தேன். அதில் பல விஷயங்கள் முதல் தடவை படிக்கும்போது எனக்கே புரியவில்லை. நான் இரண்டாவது தடவை படித்துப் பல விஷயங்களைத் தெளிவாக்கிக்கொண்டேன். சாதாரண மாகப் பத்திரிகை படிப்பவர்கள் இரண்டாவது தடவை படிப் பார்களா? அதுவும் தெளிவு இல்லாததை இரண்டாவது தடவை படிப்பார்களா?

ராஜா பதில் சொல்லவில்லை. ஓர் அசட்டுச் சிரிப்புடன் உட்கார்ந்திருந்தான்.

சிவசங்கரன் தொடர்ந்து சொன்னான்: "அந்தப் பத்திரி கையின் அதே இதழில் உள்ள மற்ற விஷயங்களையும் வேலை மெனக்கெட்டுப் படித்துப் பார்த்தேன். உன் கதை அந்தப் பத்திரிகையில் மற்ற விஷயங்களுடன் பொருந்தவில்லை என்று தான் எனக்குத் தோன்றிற்று."

ராஜா சிரித்தான். அந்தச் சிரிப்பு, துக்கம் நிறைந்த சிரிப் பாகத் தோன்றியது சிவசங்கரனுக்கு. "நானே வாழ்க்கையில் அவ்வளவாக மற்ற மனிதர்களுடன் பொருந்தாத மனிதனாகி விட்டேன்! என்னுடைய வாழ்வில் நான் பொருந்தாதவன். என் எழுத்தும் என் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந் திருக்கிறது" என்றான் ராஜா.

"உன் அப்பாவைப் பார்த்தேன் நடுவில் ஒருதரம்" என்றான் சிவசங்கரன்; பேச்சை மாற்றுகிற உத்தேசத்துடன்.

"அப்படியா! அப்பா சொல்லவே யில்லையே."

"அப்பா சௌக்கியந்தானே?"

"சௌக்கியந்தான். உன் அப்பா..."

"என் அப்பா இறந்து பதினெட்டு மாசங்கள் ஆகிவிட் டன" என்றான் சிவசங்கரன்.

"அடாடா அப்படியா? எனக்குத் தெரியாதே!" என் றான் ராஜா. என் அப்பாவுக்கு இப்போது எழுபதாகிவிட்டது. உன் அப்பாவுக்கும் எழுபதிருக்கும் இல்லையா?

"அவர் இறக்கும்போது அறுபத்து ஒன்பது" என்றான் சிவசங்கரன்.

"பாவம்! அவரும் ரொம்பவும் கஷ்டப்பட்டார். நான் 1940-ல் பார்த்ததுதான். அதற்குப் பிறகு அவரைப் பார்க்க வில்லை. அப்போது தன் பிள்ளையைப்பற்றி ரொம்பவும் துக்க மாக என்னிடம் குறை கூறிக்கொண் டிருந்தார்" என்றான் ராஜா.

"ஆனால் அவர் இறக்கும்போது அவருக்கு ஒரு குறையு மில்லை. மிகவும் சந்தோஷத்துடன்தான் இறந்து போனார்" என்றான் சிவசங்கரன்.

"அதைக் கேட்க எனக்கும் சந்தோஷந்தான்" என்றான் ராஜா.

"ஆமாம் தாம் ஆயுள் முழுவதும் கஷ்டப்பட்டுச் சேர்த்த சொத்தை ஆறு வருஷங்களில் அழித்துவிட்ட அதே பிள்ளை ஏழெட்டு வருஷங்களில் அதைப்போல நாலு மடங்கு சம்பா தித்து விட்டான் என்று அவருக்குப் பரம திருப்தி. 'என் பிள்ளையைப் போலுண்டா!' என்று பெருமையுடன்தான் செத்தார்." என்றான் சிவசங்கரன்.

"ரொம்பவும் திருப்தி எனக்கு, இதைக் கேட்பதற்கு" என்றான் ராஜா.

"தன் பிள்ளை சின்னக் கார் வாங்கி இரண்டு வருஷம் ஓட்டி விட்டு, அதை விற்றுப் பெரிய கார் வாங்கி ஓட்டத் தொடங் கிய பின்தான் இறந்தார்" என்றான் சிவசங்கரன். அதை அவன் தன் பெருமைக்காகக் கூறவில்லை. மிகவும் சாதாரண மாக அடக்கமாகத்தான் கூறினான்.

ராஜா மௌனமாக இருந்ததைக் கண்டு சிவசங்கரன் சொன் னான். "நான் மிலிட்டரி காண்டிராக்டுகள் எடுத்தேன். ஏதோ எப்படியோ பணம் சேர்ந்தது. ஜாக்கிரதையாக விட்டுவிடா மல் பார்த்துக்கொண்டு விட்டேன்" என்றான் சிவசங்கரன்.

தற்பெருமையாக இதுவும் சொன்னான். "என் தகப்பனார் நாலுவருஷங்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தார்."

ராஜா ஒரு விநாடி யோசித்து விட்டுச் சொன்னான். "இப்போதிருக்கிற நிலைமையில், என் தகப்பனார் சந்தோஷத்துடன் இறப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை."

பிறகு நண்பர்கள் இருவரும் பழசு புதுசு எல்லாவற்றையும் பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சிவசங்கரன் விடை பெற்றுக்கொண்டு கிளம்பும்போது ராஜா அவனுடன் பேசிக்கொண்டே வெளியே வந்தான். வெளியே நின்றது உண்மையிலேயே பெரிய கார்தான். சிவசங்கரனுடைய தகப்பனார் உண்மையிலேயே சந்தோஷமாகத்தான் இறந்திருப்பார் என்று ராஜாவுக்குத் தோன்றியது.

# பாத ஸரம்

வழக்கத்துக்கு மாருக அன்று ரெயிலில் சிதம்பரத்திலேயே கூட்டமாகத்தான் இருந்தது. வழக்கத்துக்கு மாருக நானும் ராஜியையும் பாப்பாவையும் அழைத்துக்கொண்டு கிளம்பியிருந்தேன். இந்த வண்டிக்கு இப்படிக் கூட்டமாக இருக்குமென்று தெரிந்திருந்தால், நான் முந்திய வண்டிலேயே கிளம்பியிருப்பேன்; அல்லது அடுத்த மெயிலுக்கும் போயிருக்கலாம். எனக்கு எவ்விதமான அவசரமும் இல்லை.

ஆனல் கிளம்பியாகிவிட்டது. திரும்புவது சரியல்ல. வண்டியில் ஏறிக்கொண்டோம். அதிகக் கூட்டமில்லாத இரண்டாம் வகுப்பு வண்டியில் ஸீட்டுக்கு நாலு பேர் உட்கார்ந்திருந்தார்கள். யாரும் நகர்ந்து இடம் தருகிற மாதிரியும் முதலில் தோன்றவில்லை.

“இத்தனை கூட்டமாக இருக்கும் என்று தெரிந்திருந்தால், மூன்ரும் வகுப்பு டிக்கட்டே வாங்கி யிருக்கலாமே!” என்ருள் ராஜி.

நான் அநாவசியமாக அதிகச் செலவு செய்கிறேன் என்பது என் மனைவியின் அபிப்பிராயம். அதற்கு மாற்ருக அவசியம் கிடைத்த போதெல்லாம் செட்டாகப் பேசிவிட வேண்டியது தன் கடமை என்று அவள் எண்ணி இப்படிப் பேசுவது வழக்கமாகிவிட்டது.

“கூட்டமாக இருந்தால்தான் என்ன? ஒருமணி நேரம் தானே! மாயவரத்தில் இறங்கி வேறு வண்டி மாற்றவேண்டும்” என்றேன் நான்.

கையிலிருந்த பையை ஆசனத்துக் கடியில் வைத்தேன்.

"இப்போதெல்லாம் கூட்டமில்லாமல், சௌகரியமாகப் போகவேணுமானால் முதல் வகுப்பில்தான் போகவேணும்" என்றார் வண்டியில் சௌகரியமாக உட்கார்ந்திருந்த ஒருவர்.

"தாங்க்ஸ்" என்று சொல்லிக்கொண்டே, இந்தப் புத்திமதி கூறிய மனிதர் யார் என்று திரும்பிப் பார்த்தேன். எங்கேயோ பார்த்த முகமாகத்தான் தோன்றியது. ஆனால் எங்கே என்றுதான் என்னால் நிச்சயிக்க முடியவில்லை.

அவர் ஓர் ஆசனத்தில் கிட்டத்தட்டப் பாதி இடத்தை அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருக்கு வயசு நாற்பதுக்கும் அதிகமிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவருடைய நடை உடை பாவனைகள், அலங்காரங்கள் எல்லாம் பதினாறு வயசு தாண்டிய பையனுடைய மனோபாவத்தைக் காட்டியமாதிரி யிருந்தன. அவருடைய சட்டை, கதர்ச் சட்டைதான். ஆனால் அதில் மாட்டியிருந்த பொத்தான்களெல்லாம் வைரப் பொத்தான்கள். வலது கையில் நவரத்தினங்கள் இழைத்த வீரச் சங்கிலி, இடது கையில் தங்கக் கைக்கடியாரம், தங்கச் சங்கிலியில் இணைத்துக் கட்டியிருந்தது; கை விரல்கள் பத்துக்குமாகப் பதினைந்து பதினாறு மோதிரங்கள். அவர் கையை அசைக்காமல் உட்கார்ந்திருக்கும்போதே பச்சையும் நீலமும், சிவப்புமாக டால் வீசின. கழுத்திலே ஏழெட்டுப் பவுனாவது இருக்கும், மைனர் செயின்; முகப்பிலே ஏழெட்டு வைரம். கறுப்பு நெற்றிப் பரப்பிலே பளீரிட்ட வெள்ளைச் சந்தனப் பொட்டு; அந்தப் பொட்டில் வைரம், தங்கம் ஏதாவது பதித்திருந்ததா என்பதை என்னால் நிச்சயிக்க முடியவில்லை. கண் கூசிற்று. வாய்ப் பற்களிலும் கோடை இரவு வானத்தில் நட்சத்திரங்கள் போல் தங்கம் அங்கங்கே ஒளி வீசியது.

"வீட்டிலேயும், தன் ஆஸ்தியில் ஒரு பகுதியையாவது விட்டுவிட்டு வந்திருப்பார் இவர்; இல்லையா? என்று என்னால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

எதிர் ஆசனத்திலிருந்த ஒருவர் இதற்குள் எழுந்து எங்களுக்கு இடம் கொடுத்தார். நான் ஏதோ முணுமுணுத்ததற்கு,

''பரவாயில்லை; நான் கொள்ளிடம் வரையில்தான் போகிறேன்'' என்றார் அவர். தந்த இடத்தில் நெருக்கியடித்துக்கொண்டு நானும் ராஜியும் பாப்பாவும் உட்கார்ந்துகொண்டோம்.

''நம்ப ஆத்திலே இருக்காப்லே இங்கேயும் சின்ன 'பான்' இருக்கே?'' என்றாள் பாப்பா உயரச் சுற்றிக்கொண் டிருந்த மின்சார விசிறியைப் பார்த்து.

''பேசாதிரு!'' என்று பாப்பாவை அதட்டினாள் ராஜி.

''ஏண்டி! இங்கே எல்லாம் பேசப்படாதா?'' என்று கேட்டாள் பாப்பா.

இதற்கு ராஜி பதில் சொல்லுமுன் வண்டிக்குள் ஒரு காலேஜ் மாணவி வந்தாள். அவள் காலேஜ் மாணவியாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சிதம்பரத்தில் இப்படி எல்லாம் அலங்காரமாக வேறு யார்? அவள் வண்டிக் குள் வந்ததே அலங்காரமாகத்தான் இருந்தது. அவளுடைய பெட்டி, படுக்கை முதலியனவும் - உபயோகமாகிற சாமான் களோ அல்லவோ - மிகவும் அலங்காரமாகத்தான் இருந்தன.

அந்தக் காலேஜ் பெண்ணைப்பற்றி விவரமாக வர்ணனை செய்யவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றே எண்ணு கிறேன். இந்தக் காலத்தில் எல்லா ஊர்களிலும், எல்லாருக்கும் தான் காலேஜ் மாணவிகளின் உருவம் பழக்கமான காட்சி யாகிக்கொண் டிருக்கிறதே.

வண்டியில் வேறு யாரும் ஸ்திரீகள் இல்லாததால் என் மனைவி (பாவம்! அவள் கொஞ்சம் கர்நாடகந்தான்!) அந்தப் பெண் தனக்குப் பக்கத்தில்தான் வந்து உட்காருவாள் என்று எண்ணினாள். ஓரத்தில் அவளுக்கு இடம் விட்டு நகர்ந்து கொண்டாள்.

ஆனால் ராஜி ஒதுங்கி நகர்ந்துகொண்டதைக் கவனிக்காத வள் மாதிரியே இருந்துவிட்டாள் அந்தக் காலேஜ் பெண். எதிர் ஸீட்டில் உட்கார்ந்திருந்த நவரத்தின கசிதமான பெரிய மனித

ரைப் பார்த்து, "எக்ஸ்க்யூஸ்மீ! எனக்குக் கொஞ்சம் இடம் தரேளா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

நவரத்தின மனிதர் சற்றுப் பதட்டமாகவே நகர்ந்து இடம் கொடுத்தார். அவருக்கும் அந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த மற்றவர்களுக்கும் இடையில் நாஸூக்காக ஸீட் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டாள் அந்தப் பெண். மற்றவர் களும் சற்றுப் பரபரப்புடனேயே நகர்ந்துகொண்டார்கள்.

சிதம்பரம் ஸ்டேஷனை விட்டு ரெயில் கிளம்பியது. ராஜி அந்த மாணவியை விட்டுக் கண்களை எடுக்காமல் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது எனக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தது. ராஜி கர்நாடகமாயிருப்பது பற்றி எனக்குச் சிறிதும் ஆக்ஷேபம் கிடையாது; சற்றுப் பெருமைகூட என்றுதான் சொல்லவேண் டும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவள் பிறத்தியார் கவனிக் கும்படியாக நடந்துகொண்டு விடுவாள். காலேஜ் பெண்கள் என்கிற ஜாதியையே பார்க்காதவள்போல அவள் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது எனக்குப் பிடிக்கவில்லை.

"அவள் கவனத்தைத் திருப்புவதற்காக நான் சொன் னேன்: "அதோ தெரிகிறது பார், அதுதான் சிவபுரிக் கோயில்" என்று.

"அதுவா?" என்றாளே தவிர ராஜி, நான் சுட்டிக்காட்டிய பக்கம் பார்க்கவே இல்லை.

பாப்பா மட்டும் நான் காட்டிய கோபுரத்தைப் பார்த்தாள். பிறகு, "அவாத்து சரோஜா மாதிரி யிருக்கா அப்பா" என்றாள் உரக்க.

"இந்தாடி!" என்று பாப்பாவை அதட்டினாள் ராஜி.

"அம்மாவுக்குப் பெண்தானே" என்றேன் நான். பிறகு, "போக்கிரி!" என்று பாப்பாவை அதட்டினேன்.

ஆனால் என் அதட்டல் முழுக் கோப அதட்டல் அல்ல. அதில் கொஞ்சம் பெருமையும் கலந்திருந்தது. நாலு வயசு

நிரம்பாத இந்தக் குழந்தைதான் எத்தனை விஷயங்களைக் கவனித்து மனசில் வைத்துக்கொண் டிருந்தாள்!

சிதம்பரத்தில் நாங்கள் குடியிருந்த தெருவில் ஒரு மாசத்துக்கு முன், எங்கள் வீட்டுக்கு நாலைந்து வீடுகள் கிழக்கே ஒரு வீட்டில் புதுசாக ஒரு குடும்பம் வந்து குடியேறியது. அந்தக் குடும்பத்தின் நடையுடை பாவனைகள், போக்குவரத்து எல்லாம் ஒரு தினுசாக இருப்பதாகத் தெருவார் சில காலம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு நிச்சயமாகிவிட்டது. அந்தக் குடும்பத்துப் பெண்கள் உலகத்தின் மிகவும் பழமையான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் என்பது தெளிவாகிவிட்டது. அந்தக் குடும்பத்தின் இன்றைய, 'பொருளாதார நம்பிக்கை'தான் பாப்பா சொன்ன சரோஜா.

பாவம்! பாப்பாவுக்கு என்ன தெரியும்? இந்த மாதிரி விஷயங்களில் யார் காதிலும் விழும்படியாக எதுவும் பேசக்கூடாது என்று! ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த சரோஜாவைப் பற்றிப் பாப்பா பேசினாலும் பாதகமில்லைதான். எங்கள் தெரு சரோஜாவைப்பற்றி அந்தக் காலேஜ் மாணவிக்கு என்ன தெரிந்திருக்கப் போகிறது?

ஆனால் தெரிந்திருந்தால்தான் என்ன? இந்த நாட்களில் அதையெல்லாம் படித்தவர்கள் பொருட்படுத்துவதுதான் கிடையாதே.

ரெயில் வல்லம்படுகையில் நிற்காமல் வேகமாகவே சென்றது. "சின்ன ஸ்டேஷனிலெல்லாம் இந்த வண்டி நிற்காது" என்றேன் நான், என் மனைவியின் கவனத்தைச் சற்றுத் திருப்புவதற்காக.

"அப்படியானால் மாயவரம் சீக்கிரமே வந்துவிடும்" என்றாள் ராஜி. அவள் குரலில் வருத்தம் தொனித்தது.

நவரத்தின ஆசாமி ஆங்கிலத்தில் அந்தப் பெண்ணைக் கேட்டார். "அண்ணாமலைச் சர்வகலாசாலையில் படிக்கிறேளா?"

"ஆமாம்; ஆனர்ஸ் கடைசி வருஷம் படிக்கிறேன்" என்ருள் அந்தப் பெண்.

"என்ன ஸப்ஜெக்ட்?"

"சரித்திரம்" என்று சுருக்கமாகவே பதில் அளித்தாள் மாணவி.

காலேஜில் படிக்கிற தேவிகளுக்கும் சினிமாவில் நடிக்கிற லக்ஷ்மிகளுக்கும் கடவுள் ஏன்தான் தனியாக, பிரத்தியேகமாக ஒரு பொய்க்குரல் அளித்திருக்கிருரோ என்கிற தத்துவ விசாரத்தில் ஈடுபட்டேன் நான். தத்துவ விசாரத்துக்குத்தான் முடிவே கிடையாதே!

"உங்களுக்கெல்லாம் அதுக்குள்ளாகவே விடுமுறை ஆரம்பமாகிவிட்டதா?" என்று கேட்டார் நவரத்தின ஆசாமி.

காலேஜ் பெண் பதில் சொல்லுமுன் ரெயில் கொள்ளிடத்துப் பாலத்தில் ஓடத்தொடங்கியது. அந்தச் சப்தத்தில் பேச்சு சாத்தியமில்லை.

கொள்ளிடம் ஸ்டேஷனில் வண்டி நின்றதும் எங்கள் வண்டியிலிருந்து நாலைந்து பேர் இறங்கிவிட்டார்கள். இப்பொழுது வண்டியில் சற்றுச் சௌகரியமாக இடம் இருந்தது. எல்லோரும் நகர்ந்து உட்கார்ந்துகொண்டோம்.

கொள்ளிடத்தில் கால் மணி நின்றுவிட்டு ரெயில் கிளம்பியதும் அந்தக் காலேஜ் மாணவி அந்த நவரத்தின ஆசாமியின் கேள்விக்குப் பதில் சொன்ருள். "லீவு இன்னும் பதினைந்து நாள் இருக்கு. நான் இரண்டு நாள் லீவு எடுத்துண்டு தஞ்சாவூர் வரையில் போகிறேன்" என்ருள்.

இதைச் சொல்லிக்கொண்டே அவள் ஸீட்டில் சாய்ந்துகொண்டு கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

மிகவும் ரகசியமான குரலில் ராஜி சொன்ருள். "இத்தனை அலங்காரத்துக்கும் மேலே, காலிலே பாத ஸரம் போட்டிண்டிருக்காளே! அழகாத்தான் இருக்கு!" என்ருள்.

ராஜி சொல்லுகிறவரைக்கும் நான் கவனிக்கவில்லை, அந்தப் பெண் காலில் பாத ஸரம் அணிந்திருந்ததை. இப்பொழுது பார்த்தேன். எனக்கு என்னவோ, பாத ஸரம் அணிந்துள்ள கால்களுக்கு அழகு கூடியிருப்பதுமாதிரிதான் தோன்றுகிறது! ராஜி அப்படி எண்ணவில்லை என்று தோன்றியது. "அதுவும் ஒரு அழகாகத்தான் இருக்கிறது" என்றேன்.

"எந்த நாகரிகத்திலே சேர்த்தியாம் அது?" என்று கேட்டாள் ராஜி.

"என்னைக் கேட்டால்......?" என்றேன் நான், தப்பித்துக் கொள்கிற மாதிரியில்.

"நான் கூடப் போட்டிண்டிருக்கேனே காலில், கொலுஸு" என்றாள் பாப்பா. தன் காலை நீட்டிக் காட்டினாள்.

அந்தக் காலேஜ் மாணவி பாப்பாவைத் திரும்பிப் பார்த்தாள்; சிரித்தாள். பாப்பா வெட்கத்துடன் தன் அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

"இங்கே வாயேன், என்கிட்ட" என்று கூப்பிட்டாள் அந்தக் காலேஜ் பெண்.

பாப்பா தன் வெட்கத்தைச் சமாளித்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தாள், சொன்னாள்: "நான் உன்கிட்ட வர மாட்டேன். எங்காத்து லீலா கிட்டத்தான் போவேன்."

"என் பேரும் லீலாதான், வாயேன்" என்றாள் அந்தக் காலேஜ் மாணவி. தன் பெயர் லீலா என்று நாஸுக்காகத் தெரிவித்துக்கொண்டாள் அவள் என்று எனக்குத் தோன்றியது.

"அவள் பேரும் லீலாதானும் அம்மா" என்றாள், பாப்பா அவள் அம்மாவிடம்.

"கூப்பிடறாளே போயேன்" என்றாள் ராஜி.

"நான் அப்பா கிட்டத்தான் உட்காந்துப்பேன்" என்று என் மடியில் தாவி உட்கார்ந்துகொண்டாள் பாப்பா.

நவரத்தின ஆசாமி கேட்டார்: "தஞ்சாவூரில்......"

"எங்கப்பாவுக்கு மாத்தலாயிருக்கு. பார்த்துவிட்டு வரப் போறேன்" என்ருள் லீலா.

"உங்கப்பா என்ன வேலையிலிருக்கிருர்?" என்று விடாமல் கேட்டார் நவரத்தின ஆசாமி.

"மெடிகல் சர்விஸிலிருக்கிருர்" என்ருள் லீலா.

இந்த மனிதனின் பேச்சைச் சற்று என் பக்கம் திருப்பினுல் அந்தப் பெண்ணுக்கு உதவியாக இருக்கும் என்று எண்ணி நான் சொன்னேன். "உங்களை நான் எங்கேயோ பார்த்திருக்கிற மாதிரியிருக்கு! ஆனுல் எங்கேன்னுதான் தெரியவில்லை" என்றேன்.

"நீங்க தெரிஞ்சுக்கல்லே என்கிறது எனக்கும் தெரிகிறது" என்ருர் அவர்.

அவரைத் தெரிந்துகொள்ளாதது என் பிசகு என்று அவர் சுட்டிக் காட்டியமாதிரி தோன்றியது. என்னைத் தெரிந்துகொண்டவர் மாதிரியும் பேசினுர் அவர். நான் இதைப்பற்றி யோசித்துக்கொண் டிருக்கும்போது ரெயில் சீர்காழியில் நின்றது.

சீர்காழி பிளாட்பாரத்தில் ஏதோ அல்லோலகல்லோலமாக இருந்தது. ஒருவருடைய சட்டைப் பையிலிருந்து பர்ஸைக் களவாடிய திருடனைச் சிலர் பிடித்துப் போலீஸாரிடம் ஒப்பித்துவிட்டார்கள் என்று யாரையுமே விசாரிக்காமல் அறிந்துகொண்டோம்.

சீர்காழியைவிட்டு ரெயில் கிளம்பியதும் நான் அவரிடம் சொன்னேன்: "எனக்கு எப்பவுமே மறதி அதிகந்தான். உங்க பேரைச்சொன்னுல்......"

"மறதி என்பது சௌகரியமாக இருக்கிறது சில சமயம்" என்று கூறி நகைத்தார் அவர். பிறகு சென்னையைவிட்டுப் போக இருந்த ஒரு தமிழறிஞருக்கு நடந்த ஒரு விருந்தில் என்னைச் சந்தித்திருப்பதாக அவர் ஒரு குறிப்பாகச் சொன்னார். எனக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. அவரை அறிந்துகொள்ளாதது பிசகுதான்.

"என்னை மன்னிக்கவேணும்" என்றேன். "நாராயண செட்டியாரை நான் உடனே தெரிந்துகொள்ளாதது என்மேல் பிசகுதான்" என்றேன்.

"இப்பவாவது ஞாபகம் வந்ததே?" என்றார் நாராயண செட்டியார்.

உண்மையிலேயே நாராயண செட்டியார் பெரிய மனிதர் தான். நவகோடியில்லாவிட்டாலும் நல்ல சொத்துள்ளவர். கலையிலும் நல்ல ஈடுபாடுள்ளவர்.. கலையை விட அதிகமாகக் கலைஞர்களிடம் ஈடுபாடுள்ளவர். கலைஞர்களிலும், பெண் கலைஞர்களிடத்து நிரம்ப அன்புள்ளவர் என்பது அவரைப் பற்றிய பிரசித்தமான ரகசியம். சமீபத்தில் கூட அவர் பெயர் பத்திரிகைகளில் நிறைய அடிபட்டது; ஒரு ஜீவனாம்ச வழக்கு விஷயத்தில்.

வைத்தீசுவரன் கோயில் கோபுர தரிசனமாயிற்று, ரெயிலிலிருந்தபடியே. என்னையும் அந்தக் காலேஜ் மாணவியையும் தவிர அந்த வண்டியிலிருந்த மற்றவர்களெல்லோரும் கைவிரல்களால் தங்கள் கன்னங்களைத் தொட்டுக்கொண்டு, வைத்திய நாத சுவாமியிடம் தங்களுக்குள்ள பக்தியை வெளியிட்டுக் கொண்டார்கள்.

ரெயில் வைத்தீசுவரன் கோயிலில் நின்றுவிட்டுக் கிளம்பிய பிறகுதான் நான் கவனித்தேன். அந்தக் காலேஜ் மாணவி நாராயண செட்டியார் பெயரைக் கேள்விப்பட்டதிலிருந்து ஒரு மாறுதல் அடைந்திருந்த மாதிரி தோன்றிற்று எனக்கு. என்ன மாறுதல்? எப்படி மாறுதல்? ஏன் மாறுதல்? எனக்குப் புரியவில்லை.

ஆனல் ஒன்று நிச்சயமாயிற்று எனக்கு. அந்தக் காலேஜ் மாணவி லீலாவும் சமீபத்திய பத்திரிகைகளில் நாராயண செட்டியாரின் பெயரைப் பார்த்திருக்கவேண்டும் என்பது நிச்சயமாயிற்று. சற்று விரஸமான விஷயம். அதையும் கூடியவரையில் விரஸமாகவே பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. பத்திரிகைகள் பேரில் பிசகா என்ன? விரஸமான விஷயங்களை விரஸமான பாஷையில் படிக்க விரும்புகிறவர்கள்தாமே இன்று நம்மிடையே அதிகம் பேர் இருக்கிற மாதிரி இருக்கிறது!

ரெயில் ஆனதாண்டவபுரம் ஸ்டேஷனில் நிற்காமல் தாண்டிக்கொண்டிருக்கும்போது, அந்தப் பெண் லீலா தானகவே நாராயண செட்டியாரிடம் சொன்னள்! "எங்கப்பா பெயர் காப்டன் ஸ்ரீநிவாஸன்."

"அப்படியா?" என்றார் நாராயண செட்டியார். பிறகு, "இந்த ரெயில் தஞ்சாவூருக்கு எத்தனை மணிக்குப் போகிறது" என்று கேட்டார்.

"ஒன்பதரைக்கெல்லாம் போய்விடும்" என்றேன் நான்.

"இப்பொழுதெல்லாம் நீங்கள் அதிகம் எழுதுகிறதில்லை போல் இருக்கே!" என்றார் நாராயண செட்டியார்.

"எங்கே எழுதுகிறது? தவிரவும் பத்திரிகைகளுக்குப் பலதரப்பட்ட ரஸமான விஷயங்கள்தாம் கிடைத்துக்கொண்டே இருக்கின்றனவே!" என்றேன் நான்.

நான் இப்படிச் சொன்னது அந்தக் காலேஜ் மாணவிக்குப் பிடிக்கவில்லை என்பதை என் ஓரக் கண்ணல் கவனித்துக்கொண்டேன். அவள் முகத்தைச் சுளித்துக்கொண்டாள்.

"நீங்கள் எது வரையில் போகிறீர்கள்?" என்று நாராயண செட்டியாரைக் கேட்டாள் லீலா.

"திருவாரூர் போகணும்" என்றார் நாராயண செட்டியார்.

"மாயவரத்தில் இறங்கிவிடறேளா?" என்றாள் லீலா. அவள் குரலில் ஏதோ கொஞ்சம் வருத்தம் தொனித்த மாதிரிப் பட்டது எனக்கு.

"நானும் திருவாரூர் வரையில்தான் போகிறேன்" என்றேன் நான்.

ரெயில் நீடூரில் நிற்காமல் தாண்டியது. "அடுத்தது மாயவரமா ?" என்றார் நாராயண செட்டியார்.

"தஞ்சாவூருக்கு எப்பவாவது வந்தால் வீட்டுக்கு வாங்களேன்" என்று நாராயண செட்டியாரை லீலா அழைத்தாள்.

இந்தத் திடீர் அழைப்பு என்னைத் திடுக்கிடச் செய்தது. இதென்ன விபரீதமாக இருக்கிறதே என்று எண்ணினேன் நான். நாராயண செட்டியாரையும் கூடத்தான் திடுக்கிடச் செய்தது இந்த அழைப்பு என்று எனக்குத் தோன்றியது. திரும்பி என்னைப் பார்த்தார். பிறகு, லீலாவிடம், "அதற்கென்ன ? தஞ்சாவூர் வந்தால் வருகிறேன்" என்றார்.

பேச்சை மேலே தொடர இஷ்டப்படாதவர் போல நாராயண செட்டியார் எழுந்து ஒரு டவலைக் கையில் எடுத்துக் கொண்டு முகம் கழுவிக்கொள்ளச் சென்றார். மாயவரம் ஜங்ஷனில் ரெயில் நின்ற பிறகுதான் அவர் வெளியே வந்தார்.

மாயவரத்தில் இறங்கித் திருவாரூர் ரெயிலைத் தேடிக் கொண்டு போகும்போது நான் ராஜியைக் கேட்டேன். பாத ஸரம் என்ன ? அநாகரிகமான நகையா ?"

"அநாகரிகம் என்று சொல்லவில்லை. மற்றதெல்லாம் நாஸூக்கும் நாகரிகமுமாக இருக்கச்சே, பாத ஸரத்தைப் பார்த்ததும் எனக்கு வேடிக்கையாக இருந்தது."

மாடிப்படிகள் ஏறத் தொடங்கும் வரையில் மௌனமாக இருந்துவிட்டு நான் சொன்னேன். "பாத ஸரம் என்பது ஒரு சின்னம். பெண்களைப் பூமியுடன் பிணைக்கும் ஒரு தத்துவம்" என்றேன்.

"அப்படி என்றால்......?"

"ரொம்ப ரொம்பப் படிக்கிற பெண்களுக்கு இறக்கை முளைத்துப் பறந்து போய்விடாமல் இருப்பதற்காக, அவர்களைப் பூமியுடன் பிணைக்கும், சங்கிலி இந்தப் பாத ஸரந்தான்."

“விலங்கு மாதிரிதான் இருக்கு அது” என்றாள் ராஜி.

மாடிப்படிகள் இறங்கும்போது நான் ராஜியைக் கேட்டேன். ‘கடைசியாக அந்தப் பெண் நாராயணசெட்டியாரைத் தஞ்சாவூருக்கு அழைத்தாளே......”

“அழைத்தாளா? நான் கவனிக்கவில்லையே!” என்றாள் ராஜி.

திருவாரூர் வண்டியில் ஏறிக்கொண்டோம். “அந்தச் செட்டியார்தான் எத்தனை வைரம் போட்டிண்டிருக்கார்? அடேயப்பா! ஆளை அழிச்சால் இரண்டு மூணு லக்ஷம் தேறும் போல் இருக்கு” என்றாள்.

நான் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். நவரத்தின ஆசாமி நாராயணசாமி செட்டியார், அவர் உடலின் பல பாகங்களிலிருந்தும் ஒரே சமயத்தில் டால் வீச மாடிப்படிகள் ஏறி வந்துகொண்டிருந்தார்.

“அதென்னவோ, ராஜி, நம் பாப்பாவைப் படிக்கவைக்கப் படாதுன்னுதான் எனக்குத் தோணறது?” என்றேன் நான்.

★

# கலைமகள் வெளியீடுகள்

## குங்குமச் சிமிழ் விலை ரூ. 2-0-0

சிறுகதைத் தொகுதி - ஆர்வி

"இன்று தமிழ்நாட்டில் சுயமாகவும் சுவையாகவும் சிறு கதைகள் எழுதும் ஒரு சிலருள் ஸ்ரீமான் 'ஆர்வி' அவர்கள் சிறப்புற விளங்குகிருர். அவர் தமிழ் மக்களின் நடையுடை பாவனைகள், உள்ளத்துணர்ச்சிகள், நெகிழ்ச்சிகள் ஆகியவற்றை ஊடுருவி நோக்கியிருப்பவர். அவருடைய நோக்கில் பட்டவை யாவும் அவர்தம் கற்பனை, உணர்ச்சிகள் ஆகிய உலையில் புத்துரு வும் புதுமெருகும் பெற்று இனிய இலக்கிய வடிவம் பெறுகின் றன. அவருடைய இனிய நடை வேறு அவற்றிற்குச் சுவையூட்டு கின்றன. இந்தத் தொகுதியிலுள்ள பன்னிரண்டு கதைகளும் இவ்வண்ணமாகவே இனிமையுடன் விளங்குகின்றன....ஒவ் வொரு கதையையும் ஜீவனும் உணர்ச்சியும் ததும்பும் பாத் திரங்களின் மூலம் துடிக்கும் ஜீவ நடையில் சித்திரிக்கிருர் ஆர்வி. ஆர்வி இயற்கையாக எழுதுகிருர். இனிமையாக எழுதுகிருர். அவர் கலைஞர்."
—சுதேசமித்திரன்; 28-4-53.

## அணையா விளக்கு விலை ரூ. 4-0-0

நாவல் - ஆர்வி

சந்தானம் பணக்காரன், அழகன், திடசித்தன், அறிவாளி. வகுப்பைக் கடந்து அவனுடைய அன்பு, விழி வீசுகிறது. சிப்பியிலே உதித்த முத்தைப்போல உள்ளழகும் வெளியழகும் உருவெடுத்த பெண்ணரசி பாப்பா, அவனை ஆட்கொள்கிருள். அன்பு வளர்கிறது. ஆனல் ஊர் நகைக்கிறது; சுவரிலே கிறுக்குகிறது. ஆயினும் அவன் உறுதிகொண்டு அவளோடு வாழ்க்கை நடத்துகிருன். பழமையான ஆசார அநுஷ்டானங் களில் தோய்ந்த தாய் ஒரு பக்கம்; பொன்னும் மணியுமாக விளையக் காத்துக்கிடக்கும் கிராமம் ஒரு பக்கம்; இடபேதமான காதல் ஒரு பக்கம்; எதிர்ப்பு ஒரு பக்கம். இப்படிப் பல சக்தி கள் அவனை அலக்கழிக்கின்றன. நிகழ்ச்சிகள் ஓடுகின்றன. குணசித்திரம், வியங்கியமான நடை, உணர்ச்சிகளைப் போஷிப் பது, புரட்சிகரமான லட்சியவாதத்தை 'ரியலிச'த்தோடு கலவை செய்திருப்பது - இத்தனையையும் அமிதமான வெற்றி யுடன் ஆர்வி இந்த நாவலில் சாதித்திருக்கிருர். அரிய சாதனை; பெரிய சாதனை.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.**